பக்கங்கள்: இருபத்தெட்டு + 2

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 14 புதன்கிழமை (31.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 278



11 பள்ளிமுனை மீனவர்களுக்கு கடற்படையினர் கெடுபிடி



21 முருகனைச் சந்திக்க அனுமதிக்குக!



23 கடாபி குடும்பத்துடன் தப்பினர்



25 காயம் தான் பிடி தவறியதற்கு காரணம்

# இரவு நேரத்துப் பதற்றம் குடாநாட்டில் தொடர்கிறது

## அச்சுவேலியில் வாகனம் மடக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக. 31

விஷமிகள் மற்றும் அடையாளம் தெரியாத நபர்களினால் யாழ். குடாநாட்டில் ஆங்காங்கே இரவு நேரங்களில் ஏற்படும் பதற்றம் நேற்றும் பல பகுதிகளில் ஏற்பட்டது. பொல்லுகள், தடிகளுடன் பல்வேறு இடங்களிலும் இளைஞர்கள் காவலில் ஈடுபடுவதைக் காணமுடிவதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

புத்தூர், சிறுப்பிட்டிப் பகுதியில் கடந்த சில தினங்களாக இரவு வேளைகளில் ஓடித்திரிந்து மக்களுக்கு அச்சமூட்டிய வாகனம் ஒன்றை அந்தப் பகுதி இளைஞர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு மடக்கிப் பிடித்தனர்.

கலைமதி கிராமத்தினுள் புகுந்த இந்த வாகனத்தைத் துரத்திச் சென்ற இளைஞர்கள் தாக்குதல் நடத்தி அதனை மடக்கினர் என்று கூறப்பட்டது. இதில் அந்த வாகனத்தின் முன்பக்கக் கண்ணாடிகள் நொருங்கின.

இந்த வாகனத்தில் வந்த சிலர் மூன்று தினங்களாக இரவில் மக்களின் வீடுகளின் கதவுகளைத் தட்டிவிட்டு ஓடிவிடுவர் என்று மக்கள் தெரிவித்தனர். இதனால் மக்கள் மத்தியில் பயமும் பீதியும் ஏற்பட்டிருந்தன.

பக் 27

மாட்டியது ஒன்று



புத்தூர் சிறுப்பிட்டி பகுதியில் கடந்த சில தினங்களாக ஓடித்திரிந்து மக்களுக்குப் பீதியைக் கொடுத்த கரும்பச்சைநிற வாகனத்தையும் அதன் சாரதியையும் மக்கள் நேற்றுமுன்தினம் இரவு மடக்கிப் பிடித்து, அடித்து நொருக்கிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அந்த வாகனம் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

# கைக்குழந்தையை பஸ்ஸில் விட்டு தாய் தலைமறைவு

வவுனியா, ஒக. 31

வவுனியா நகரில் பஸ் நிலையத்தில் அநாதரவாகக் கைவிடப்பட்ட ஒன்றரை மாதப் பிஞ்சுக் குழந்தை ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் குழந்தையைக் கொண்டு வந்த பெண் அதனை பஸ்ஸினுள் விட்டுவிட்டு தலைமறைவாகி விட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பக் 28



இன்று நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் இஸ்லாமிய வாசகர்களுக்கு 'உதயனின்' உளங்கனிந்த ஈதுல் பித்ர் வாழ்த்துக்கள்.

## ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற

# மூவரைத் தூக்கிலிட இரு மாதத் தடை

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஒகஸ்ட் 31

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவருக்கும் தண்டனையை நிறைவேற்ற 8 வாரங்கள் (2 மாதங்கள்) தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. இந்த உத்தரவால் தமிழ் இன உணர்வாளர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வெடிகொளுத்தியும் இனிப்புகளை வழங்கியும் அதனை அவர்கள் கொண்டாடினர். நீதிமன்ற உத்தரவு கிடைத்ததும் பேறறிவாளனின் தாயார் அற்புதம்மாள் வேலூர் சிறைக்குச் சென்று மகனிடம் விடயத்தைக் கூறினார்.

ராஜீவ் கொலை வழக்கில் பேறறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்களின் கருணை மனுக்களை இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டில் அண்மையில் நிராகரித்ததையடுத்து செப்ரெம்பர் 9ஆம் திகதி இவர்களுக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

இவர்களின் தூக்குத்தண்டனையை இரத்துச் செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதன் மீதான விசாரணை நேற்று இடம்பெற்றது.

மனுதாரர்கள் சார்பில் டில்லியைச் சேர்ந்த பிரபல மூத்த சட்டத்தரணி ராம்ஜெத்மலானி,

பக் 27

# அவசரகாலச் சட்டத்தை ஒத்த அதிகாரங்கள் ஜனாதிபதியிடம்

## புதிய வர்த்தமானி அறிவிப்பு விரைவில் என்கிறது ஐ.தே.க.



கொழும்பு, ஒக.31

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதும், அதனை ஒத்த அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்குவதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொது மக்களின் பாதுகாப்பைக் காரணம்காட்டி, நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் எங்குவேண்டுமானாலும் எச்சந்தர்ப்பத்தில் வேண்டுமானாலும் முப்படையினரைக் கடமையில் ஈடுபடுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட இருக்கின்றது என்று ஐ.தே.கவின்

பக் 27

# யாழ். நகரில் நேற்று சர்வமதப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஒக. 31

நாட்டில் வன்முறைகள் நீங்கி அனைத்து இனமக்களும் அமைதியுடனும் சகோதரத்துவத்துடனும் வாழும் சூழலை உருவாக்க வேண்டும் என்னும் தொனிப்பொருளில் நேற்று முற்பகல் சர்வமத அமைதிப் பிரார்த்தனை ஒன்று யாழ். நகரில் நடத்தப்பட்டது.

தேசிய சமாதானப் பேரவை இந்த அமைதிப் பிரார்த்தனையை ஏற்பாடு செய்திருந்தது. நகரில் உள்ள ரிம்பர் மண்டபத்தில் நடைபெற்ற

பக் 28

## ஜனாதிபதியின் நோன்பு வாழ்த்து

கொழும்பு, ஒக.31

சமாதானம், சகோதரத்துவமுடைய புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப நாம் நடவடிக்கை மேற்கொண்டபோது முஸ்லிம் சமூகம் வழங்கிய ஆதரவை இந்தப் புனித தினத்தில் விசேடமாகப் பாராட்ட வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பக் 27

அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது...

# தண்டனையைக் குறைக்கும்படி தமிழக சட்டசபையில் தீர்மானம்

## மூவரின் உயிர் காக்க ஜெயலலிதா அதிரடி

சென்னை, ஒக. 31

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று கோரி தமிழக சட்டசபையில் நேற்று திடீர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது என முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

நேற்றுக் காலை சட்டசபை கூடியதும் முதல்வர் ஜெயலலிதா பிரேரணையை முன்வைத்தார். அதனை அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஒருமனதாக ஆமோதித்து நிறைவேற்றினர்.

முதல்வர் பேசுகையில், மூன்று பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படவுள்ளமை தமிழக மக்களைப் பெரும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது என்றார்.

மக்கள், அரசியல் கட்சிகள், பல்வேறு அமைப்புகள் இந்தத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றவேண்டும் என்று கோரி வருகின்றனர்

எனவே மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்தத் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு இந்திய ஜனாதிபதியை

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்: 021-5679933, 021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இணைய முகவரி: www.uthayan.com

# பயணிகளுடன் மினி பஸ்ஸை மது போதையில் செலுத்திய சாரதி

## சாரதி அனுமதிப் பத்திரம் பறிமுதல்

தென்மராட்சி, ஓக.31

பயணிகளுடன் மது போதையில் வாகனம் செலுத்திய மினி பஸ் சாரதியின் சாரதி உரிமத்தினை 3 மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம்- கொடிகாமம் மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் மினிபஸ் சாரதி மது போதையில் வாகனம் செலுத்தியதாகக் குற்றஞ்சாட்டி கொடிகாமம் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அவரைக் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் மா.கணேசராசா 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் இரண்டு மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டு இவரின் சாரதி உரிமத்தினை 3 மாதங் கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார். (த-207)

# வீதிகள் படு மோசம்; ஊர்காவற்றுறை மக்கள் விசனம்

ஊர்காவற்றுறை, ஓக. 31

ஊர்காவற்றுறையில் பிரதான வீதிகள் திருத்தப்படாதது குறித்து இந்தப் பிரதேச மக்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக பெருமளவு மக்களின் பாவனையில் உள்ள ஊர்காவற்றுறை முகாம் வீதி, ஒழுவில் வீதி என்பனவே மிகமோசமான முறையில் சேதமடைந்து காணப்படுகிறன்றன.

இந்த வீதிகளை புனரமைத்துத் தருமாறு இந்தப்பிரதேச மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-127)

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதானவர் நேற்று விடுதலை

தென்மராட்சி, ஓக.31

பயங்கரவாதச் தடைச் சட்டதின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான சிவநாதன் அச்சுதன் என்பவர் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசாவினால் நேற்று செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

மதுபோதையில் இராணுவ வீரருடன் வாக்குவாதப் பட்டதுடன் அவரை அடித்துக் காயப்படுத்தியதாக கடந்த ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்ட பிரிவுகளின் கீழ் இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய இவர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். (த-207)




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படக்கூடிய சாத்தியம்

## இந்திய அரசின் வீட்டுத் திட்டம்

# மீள் பரிசீலனைக்காக பயனாளிகள் விவரம்

தென்மராட்சி, ஓக.31

இந்திய அரசின் 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தைச்சேர்ந்த 991 பேரின் பெயர்கள் மீள் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

780 பேர் வீட்டுத் திட்டத்துக்கும் 211 பேர் வீடுகள் புனரமைப்புத் திட்டத்துக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மீள் பரிசீலனையில் அரச உத்தியோகத்தர்கள், ஏனைய மாவட்டங்களில் வீடுகள் உள்ளவர்கள், வெளிநாடுகளில் உள்ள பிள்ளைகள் மூலம் வருமானம் பெறுபவர்கள் மற்றும் சேதமடைந்த வீடுகள் புனரமைத்தவர்கள் ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டு வன்னிப் பகுதியிலிருந்து மீளக் குடியமர்ந்தவர்கள், அதிஉயர்பாதுகாப்பு வலயத்தினால் பாதிக் கப்பட்டவர்கள், குறைந்த வருமானம் உடையவர்கள், பெண்களைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், வன்செயல்களின்போது காயமடைந்து பாதிக்கக்பட்ட குடும்பங்கள், கூடிய அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களை முன்னுரிமைப்படுத்தி இணைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

# சரசாலை - பருத்தித்துறை வீதியில் புதிதாக மதகு பாவனைக்கு திறந்து வைப்பு

தென்மராட்சி, ஓக.31

சரசாலை - பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்ட மதகு ஐந்து வருடங்களின் பின்னர் பொதுமக்கள் பாவனைக்கு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 2006 ஆம் ஆண்டு மதகு அமைப்பதற்கு வீதி வெட்டப்பட்டு ஆரம்பக் கட்டப் பணிகள் மேற்கொண்ட வேளையில் கட்டடப் பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்காலிக பாதையூடாகவே போக்கு வரத்து இடம் பெற்று வந்தன.

மதகினை திருத்தி வீதியினை பொது மக்கள் போக்குவரத்துக்கு விடுமாறு செய்திகள் வெளியாகியதையடுத்து வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மூன்று மாதங்களாகியும் பாவனைக்கு விடப்படாதது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. நேற்று முன்தினம் இந்த மதகு போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டது. (த-207)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம். 389/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.

ஆவணி 30, 2011

பங்குச்சந்தைச் சுட்டிகள்

அனைத்துப்பங்கு(ASPI) 6,879.29↑
மிலங்கா(MPI) 6,233.82↑

உரிமைமுதல் தகவல்கள்

வியாபாரப்புரள்வு(Rs.) 4,929.95Mn
பங்குகளின் அளவு(No.) 127.84Mn
வியாபாரம்(No.) 30,022

விலை அசைவுகளின் அடிப்படையில்

அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
எச்.வி.எ பூட் 56.50
மல்ரி பைனான்ஸ் 63.90
செலான் மேச்சன்(w) 1.10
களனி கேபிள் 105.00
யூனியன் கெமிக்கல் 799.00

குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஈச்சேன் மேச்சன் 2130.00
மொறிசன் 3310.00
சதோசா மோட்டார்(X) 247.00
மிறம பிச் 245.00
றெடியன் ஜெம்ஸ் 78.20

மேலதிக தகவல்கள்- www.cse.lk

# கீரிமலைக் கேணியடியில் உள்ள மலசல கூடத்துக்குக் கட்டணம்

## வலி.வடக்குப் பிரதேச சபைத் தீர்மானம்

வலி.வடக்கு, ஓக. 31

கீரிமலை கேணிப் பிரதேசத்தில் உள்ள மலசல கூடத்தைப் பயன்படுத்துபவர்களிடம் கட்டணம் அறவிட வலி.வடக்குப் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

வலி. வடக்குப் பிரதேச சபையின் முதலாவது கூட்டம் தலைவர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கீரிமலைப் பகுதிக்கு அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் நாளாந்தம் வந்து செல்கின்றனர். இவர்கள் கீரிமலைக் கேணியை அண்டிய பகுதியில் காணப்படும் ஆண்கள், பெண்களுக்கான மலசல கூடங்களை அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். ஆயினும் இந்த மலசல கூடங்கள் பராமரிக்கப்படுவதில்லை. இதனால் அவை துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரச் சீர்கேடான நிலையும் அங்கு ஏற்பட்டுள்ளது.

அங்கு பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் வருவதனால் ஒரு நாளுக்குப் பல தடவைகள் இதனைச் சுத்தம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவைகளைக் கருத்தில் கொண்டு வியாழக்கிழமை முதல் மலசல கூடத்தைப் பயன்படுத்துபவர்களிடம் சிறியதொகைப் பணத்தை அறவிடுவதன் மூலம் மலசல கூடத்தை சிறந்த முறையில் வைத்திருப்பதற்குச் சபை தீர்மானித்துள்ளது. (த-86)

# கில்லாடிப் பெண்ணுக்கு சிறை

தென்மராட்சி, ஓக. 31

35 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை ஏமாற்றிக் கையாடல் செய்த கில்லாடிப் பெண்ணுக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 5 வருடங் களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இந்தக் கில்லாடிப் பெண்ணுக்கு எதிரான வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த கில்லாடிப் பெண் தனது குற்றத்தை நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு குற்றம் இல்லாத காரணத்தால் மேற்படி தண்டனையை மாவட்ட நீதிபதி மா.கணேசராசா விதித்துத் தீர்ப்பளித்தார்.

இந்தப் பெண் நல்லூர், கொடிகாமம், பருத்தித்துறை, திருகோணமலை ஆகிய இடங்களில் தங்க நகைகளை ஏமாற்றி அபகரித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கில்லாடிப் பெண்ணுக்கு எதிராக மேலும் பல வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-207)

# நிகழ்வுகள்

### பகிரங்க கருத்தரங்கும் கலந்துரையாடலும்

கொழும்பு மாவட்ட புதிய ஜனநாயகமாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் தேசிய 'இனப்பிரச்சினையும் சுயநிர்ணய உரிமையும் அரசியல் தீர்வுத் திட்டமும், எனும் தலைப்பிலான பகிரங்கக் கருத்தரங்கும் கலந்துரையாடலும் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு தேசிய கலை இலக்கியப் பேரவையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சி.கா.செந்திவேல் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கருத்துரைகளை இ.தம்பையா வெ.மகேந்திரன் ஆகியோர் வழங்குவர். (எ-313)

### இன்னிசைப் பெருவிழா

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசக் கல்லூரியின் ஏற்பாட்டில் சர்வதேச இன்னிசைப் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இந்த நிகழ்வில் போதகர் ஆல்வின் தாமஸ் துதி, ஆராதனை, செய்தி என்பவற்றை நிகழ்த்தினார். இன்று புதன்கிழமையும் விசேட இன்னிசை நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் காலை 9 மணிக்கு ஆராதனைக் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது. (த-313)

### தெய்வீக நிகழ்வுகள்

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவையொட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றுவரும் திருவிழாக்கால தெய்வீக நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்த நிகழ்வு வரிசையில் இன்று 31 ஆம் திகதி 'சண்தம்பிக்கு முந்தை என் தும்பி' எனும் தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் சி.நவரத்தினமும், முதலாம் திகதி மஹோற்சவத்துவம் எனும் தலைப்பில் சைவப் புலவர் கு.அமுதலிங்கம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'செஞ்சொற் புனைமாலை' என்னும் தலைப்பில் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் சொற்பொழிவாற்றுவார்கள். (த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களை பொலிஸாருக்கு மக்கள் உடன் அறிவிக்காததாலேயே அவை பெருகுகின்றன

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

தென்மராட்சி, ஒக.31

நாட்டில் குற்றச் செயல்கள் நடைபெற்றால் எந்தவொரு குடிமகனும் தடுக்க முயல்வதில்லை. அதனைத் தடுக்கும் அதிகாரம் கொண்ட பொலிஸாருக்கு கூட தகவல் கொடுப்பதில்லை. மக்களின் இவ்வாறான போக்கு நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிக்க வழி வகுக்கிறது. என கிளி., முல்லை. மாவட்டங்களில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த தெரிவித்தார்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் கடந்த 27 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெற்ற சிவில் பாதுகாப்பு குழு அமைப்பது தொடர்பான கூட்டத்தில் நீல் தளுவத்த மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு தற்போது ஒளிபரப்பாகும். தொலைக் காட்சி நிகழ்ச்சிக்கும் அவற்றுடன் சேர்ந்த விளம்பரங்களும் பிள்ளைகளின் மனோநிலையைப் பாதிபடையச் செய்கின்றன. இன்றைய காலத்தில் கள்ளத் தொடர்பு வைத் திருப்பவர்களைத்தான் கிறீஸ் பூதம் என அழைப்பர். அவ்வாறான கிறீஸ்பூதம் தற்போது அனைத்து பிரதேசங்களிலும் பரவி வருகிறது.

இதனால் கிராம மட்டத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது.

கிராமங்களில் மக்கள் தொகை குறை வாகஇருந்தாலும் அங்குள்ள அனைத்து மக்களையும் அனைவருக்கும் தெரிந்திருக்கும். கிராம மட்டத்தில் வேறொருவர் அங்கு சென்றால் நிச்சயமாக அங்குள்ளவர்களால் இனங்காணப்பட்டு விசாரிக்கப் படுவார். அவர்களின் செயற்பாடுகள் சந்தேகமாக இருப்பின் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்க வசதியாக கிராம சிவில் பாதுகாப்பு குழுவினர் முன் வருவர் இதனாலேயே கிராம சிவில் பாதுகாப்புக் குழுவில் கிராம ஆலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், முன்னாள் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர், ஊர்ப் பிரமுகர்கள் ஆகியோருடன் கிராமத்தில் உள்ள கிளைகள் கழகங்கள், விளையாட்டுக்கழகங்கள் போன்றவற்றின் அங்கத்தவர்களையும் இந்தக் குழுவில் இணைக்கவுள்ளோம்.

நாட்டில் குற்றச் செயல்களைக் குறைக்க பல்வேறு பொலிஸ் பிரிவுகள் உள்ளன. உங்கள் பகுதியில் இடம் பெறும் குற்றச்செயல்களை உங்கள் பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு முறையிடலாம். அவர் நடவடிக்கை எடுக்கத் தவறின் மாவட்டத்தில் உள்ள உயர் அதிகாரியிடம் முறையி டலாம். அவரும் நடவடிக்கை எடுக்கத்தவறின் அடுத்த நிலையில் உள்ள மாகாண அதிகாரியிடம் முறையிடலாம். இது உங்களது உரிமை. இதில் பழிவாங்கும் நிலை ஏற்படு மென அச்சம் கொள்ள வேண்டாம் என்றார்.

(எ-207-131)

# ஐ.தே.கட்சியின் 65 ஆவது மாநாடு

கொழும்பு, ஒக. 31

ஐக்கிய தேசியக் கட்சியின் 65ஆவது மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடத்தப்பட உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் கட்சியின் எதிர்காலம் தொடர்பாக சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ளன என்றும் அவர் கூறினார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிப்பாதைக்குக் களம் அமைத்துக் கொடுத்த கட்சியின் காலஞ்சென்ற முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு இதன்போது கௌரவம் அளிக்கப்படவுள்ளது. கட்சியின் தற்போதைய சிரேஷ்ட உறுப்பினர்களும் இந்த மாநாட்டின் போது கௌரவிக்கப்படவுள்ளனர்.

# உலகம்வாழ் இஸ்லாமிய பக்தர்களின் சம உரிமை தினம்

## பிரதமர் வாழ்த்துச் செய்தி

கொழும்பு, ஒக.31

உலகம்வாழ் இஸ்லாம் பக்தர் களின் சம உரிமையின் தினம் அதாவது, ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை முன்னிட்டு வாழ்த் துச் செய்தியை வெளியிடுவ தில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

-இவ்வாறு பிரதமர் டி.எம். ஜயரட்ண விடுத்துள்ள நோன் புப் பெருநாள் வாழ்த்துச் செய்தி யில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் கூறப்பட் டுள்ளவை வருமாறு:-

ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்றதன் பின்னர் ஷவ்வால் தலைப்பிறையைக் கண்டதும் கொண்டாடப்படும் நோன்புப் பெருநாள் தினத்தில் சமூகத்தில் பசியால் வாடும் ஒருவரும் இருக்கக் கூடாது என முஹம்மத் நபி (ஸல்) நவின்றுள்ளார்கள்.

நோன்பு என்பது அல்லாஹ் த ஆலாவின் கட்டளையை ஏற்று அந்தக் கட்டளைக்கு அடி பணிந்து மேற்கொள்ளப்படும் ஒரு வணக்க மாகும். ஆன்மிக வாழ்க்கைக்கு மற்றும் சௌபாக் கியமிக்க இவ்வுலக வாழ்க் கைக்கு வழிகாட்டும் நோன்பு என்ற வணக்கத்தை நிறை வேற்றிய பின்னர் உதயமாகும் பெருநாள் தினத்தை எமது பொறுப்புகளை நிறைவேற் றவும் மற்றும் நல்லெண்ண மனப்பாங்கை விருத்தி செய்யவும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சகவாழ்வுடன் மற்றும் சம உரிமையுடன் வாழ்வதற்கு வழி காட்டும் புனித அல் குர்ஆன் இறங்கிய மாதம் என்ற நோக்கிலும் கொண்டாடப்படும் இந்த ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளானது, உலகு வாழ் மற்றும் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு அவர்களது நல்ல எதிர்பார்ப்புகள் நிறைவேறும் சிறப்பான நாளாகட்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது. (சி)



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 99ஆவது பிறந்த தினம் நேற்றாகும். இதனையொட்டி பழைய நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அமரர் சௌமியமூர்த்தி தொண் டமானின் உருவச்சிலைக்கு அமைச்சர் ஆறுமுகன் தொண் டமான் மாலை அணிவித்தார்.

# நோன்பின் படிப்பினைகளை வாழ்விலும் பின்பற்றுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்துச் செய்தி

புனித அல்-குர்ஆன் அருளப்பெற்ற இம் மாதத்தில் நோன்பின் மூலம் பெற்ற படிப்பினைகளை வாழ்க்கையிலும் பின்பற்றி எமது நாட்டிலும் உலகிலும் மனிதநேயம் கொண்ட ஒரு சூழல் உருவாக இப்புனித தினத்தில் அனைவரும் ஒன்றிணைந்து பிரார்த்திப்போம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள நோன்புப் பெருநாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்று நோன்பாகும். எவரொருவர் தனது உள்ளத்தைப் பக்குவப்படுத்திக்கொண்டாரோ அவர் வெற்றிபெற்றவராவார் என இஸ்லாம் குறிப்பிடுகின்றது. இதற்கான பயிற்சியையே நோன்பு வழங்குகின்றது. நோன்பு காலத்தில் பெற்றுக் கொள்ளும் இந்தப் படிப்பினையை ஏனைய காலங்களிலும் அனு சரித்து நடக்கவேண்டும் என்பதையே நோன்பு எதிர்பார்க்கின்றது. (சி)

# மாயமான யாத்திரிகர் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக.31

இந்தியாவுக்கு புனித யாத்திரை சென்று சென்னையில் காணாமற்போன மூன்று பௌத்த யாத்திரிகளில் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதராகம் வெளிவிவகார அமைச்சுக்கு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்டவரை எவரும் கடத்தவில்லை எனவும், உடம்பில் எந்தவிதமான அடிகாயங்களும் ஏற்படவில்லை எனவும் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

தெனியாய, யட்டியந்தோட்டை, எல்ப்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே காணாமற் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# தமிழ்க் கைதிகள் கவிதை வடிவில் உருக்கமான கோரிக்கை

## இந்திய ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர்

கொழும்பு, ஒக.31

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தண்டனையை ரத்துச் செய்யும்படி கோரி இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இந்திய ஜனாதிபதிக்கு கவிதை வடிவில் உருக்கமான வேண்டுகோளொன்றை விடுத்துள்ளனர்.

அஹிம்சையை அகிலத்திற்குப் போதித்த பாரத தேசமே! எங்கள் அன்புச் சகோதரர்களின் அருமை உயிர்களைக் கழுத்து நெரித்துப் பறித்துக்கொள்ளப் போகிறாயா?

அஹிம்சையை அகிலத்திற்குப் போதித்த அண்ணல் காந்தியின் தேசத்தைக் குண்டு வீசிப் பறித்துக்கொள்ள முனைந்தவனைக்கூட மன்னித்த பாரத தேசம் எங்கள் அன்புச் சகோதரர்களை மன்னித்து விடுவித்து விடாதோ என்று நாம் ஏங்குகின்றோம்.

'காந்தியம்' மன்னிக்கத் தெரிந்ததுதானே. 'காந்தி' என்ற பெயருக்கு மன்னிப்பவர் என்கின்ற அர்த்தத்தைத்தான் நாங்கள் திரும்பவும் கேட்கின்றோம்.

காந்திகள் எல்லாம் அஹிம்சாவாதிகள் இல்லையா? மகாத்மாகாந்தி மட்டும்தான் அஹிம்சைவாதியாக இருக்கவேண்டுமா? சோனியாகாந்தியும், பிரியங்காகாந்தியும், ராகுல் காந்தியும் அஹிம்சைவாதிகளாக இருக்கக்கூடாதா?

பறவைகள் உயிர்களைப் பாதுகாக்கப்பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற பிரியங்கா காந்தி அம்மணியே உங்கள் காந்திய தேசத்தில் பலியாகப்போகும் எங்கள் பாசமிகு சகோதரர்களின் உயிர்களைக் காப்பாற்றித் தரும்படி கதறித்துடிக்கும் எங்களின் கண்ணீரின் கதறல்கள் கேட்டுக்கூட உங்கள் மனம் எங்களுக்காக இரங்கவில்லையா?

பறவைகளின் உயிர்களை விடவா மலிந்தது உங்களின் அஹிம்சைத் தேசத்தில் தமிழர்களின் உயிர்கள். அஹிம்சையின் தந்தை அண்ணல் காந்தி ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்,

எங்கள் அன்புச் சகோதரர்களின் இன்னுயிரை தூக்குக்கயிற்றைக் கொண்டு கொல்லப்போகின்ற காந்திய தேசம் உலகத்திற்கு எதனைப் போதிக்கப் போகின்றது?

அம்ஸ்டன் கண்டுபிடித்த அணுகுண்டை விட அண்ணல் காந்தி கண்டுபிடித்த அஹிம்சையே இவ்வுலகத்தில் சக்தி வாய்ந்தது என நாம் நினைப்பது தவறானதா? 'ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்லடி பெண்மணியே' என்பதை நீ எடுத்துக் காட்டவா இந்த அஹிம்சை நாட்டின் கருணையற்ற தீர்ப்பு.

தனது ஆச்சிரமத்தில் நோய் வாய்ப்பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ஒரு கன்றுக் குட்டியின் வேதனையைப் பார்த்து அண்ணல் காந்தி அதைக் கருணைக்கொலை செய்யுமாறு கூறினார்.

கருணை உள்ளம் கொண்ட அண்ணல் காந்தியின் பெயர் கொண்ட அன்னை சோனியா காந்தி, எங்கள் அன்புச் சகோதரர்களை இந்தக் கொடூர மரணத்திலிருந்து மீட்டுத்தாருங்கள்.

- இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிடமிருந்து போர்க் கப்பல்களை இந்தியக் கடற்படை கொள்வனவு செய்கிறது

## ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கையிடம் இருந்து 80 அதிவேக இடைமறிப்புப் படகுகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சு கையெழுத்திட்டுள்ளது.

இந்தியக் கடற்படையில் அண்மையில் உருவாக்கப்பட்ட சாகர் பிரஹாரி பால் என்ற சிறப்புப் படைப்பிரிவுக்காகவே இந்தப் படகுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

250 கோடி ரூபா பெறுமதியான இந்த உடன்பாடு கடந்த வெள்ளிக்கிழமை கைச்சாத்தானதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சந்தேகத்துக்கிடமான கப்பல்கள், படகுகளை வழிமறித்தல், மற்றும் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தவதற்கே இந்தப் படகுகளை இந்தியா பயன்படுத்தவுள்ளது.

மேற்படி படகுகளை இலங்கையின் சோலாஸ் மரைன் நிறுவனம் 36 மாதங்களுக்குள் கட்டிக் கொடுக்கவுள்ளது.

கடற்புலிகளின் போர்த்தந்திரங்களை அடியொற்றி இலங்கை கடற்படை உருவாக்கியிருந்த சிறப்புப் படகுப் படையணியை முன்னுதாரணமாகக் கொண்டே இந்தியா, சாகர் பிரஹாரி பால் என்ற இந்தப் படைப்பிரிவை உருவாக்கியுள்ளது.

இலங்கைக் கடற்படையின் சிறப்புப் படகு அணியைச் சேர்ந்த 42 கொமாண்டோக்கள் சில மாதங்களுக்கு முன்னர் மும்பைக்குச் சென்று இந்திய கடற்படையினருடன் தமது அனுபவங் களைப் பகிர்ந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## யுத்த காலத்தில் புலிகளுக்கு நிதியுதவி

# சந்தேக நபர்கள் 6 பேருக்கு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு

யுத்த காலத்தில் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு விடுதலைப் புலிகள் அமைப்புக்கு 100 லட்சம் ரூபா நிதி வழங்கியமை தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையில் எதிரிகளாக குற்றம் சாட்டப் பட்டுள்ளவர்கள் நீதிமன்றுக்கு ஆஜராகாமையால் சந்தேக நபர்கள் 6 பேரையும் உடனடியாக கைது செய்யும்படி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு நீதிமன்றுக்கு ஆஜராகாத சந்தேக நபர்கள் மேலும் சில சந்தேக நபர்களுடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக விடுதலைப்புலிகள் அமைப்புக்கு நிதி வழங்கியதால் இலங்கை அரசுக்கு எதிராகச் செயற்பட்டுள்ளார்கள் என்று நீதிமன்றில் இவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (வ)

## இலங்கைப் பணிப்பெண் ஜோர்தானில் மரணம்

ஜோர்தானில் பணிபுரிந்த இலங்கை பணிப் பெண்ணொருவர் கட்டடமொன்றின் இரண்டாவது மாடியிலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்தான் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த மஹியங்கனையைச் சேர்ந்த சந்திரா குமாரி திசாநாயக்க என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த யுவதியின் மரணம் கொலையா? அல்லது தற்கொலையா? என்று கூறமுடியாதுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

# போலிக் கடவுச் சீட்டில் சிங்கப்பூர் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகள் 4 பேர் கைது

போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி சிங்கப்பூருக்குச் சென்ற இலங்கை அகதிகள் 4 பேர் சிங்கப்பூரில் இருந்து சென்னைக்கு திருப்பியனுப்பப் பட்டுள்ளனர். இவர்கள் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அகதி முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களான போரூரை சேர்ந்த ராஜேந்திரன், கும்மிடிப் பூண்டியைச் சேர்ந்த சசிகுமார், ஸ்ரீராம், திருச்சி கே.கே.நகரை சேர்ந்த செந்தூரன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சிங்கப்பூர் விமானத்தில் நேற்று முன்தினம் சென்னைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் இந்திய கடவுச்சீட்டு உட்பட போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி கோயம்புத்தூரில் இருந்து ஜூலை மாதம் சிங்கப்பூர் சென்றுள்ளனர்.

இவர்கள் சிங்கப்பூரில் இருந்து பிரான்ஸ் செல்லமுற் பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சிங்கப்பூரைச் சேர்ந்த முகவரான ஜீவா என்பவர் வெளிநாட்டு வேலை வாங்கித் தருவதாகக் கூறி தலா இரண்டரை லட்சம் ரூபாவை வாங்கிக் கொண்டு போலியான கடவுச்சீட்டில் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றதாக குறித்த இலங்கை அகதிகள் நால்வரும் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.

ஆனால், குறித்த முகவர் இவர்களை அங்குள்ள விடுதியில் 4 நாள்கள் தங்க வைத்துவிட்டு தப்பிச் சென்று விட்டாதாக அவர்கள் தெரிவித்தனர்.

அங்கு அனாதையாகத் திரிந்த எங்களை சிங்கப்பூர் பொலிஸார் கைது செய்து 45 நாள்கள் சிறையில் அடைத்தனர்.

சிறையில் இருந்து வெளிவந்ததும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவிட்டனர். இங்கு வந்ததும் விமான நிலைய அதிகாரிகள் நாம் போலிக் கடவுச் சீட்டை வைத்திருப்பதாகக் கூறி கைது செய்து விட்டனர் என்று இலங்கை அகதிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வர் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

யாழ்ப்பாணம் வடமராட்சி
ஊரிக்காடு நிருவத்தம்பை திருவருள்மிகு
ஸ்ரீ தான்தோன்றி விநாயகர் திருக்கோயில்
நூதன ஆலய நூதனப் பிரதிஷ்ஷா
பஞ்சகுண்ட பக்ஷ திரிதள இராஜகோபுர
மஹா கும்பாபிஷேகம்



காலம்: 31.08.2011 சுபமுகூர்த்தம்: 6.00-7.10

கும்பாபிஷேக பிரதம குருவின் அருளாசியுரை



"ஆனை முகனைப்பரவி அஞ்சலி செய்விப்பாம்"

சமயாசார பண்பாட்டு விழுமியங்களை சிரமேற் கொண்டு ஒழுகுகின்ற யாழ்ப்பாண மாவட்டத்து வடமராட்சி ஊரிக்காடு நிருவத்தம்பை பதியிலே பன்னெடுங்காலமாக கோயில் கொண்டு தான் தோன்றி ஸ்ரீ சித்திவிநாயகராக வீற்றிருந்து அருளாட்சி புரியும் எம்பெருமானுக்கு நூதன திரிதள இராஜகோபுரம் கொண்ட அழகு மிகு ஆலயத்தில் நூதனப்பிரதிஷ்டா அஷ்ட பந்தன பஞ்சகுண்ட பக்ஷ மகாகும்பாபிஷேகம் செய்து வைப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

இந்த வேளையில் சகல மக்களும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு, நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ எல்லாம் வல்ல தான்தோன்றி ஸ்ரீசித்தி விநாய கரைப் பணிந்து வணங்கி ஆசி கூறி அமைகின்றேன்.

"சிவாகமகிரியா கலாநிதி"
சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக் குருக்கள்,
பிரதமகுரு கொம்மந்துறை மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம்.

திருப்பணியாளர்களின் வாழ்த்துரை

மங்களமும், மதிநிறைவும் கொண்ட கந்தபுராண கலாசாரம் ஓங்கி மிளிரும் யாழ்ப்பாண மண்ணிலே வடபாலுள்ள ஊரிக்காடு நிருவத்தம்பை பதியிலே தான்தோன்றி சித்திவிநாயகராக வீற்றிருந்து அருள் புரியும் எம் பெருமானுக்கு எமது இயல்புக் கேற்ப அழகுமிகு ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் செய்விப்பதில் அகம் மகிழ்வடைகின்றோம்.

எங்களது இந்த சிவதர்ம பணிக்கு சகல ஆலோசனைகளையும், உதவிகளையும் புரிந்து நெறிப்படுத்திய எமது பிரதம குரு சிவஸ்ரீ பாலகிருஷ்ணக்குருக்கள் அவர்கள் எமது மனம் நிறைந்த நன்றிக்குரியவர்.

மேலும் எமது சகல மக்களினதும் ஒத்துழைப்போடும், ஆதரவோடும் எமது ஆலயம் மேன்மேலும் வளர்ச்சிபெற வேண்டும் என எல்லாம் வல்ல தான்தோன்றி சித்தி விநாயகரை பணிந்து வாழ்த்தி அமைகின்றோம்.

தெய்வேந்திரகுலசிங்கம்- கவிதா தம்பதியர்,
லண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழகத்தின் உணர்வலைகள்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட மூவரினதும் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று தமிழக சட்டசபையில் ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கான பிரேரணையை முதல்வர் ஜெயலலிதாவே முன்னெடுத்தார். தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்துத் தாம் இதனைச் செய்வதாக அவர் சட்டசபையில் அறிவித்தார்.

மூன்று பேருக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட உள்ளமை தமிழக மக்களைப் பெரும் வேதனையில் ஆழ்த்தி உள்ளது. தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் என்று கோரி வருகின்றனர். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மூவருக்குமான தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் என்பதே தமிழக முதல்வரால் நேற்றைய தினம் சட்டப் பேரவையில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

கருணை மனுக்களைப் பரிசீலித்து குடியரசுத் தலைவரை நடவடிக்கை எடுக்குமாறு அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது. இது குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டீலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை எதிர்வரும் ஒன்பதாம் திகதி நிறைவேற்ற இருந்த வேளையில், சென்னை உயர்நீதிமன்றம் அதனை எட்டு வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு உத்தரவிட்டுள்ள சூழலில், அதனை ஆயுள் தண்டனையாகக் குறைக்குமாறு தமிழக சட்டசபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது சமகாலத்தில் தலையெடுத்துள்ள உகந்த சகுனம் எனலாம்.

அது மட்டுமன்றி, முதல் நாள் திங்கட்கிழமை, சட்ட சபையில் பேசிய முதல்வர், தண்டனையைக் குறைக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என்று கூறியிருந்தார். அந்தத் தண்டனையை இரத்துச் செய்யக் கோரும் அதிகாரமும் தமக்கு இல்லை என்றும் சட்டசபையில் தெரிவித்திருந்தார்.

ஆனால் -

ஜனாதிபதி கருணை மனுவைத் தள்ளுபடி செய்தாலும் அமைச்சரவையின் ஒப்புதலுடன் ஆளுநர் ஊடாக மீண்டும் விண்ணப்பிப்பதற்கு அரசமைப்புச் சட்டத்தில் இடமுண்டு, அதன் 161 ஆவது பிரிவு அதற்கு வகை செய்கிறது என்பதனை, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் சுட்டிக்காட்டியிருந்தார். எப்படியோ -

தமிழக அரசு இது விடயத்தில் தன்னால் இயன்றதைச் செய்வதற்கு முன்வந்திருப்பது, முதலமைச்சர் ஜெயலலிதா அதனைத் தன்கையில் எடுத்திருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகும்.

மரண தண்டனையை நிறுத்துமாறு அரசியல்கட்சி வேறுபாடின்றி தமிழக மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தனர். மூவருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்படுமாயின், அதற்கு முன்பு லட்சக் கணக்கான மக்களைத் திரட்டி சிறைச்சாலையை முற்றுகையிடப் போவதாக ராமதாஸ், திருமாவளவன், வை.கோ மற்றும் பல தலைவர்கள் அறிவித்திருந்தனர்.

ஜெயலலிதா இவ்வாறு ஒரு முயற்சியை மேற்கொள்ளாதிருப்பின், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு குலைவதோடு மட்டுமன்றி, பல மக்கள் உயிர் நீத்திருப்பர். மரண தண்டனையை நிறுத் தக் கோரி தனக்குத் தானே தீமூட்டி இளம் பெண் ஒருவர் தற்கொலை செய்தமை அந்தப் போராட்டத்தின் ஆரம்பப் புள்ளியாக மாறியிருக்கும்.

ஒட்டு மொத்தமாக, இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டே, மனதில் இருத்தியே, முதல் நாள் மரண தண்டனையைக் குறைப்பதற்குத் தனக்கு அதிகாரம் எதுவுமில்லை என்று கூறியவர் அடுத்த நாள் (நேற்று) சட்டசபையில் பிரேரணை கொண்டு வந்து தமிழக மக்களின் உணர்வுகளுக்குத் தலைவணங்கி முற்கூறிய தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றி உள்ளார்.

தமிழக சட்ட சபைத் தேர்தலில் தமது தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றியீட்டிப் பதவி ஏற்ற கையோடு -

இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், போர்க்குற்றம் புரிந்தவர்களை குற்றவாளிகள் எனப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசைக் கோரும் பிரேரணைகளைத் தமிழக சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்றிய பின்னர், இப்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு இரக்கம், பரிவு காட்டக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளார்.

அவர் இவற்றைத் தமது சொந்த விருப்பில் செய்தாரா என்பது ஒரு புறமிருக்க, தமிழக மக்கள் இலங்கைத் தமிழர்களின் மீதும், அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதிலும் அதிக அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதனையே ஒட்டுமொத்தத்தில் பிரதிபலிக்கிறது.

தானாடா விட்டாலும் தன் தசை ஆடும் என்பதனை தமிழக மக்களும் அவர்களின் அரசியல் தலைவர்களும் காலத்துக்குக் காலம், தகுந்த வேளைகளில் வெளிக்காட்டி வருகிறார்கள். அவர்களின் நல்லுணர்வும் பொங்கி எழும் உணர்வலைகளும் காலத்தால் அழியாது ஈழத்தமிழர்களுக்குக் கைகொடுக்கும் என்று நம்புவோமாக. தமது அரசியல் தலைவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப, இலங்கை அரசின் வேடதாரித்தனத்துக்கு எடுபட்டு அல்லது ஏமாந்து தகிடுதத்தம் புரியாமல் தடுப்பதிலும், அவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்கள் என்று எதிர்பார்ப்போமாக.

# வன்னியிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களுக்கு வரவேற்பு

## வவுனியா மாவட்ட செயலகம் ஏற்பாடு

வவுனியா, ஓக.31

வன்னித் தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களிலிருந்து இந்த ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நாளை முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

''பல்கலைக்கழக அனுமதி-தேசத்தின் அபிமானம்'' என்ற தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து இந்த ஆண்டு நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் பல்வேறு துறைகளுக்கும் எனத் தெரிவு செய்யப்பட்ட 468 மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் உள்ளிட்ட அரச அதிகாரிகள், பல்கலைக் கழக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு வவுனியா மாவட்ட செயலகத்துக்கு சமுகமளிக்கும் மாணவர்கள் அங்கு தமது வரவினைப் பதிவு செய்து கொள்வர். பின்னர் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம் மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயங்களின் ''பாண்ட்'' வாத்தியம் சகிதம் மாணவர்களும், அவர்கள் தம்பெற்றோரும் யாழ்-கண்டிவீதி வழியாக வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

அங்கு மாணவர்கள் மற்றும் விருந்தினர்கள் சம்பிரதாய பூர்வமாக வரவேற்கப்படுவர். தொடர்ந்து வவுனியா வடக்கு மற்றும் தெற்கு வலய மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், அதிதிகள் உரை என்பன இடம்பெறும். இந்த நிகழ்வில் கலந்துகொள்வது தொடர்பான அழைப்பிதழ்கள் சகல மாணவர்களுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட செயலகம் தெரிவித்தது. (த)

# அச்சத்துடன் கழியும் இரவு

சண்டிலிப்பாய், ஓக.31

மானிப்பாய், சுதுமலை, மடத்தடி ஆகிய பகுதிகளில் இனந்தெரியாதோரின் நடமாட்டம் அடுத்தடுத்து இடம்பெறுவதால் இந்தப் பகுதி மக்கள் பீதியடைந்துள்ளதுடன், இரவு நேரங்களில் தூக்கமின்றி விழித்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

மானிப்பாய் எரிபொருள் நிலையத்திற்குப் பின்புறமாகவுள்ள ஒரு வீட்டிற்கு இரவு ஒரு மணிபோல் சென்ற இனந்தெரியாதோர் வீட்டுக் கதவைத் தட்டியுள்ளனர். அச்சமடைந்த வீட்டுக்காரர் அவலக் குரல் எழுப்பியதும் அவர்கள் ஓடி மறைந்துவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இதே போல் சுதுமலை மாப்பியன் வீதியிலுள்ள வீட்டிற்கு இரவு 12 மணிபோல் சென்ற இனந்தெரியாதோர் அங்கிருந்தவர்களைக் கதவைத் திறக்கும் படி அழைத்தார்கள். இது குறித்து வீட்டில் இருந்தவர்கள் தொலை பேசி மூலம் அருகாமையில் வசிக்கும் உறவினர்களுக்கு அறிவித்ததும் அவர்கள் ஓடித் தப்பியுள்ளனர்.

சுதுமலை வடக்கில் மடத்தடி என்னும் இடத்தில் இரவு நேரம் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியவர்களை அந்தப் பகுதியிலுள்ள இளைஞர்கள் துரத்திச் சென்ற போது அவர்கள் ஓடி மறைந்துவிட்டனர்.

கிராமங்கள் தோறும் அடுத்தடுத்து நடைபெற்று வரும் இந்தச் சம்பவங்களால் மக்கள் நிம்மதி இழந்ததுடன் தூக்கமின்றித் திண்டாடுகின்றார்கள். (த-115)

# ஊர்காவற்றுறை ஆலயங்களில் அடுத்தடுத்து இடம்பெறும் திருட்டுகள்

ஊர்காவற்றுறை, ஓக. 31

ஊர்காவற்றுறையில் அண்மைக் காலமாக திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துவருகிறது.

கடந்த வாரம் கரம்பன் முருகமூர்த்தி ஆலயத்தில் சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு கரம்பன் காளி கோயில் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் நகை மற்றும் ஒலி பெருக்கி சாதனங்களை திருடிச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சியாக திருடர்கள் ஆலயங்களை இலக்குவைத்து திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்குறித்த திருட்டுச் சம்பவங்கள் பற்றி ஊர்காவற்றுறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-127)

# கொடகே சாகித்திய விருதுகள் வழங்கும் விழா செப்ரெம்பரில்

யாழ்ப்பாணம், ஓக. 31

கொடகே சாகித்திய விருதுகள் வழங்கும் விழா எதிர்வரும் 7 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு -7 ஜே.ஆர். ஜயவர்த்தன கலாசார கேந்திரத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் கடந்த ஆண்டு வெளிவந்த மும்மொழியினைச் சார்ந்த கலை இலக்கியத்துறையில் பணியாற்றிய மூன்று பெரியவர்களுக்கும், மும்மொழிகளிலும் வெளிவந்த நூல்களில் சிறந்தவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாவல், சிறுகதை, கவிதை இளைஞர் இலக்கிய நூல்களுக்கும் இந்த விருது வழங்கப்படவுள்ளது.

தமிழ்மொழி மூலத்திற்கான மேற்படி விருதினை தமிழ் கலை இலக்கியத் துறையில் நீண்ட காலமாகப் பணியாற்றி வரும் தெளிவத்தை ஜோசப் பெறுகிறார்.

மேலும் கடந்த வருடம் தமிழ்மொழியில் வெளிவந்த கலை இலக்கிய நூல்களின் தெரிவில் இறுதிச் சுற்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நூல்களாவன:

நாவல்- வவுனியூர் இரா.உதயனின் 'பனிநிலவு', அல் அஸ்மத்தின் 'அறுவடை கனவுகள்', தெணியானின் 'தவறிப் போனவனின் கதை'. கவிதை- கந்தையா கணேசமூர்த்தியின் 'தழலாடி வீதி', மூதூர் முகைதீனின் 'ஒரு காலம் இருந்தது', ஜமீலின் 'உடையக் காத்திருத்தல், ஷெல்லிதாசனின் 'செம்மாதுளம்பூ'.

சிறுகதை- தெணியானின் 'ஒடுக்கப் பட்டவர்கள்', மு.சிவ லிங்கத்தின் 'ஒப்பாரி கோச்சி', நீ.பி.அருளானந்தனின் 'வெளிச்சம்', திக்கவல்லை கமாலின் 'முட்டைக் கோப்பி', மருதூர் ஏ.மஜீத்தின் 'கூடு கட்டத் தெரியாத குயில்கள்'. இந்த நூல்களில் சிறந்தவையாக தேர்ந்தெடுக்கப்படும் நூல்களின் விவரம் மேற்படி விழாவில் அறிவிக்கப்படும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் ஒளி வசதியின்றி மாலையில் இயங்கும் காக்கைதீவு மீன்சந்தை

## மக்களும், வியாபாரிகளும் பெரும் சிரமம்

சண்டிலிப்பாய், ஒக 31

காக்கை தீவுப் பகுதியில் இயங்கி வரும் மாலை நேர மீன் சந்தையில் மின்சார வெளிச்சம் இல்லாததனால் அங்கு வரும் மக்கள் மட்டுமல்ல மீன் வியாபாரிகளும் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். அந்தப் பகுதி இருளால் சூழப்பட்டிருப்பதால் மக்கள் அங்கு செல்லத் தயங்குகிறார்கள். இதனால் வியாபாரிகளும் பாதிக்கப்படுகின்றனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் ஆனைக்கோட்டைப் பகுதியில் பல வருடங்களாக வீதியோரமாக இயங்கி வந்த மாலை நேர மீன் சந்தையால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு வந்ததுமல்லாமல், சுற்றாடலில் சுகாதாரத்துக்குப் பங்கமும் நிலவியது.

இந்த நிலைப்பாடு குறித்து பொதுமக்கள் வலி.தென் மேற்கு பிரதேச சபை செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து பாவனையாளரின் நலன்கருதி மாலை நேரச் சந்தை அமைப்பதற்குப் பொருத்தமான காணியைத் தந்துதவுமாறு பொதுமக்களைச் செயலாளர் கோரியிருந்தார்.

இதேவேளை, தற்பொழுது வாகனப் போக்குவரத்தும், மக்கள் நடமாட்டமும் என்றுமில்லாதவாறு அதிகரித்ததைத் தொடர்ந்து போக்குவரத்துக்கு இடையூறாக இயங்கி வந்த மேற்படி சந்தையை தொடர்ந்து இயங்குவதற்குப் பொலிஸார் தடை விதித்தனர். இதைத் தொடர்ந்து மேற்படி சந்தை காக்கை தீவுக் கடற்கரைக்கு மாற்றப்பட்டது.

தற்பொழுது காக்கை தீவில் இயங்கிவரும் மாலை நேரச் சந்தைக்கு மின் குமிழிகள் பொருத்தப்படாமையினால் அங்கு வரும் மக்களும், வியாபாரிகளும் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.

இராணுவ முகாமுக்கு அருகாமையில் இயங்கி வரும் இந்த சந்தையில் இருள் சூழ்ந்திருப்பதால் மக்கள் அங்கு செல்ல அஞ்சுகிறார்கள். இதனால் வியாபாரிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே வியாபாரிகளினதும், பாவனையாளர்களினதும் நன்மை கருதி இரவு 8.00 மணி வரை இயங்கிவரும் மேற்படி சந்தைக்கு மின் குமிழிகள் பொருத்துவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(த-115)

# சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் அதிகரித்த கட்டணங்கள் அறவீடு

## நல்லூர் ஆலயத்துக்கு வந்த பக்தர் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஒக 31

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திரு விழாவை முன்னிட்டு அந்தப் பகுதியில் யாழ்.மாநகரசபையின் அனுமதியைப் பெற்று நடத்தப்பட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் கடந்த ஞாயிற்றுக் கிழமையும் நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் வழமையான கட்டணங்களை விடக் கூடுதலான கட்டணங்கள் அறவிடப்பட்டதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உற்சவ காலத்தில் சைக்கிள் ஒன்றுக்கு 5 ரூபாவும் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு 10 ரூபாவும் கட்டணமாக அறவிடப்பட்டு வந்தது.

உற்சவ இறுதி நாள்களான ஞாயிற்றுக் கிழமையும், திங்கட் கிழமையும் சைக்கிள் ஒன்றுக்கு 10 ரூபாவும் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு 20 ரூபாவும் பாதுகாப்புக் கட்டணமாக அறவிடப்பட்டதுடன் தலைக்கவசத்துக்கும் 10 ரூபா அறவிடப்பட்டதைக் காணமுடிந்தது.

உற்சவம் முடிவடையும் இறுதி நாள்கள் தானே ஏதோ கறக்க வேண்டியதைக் கறந்து விடுவோம் என்ற குறிக்கோளுடன் சில பாதுகாப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் தம் இஷ்ரம் போல் இந்தத் தொகைகளை அறவிட்டனர். இவற்றுக்காக வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுகளில் மட்டும் ஆரம்பத்தில் வழங்கப்பட்டது போன்று சைக்கிளுக்கு 5 ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 10ரூபாவும் என அச்சிடப்பட்டிருந்தது. பொதுமக்களும் வேறு வழியின்றி இவற்றைச் செலுத்தியதை அவதானிக்க முடிந்தது. (த-7)

# மர்ம நபரைப் பின் தொடர்ந்த சுதுமலை இளைஞர்கள் மீது சீருடையினர் தாக்குதல்

சண்டிலிப்பாய்,ஒக.31

இரவுநேரம் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய முன் பின் அறிமுகமில்லாத நபரைப் பின்தொடர்ந்து சென்ற இளைஞர்கள் நாலாபுறமும் இருந்து வந்த சீருடையினரால் சுற்றி வளைத்துப் பிடிக்கப்பட்டுக் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் பாதுகாப்புக்காக அவர்கள் கொண்டு சென்ற கத்தி, பொல்லு, கோடரி போன்ற ஆயுதங்களும் அபகரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் சுதுமலை கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இது பற்றித் தெரியவருவதாவது:

இரவு 9 மணியளவில் ஆள்கள் நடமாட்டம் இல்லாத வீதியால் வெளிச்சம் இல்லாத மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் இறங்கி மெல்ல மெல்ல நடந்து சென்றுள்ளார். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ் நிலையைத் தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர், ஏனைய இளைஞர்களையும் அழைத்துக் கொண்டு அந்த நபரைப் பின் தொடர்ந்து சென்றனர்.

நடந்து சென்ற அந்த நபர் அந்தப் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணைக்கு அருகில் உள்ள பற்றை வளவில் மறைந்து விட்டார். இவரைக் கண்டு பிடிப்பதற்காக இளைஞர்கள் சுற்றிவளைத்துத் தேடும் முயற்சியில் ஈடுபட்டபோது அந்தப் பகுதிக்குச் சைக்கிள்களில் விரைந்து வந்த சீருடையினர் இளைஞர்களைப் பிடித்துத் தாக்கியதுமல்லாமல் நீங்கள் தான் திருடர்கள் என்று கூறியதுடன், பாதுகாப்புக்காக இளைஞர்கள் கொண்டு சென்ற கத்தி, பொல்லு, கோடரி போன்றவற்றையும் பறித்துச் சென்றுள்ளனர். சீருடையினர் அவர்களைக் கையடக்கத் தொலைபேசி மூலம் புகைப்படமும் எடுத்துள்ளனர். (த-115)

## சிறப்பான சேவைக்கு...



கௌரவம்: சர்வதேசக் கூட்டுறவுத் தினைத்தை முன்னிட்டு மாகாண ரீதியாக நடத்தப்பட்ட போட்டியில் சிறந்த கடன் வழங்கும் சங்கங்களாக மாவைக் கந்தன் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் அளவெட்டி மகளிர் சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம், யாழ்.மாவட்டச் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியவை தெரிவாகின. இந்தச் சங்கங்களின் பிரதி நிதிகளுடன் வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்த குமார், மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன், மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் ஆர்.இராஜாராம், செயலாளர் திருமதி எஸ்.வேதவல்லி ஆகியோர் உள்ளனர். (த-26)

# ஊர்காவல்துறையில் மூடப்பட்டுள்ள பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும்

ஊர்காவற்றுறை,ஒக.31

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் இதுவரை மீளத்திறக்கப்படாதுள்ள பாடசாலைகளைத் திறந்து கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான பணிகள் தீவகக் கல்வி வலயத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

ஊர்காவற்றுறை கதிரேசன் பாடசாலையும், சுருவில் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது இந்தப் பாடசாலைகள் அமைந்துள்ள சூழலில் வாழும் பிள்ளைகள் அயற் பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர்.

இதனால் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்கள் தினசரி நீண்ட தூரம் பயணம் செய்து கல்வியைத் தொடர்கின்றனர்.

இந்தப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றமை பல மாணவர்களுக்குப் பேருதவியாக அமையும் எனப் பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-127)

# 107 பேர் இரத்த தானம்

பருத்தித்துறையில் இடம்பெற்ற இரத்த தான நிகழ்வில் 107 பேர் இரத்ததானம் செய்தனர்.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட் டுக்கழகத்தின் ஏற்பாட்டில் திக்க முனை மைதானத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் நடமாடும் இரத்த வங்கி மூலம் இந்த நிகழ்வின்போது இரத்தம் சேகரிக்கப்பட்டது. ஐக்கிய விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் உட்பட 107 பேர் இரத்த தானம் செய்தனர். (த-236)

# நீதி மன்றங்களில் வாகனங்கள் ஏலம்

யாழ்ப்பாணம்,ஒக.31

சாவகச்சேரி, பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றங்களில் உரிமை கோரப்படாததும் பறிமுதல் செய்யப்பட்டதுமான வாகனங்களை விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி செப்ரெம்பர் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த கேள்விப் பத்திரம் கோரல் தொடர்பாக 17.06.2011 ஆம் திகதியிடப்பட்ட அரச வர்த்தமானியில் மேலதிக விவரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட வாகனங்களை அந்தந்த நீதிமன்றங்களில் அலுவலக நாள்களில் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும்.

இதற்கான விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றக் கணக்குக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (த-4)

# செம்பியன் பற்று தெற்கில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு ஐ.நா. நிறுவனம் வாழ்வாதார உதவி

யாழ்ப்பாணம்,ஒக.31

மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு வடமராட்சி கிழக்கில் செம்பியன் பற்று தெற்குப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கான வாழ்வாதார உதவிப்பொருள்களை ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனம் வழங்கவுள்ளது.

வடமராட்சி கிழக்கில் புதிதாக மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு செம்பியன் பற்று பகுதியைச் சேர்ந்த சுமார் 200 குடும்பங்களுக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனம் அந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரத் தொழிலான விவசாயத்துக்கான உதவிப் பொருள்களை வழங்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக 200 குடும்பங்களில் 50 குடும்பங்களுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களும், 130 குடும்பங்களுக்கு விவசாய உதவிப் பொருள்களாகிய கத்தி, மண்வெட்டி போன்றனவும் ஏனைய 20 குடும்பங்களுக்கு கிருமி நாசினி தெளிகருவிகளும் வழங்கப்படவுள்ளன. (த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் திணைக்களத்தின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

## அடுத்த மாதம் முதல் வாரத்தில்

யாழ்ப்பாணம், ஒக. 31

யாழ். பண்ணைப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட தொழில் திணைக்கள அலுவலகத்துக்கு அடுத்த மாதம் முதல் வாரத்தில் அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

89.5 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இரண்டு வருடங்களில் கட்டட நிர்மாண வேலைகள் நிறைவு பெறக் கூடியதாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. கட்டடத் திணைக்களம் ஊடாக இந்தக் கட்டட நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தத் திணைக்களத்தின் முதல் தளம் 36.5 மில்லியன் ரூபா செலவில் 224 நாள்களில் நிர்மாணித்து முடிப்பதற்குத் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

திணைக்கள கட்டடத்துக்கான அடிக்கல், வடமாகாண பிர தித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரனால் நடப்படவுள்ளது.

வடமாகாணப் பிரதித் தொழில் திணைக்களம், யாழ். மாவட்டத் தொழில் திணைக்களம், யாழ். மாவட்டத் தொழிற்சாலைகள் பரிசோதனைத் திணைக்களம் ஆகியன இந்தப் புதிய கட்டடத் தொகுதியில் இயங்கவுள்ளன.

இந்த மூன்று அலுவலகங்களும் இதுவரை தனியார் மற்றும் கூட்டுறவுச் சபையின் கட்டடங்களில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(த-14)

# ஆளுநரின் செயலாளராக இளங்கோவன் நியமனம்

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் செயலாளராக இ.இளங்கோவன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நாளை வியாழக்கிழமை முதல் இந்தப் பதவியைப் பொறுப்பேற்க உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் முடிவடைந்த சில நாள்களின் பின்னர் வடக்கு மாகாண ஆளுநரின் பதில் செயலாளராகக் கடமையாற்றி வந்தார்.

இதற்கு முன்னர் ஆளுநரின் செயலாளராகப் பதவி வகித்த எஸ்.ரங்கராஜா, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் அரசின் தோல்வியோடு பதவி விலகியிருந்தார். அத்துடன் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குச் சேவை நீடிப்பு வழங்கப்படமாட்டாது என்ற முடிவுக்கமைய அவரது பதவி இந்த மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது.

இதனையடுத்து வடமாகாண ஆளுநரின் பதில் செயலாளராக இ.இளங்கோவன் கடமையாற்றி வந்தார். இந்த நிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக நியமனம் வழங்கப்படுவதாக இ.இளங்கோவனுக்கு நேற்றுமுன்தினம் ஆளுநரால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. (த-15)

# கிறிஸ்தவர்களை அடக்கம் செய்ய நல்லூர் பிரதேசத்தில் சேமக்காலை

## பிரதேச சபை கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக.31

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் கிறிஸ்தவ மக்களுக்கான சேமக்காலை ஒன்றை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் இந்து சமய மக்களுக்கான மயானங்கள் மட்டுமே உள்ளன. இந்துப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ மக்களுக்கு என ஒரு சேமக்காலை கூட இல்லை.

கிறிஸ்தவர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டபின் அவர்களது நினைவாக நினைவுக் கல்லறைகள் அமைக்கப்படுவது வழமை. எனவே இந்தப் பகுதியில் உள்ள கிறிஸ்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யக் கூடியதாக ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. இதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவளித்தனர்.(த-7)

# பருத்தித்துறைப் பிரதேச எல்லைக்குள் வரிகள் அனைத்தும் மீள் பரிசீலனை

யாழ்ப்பாணம், ஒக.31

பருத்தித்துறைப் பிரதேசத்தில் வீட்டுவரி, சோலை வரி என்பவற்றை மீள் பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்துமாறு பருத்தித்துறைப் பிரதேச சபையின் முதலாவது அமர்வில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச சபையில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் முதலாவது கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் 1972ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைமுறைப்படுத்தப்படாத வீட்டுவரி, சோலைவரி என்பவற்றை மீள்பரிசீலனை செய்து உரியமுறையில் நடைமுறைப்படுத்துமாறும், அத்துடன் பருத்தித்துறைப் பிரதேசத்தின் வீதிப்புனரமைப்பு, வீதி திருத்தம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பிரதேச சபைக்கான ஆலோசனைச் சபை, நிதிச்சபை, அபிவிருத்திக்குழு போன்ற சபைகள் அமைக்கப்படவேண்டும் என்றும் தேவை ஏற்படின் மேலும் சபைகள் விரிவாக்கப்படவேண்டும் எனவும் உறுப்பினர்கள்தமது கருத்துக்களை முன்வைத்தனர். இந்த முதலாவது கூட்டம் பிரதேச சபைத் தலைவர் பூபாலசிங்கம் சஞ்சீவன் தலைமையில் நடைபெற்றது. இதில் சபையின் உப தலைவர் மா.லோகசிங்கம், செயலாளர் அ.வசீகரன், சபை உறுப்பினர்கள் கா. தவயோகநாதன், பொ. திருச்செல்வம், நி.கிருசாந்தி, க.பன்னீர்ச்செல்வம், இ.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-313)

# சந்தேகத்துக்கிடமாக நடமாடிய மூவர் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம், ஒக.31

வரணிப் பிரதேசத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய மூன்று பேரை அந்தப் பகுதி மக்கள் துரத்திப் பிடித்துக் கொடிகாமம் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

இந்த மூவரையும் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்தனர்.

இந்த நபர்களை நாளை முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டார்.

(எ-207)



வரலாற்றுப்புகழ் மிக்க தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அம்பாளுக்கு விசேட பூசை இடம்பெற்று வீதியுலா வருகின்றார்.

(த-86)

# கருங்குளவி கொட்டியதில் 6 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஒக.31

பனை ஓலை எடுக்கச் சென்றபோது கருங்குளவி கொட்டியதனால் காயங்களுக்குள்ளான 6 பேர் தற்போது மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் கரவெட்டி, மத்தொனியில் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இ.செல்வரவி (வயது-55), சி.செங்கமலம் (வயது-55), சி.கமலாதேவி (வயது-60), த.கமலாதேவி (வயது-40), ஐ.வாசுகி (வயது -25), ச.குகதாசன் (வயது-53) ஆகியோரே காயமடைந்தவராவர். (எ-4)

# இராணுவப் பிரசன்னம் தேவையில்லை என்றால் உங்கள் பாதுகாப்பை நீங்களே உறுதி செய்யுங்கள்

## இருபாலைப் பகுதி மக்களிடம் இராணுவத்தினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.31

இராணுவத்தினரின் பாதுகாப்பு உங்களுக்குத் தேவையில்லை என்றால் எந்தப் பிரச்சினை நடந்தாலும் இராணுவத்தினர் வரமாட்டார்கள். உங்களின் பாதுகாப்பை நீங்களே உறுதிப்படுத்த வேண்டியிருக்கும்.

இவ்வாறு இருபாலைச் சந்தி இராணுவத்தினரால் அந்தப் பகுதி மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு இருபாலை வி.எச்.லேன் பகுதியில் இனந்தெரியாதோர் மரத்திலிருந்து குதித்து ஓடியதை அடுத்து பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இருபாலை கந்தவேள் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலிலேயே இராணுவத்தினரால் மேற்படி கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

எங்களுக்கு இராணுவத்தினரின் பாதுகாப்புத் தேவையில்லை. இராணுவம் இங்கு வரவேண்டாம் என்று பொதுமக்கள் இராணுவத்தினரிடம் தெரிவித்தனர். இதற்கு இராணுவத்தினர், நீங்கள் எங்களை வரவேண்டாம் என்றால் நாங்கள் எங்கள் தலைமைப் பீடத்துக்குத் தெரிவித்துவிட்டு விலகிவிடுகின்றோம். ஆனால் அதன்பின்னர் இந்தப் பகுதியில் எந்தப் பிரச்சினை நிகழ்ந்தாலும் நாங்கள் வரமாட்டோம் - என்றனர்.

இல்லை இராணுவத்தினர் பாதுகாப்புக்கு வேண்டும். இரவு வேளைகளில் ஆயுதங்களுடன் வந்து வீட்டுக் கதவைத் தட்டுகிறார்கள். அவர்கள் தங்களை இராணுவத்தினர் என்று கூறிக்கொண்டு வீட்டைச் சோதிக்கின்றனர் என்று மக்கள் இராணுவத்தினரிடம் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் இராணுவத்தினர் வீடுகளுக்கு வரமாட்டார்கள். அவ்வாறு இரவு வேளையில் உங்கள் வீடுகளுக்குள் நுழைந்தால் நீங்கள் அடியுங்கள். ஆனால் கொலை செய்யாதீர்கள். அவர்களைப் பின்னர் எங்களிடம் அல்லது பொலிஸாரிடம் ஒப்படையுங்கள் - என்றனர் இராணுவத்தினர்.

(த-15)

# தூக்குக் காவடி எடுத்த இளைஞர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஒக.31

நல்லூர் கந்தனின் தீர்த்தத் திருவிழாவன்று தூக்குக் காவடி எடுத்துச் சென்றவர் தூக்கு மரம் முறிந்து நிலத்தில் விழுந்ததில் அடிபட்டுக் காயங்களுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நல்லூர் முன்வாசலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் திருநெல்வேலி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சா.மதிச்சந்திரன் (வயது -24) என்பவரே காயமடைந்தவராவார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றத்தாழ்வுகளை அகற்றி சமூக ஒற்றுமைக்கு வழிவகுத்த மாதமாக ரமழான் விளங்குகிறது

இன்று புனித நோன்புப் பெரு நாள் இறைவனால் கடமையாக்கப்பட்ட கண்ணியமிக்க ரமழானில் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து ஒரு மாத காலமாகப் பகல் வேளையில் நோன்பு நோற்று இரவெல்லாம் பல வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தோம்.

புனித ரமழான் மாதத்தை பூர்த்தி செய்த இறுதித்தினத்தில் தமது சந்தோஷங்களை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் தினமாக மட்டுமல்லாது, அதிகமதிகமான நன்மைகளைச் செய்யும் ஒரு முக்கியமான தினமாகவும் இத்தினம் காணப்படுகின்றது.

தேவையுடையோருக்கு ஸஹாத், ஸதகாக்களை உரிய முறையில் வாரி வழங்கும் இம்முக்கியத்துவமுடைய தினத்தில் புத்தாடை அணிந்து நறுமணம் பூசி இறையில்லத்திற்குச் சென்று வணங்கி வழிபட்டு உற்றார் உறவினர்களோடு மட்டுமல்லாது, ஏனையோரோடும் பகைமையை மறந்து இனிய ஸலாம் கூறி அன்பைப் பரிமாறிக்கொள் ளும் ஒரு புனிதமிகு நாளாக ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் காணப்படுகின்றது.

வருடத்தில் ரமழான் மாதத்தைத் தவிர, ஏனைய மாதங்களில் மனசுக்கு ஏற்ற விதத்தில் உண்டு கழித்த நாம் எமது உடலுக்கு ஒரு மாத காலம் சற்று ஓய்வு கொடுத்து உடலின் சமநிலை யைப் பேணவும், ஏழைகளின் கஷ்ட நிலையை உணரவும் எமக்குக் களமாக இந்தப் புனித ரமழான் மாதம் அமைகின்றது.

ஏழை, பணக்காரன் என்ற நிலையைப் போக்கவும், ஏனையவர்களிடத்தில் இரந்து வாழும் பழக்கத்தை ஒழித்து பொருளாதாரத்தை மேம்படுத்தவும் ஒரு சிறந்த வழிகாட்டியாக ரமழான் விளங்குகின்றது.

இவ்வாறு பல படிப்பினைகளைக் காட்டியும் சமாதான ஏற்றத்தாழ்வுகளை அகற்றி சமுதாய ஒற்றுமைக்கு வழிவகுத்த மாதமாக ரமழான் விளங்குகின்றது.

இந்த நன்நாளில் நோய்வாய்ப்பட்டிருக்கும் நோயாளிகளை நேரில் சென்று பார்த்து அவர்களின் நலன்களைக் கேட்டறிந்து அவர்களின் விமோசனத்திற்காக அல்லாஹ்விடத்தில் விஷேட து ஆ கேட்டல் போன்ற நல்ல விடயங்களையும் செய்வது நற்பண்புகளாகும்.

இஸ்லாமியக் கடமைகளில் ஒன்றான நோன்பானது மிக முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது. ஏனெனில், இக்கடமையானது அல்லாஹ்வுக்கும் அடியானுக்குமிடையில் நேரடித் தொடர்புடைய வேறு எவரும் கண்டுகொள்ள முடியாத ஒரு கடமையாகும்.

## ஏழைகளின் கஷ்ட நிலையைப் போக்க அது உதவும் விதம்

அடியான் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து நிறைவேற்றும் இக்கடமைக்கு இம்மா தத்தில் பன்மடங்கு நன்மைகள் கிடைப்பதாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இம்மாதத்தில் நோன்பு நோற்பது மட்டுமல்லாது, ஸகாதுல் பித்ர் எனும் தான தர்மம் வழங்குதல், அல்-குர்ஆனை அதிகமதிகம் ஓதுதல் போன்ற பலவிடயங்கள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவையெல்லாம் ஒவ்வொரு மனிதனதும் இம்மை மறுமை ஆகிய இரண் டிலும் ஈடேற்றம் பெறுவதற்குக் கிடைத்த பாக்கியமாகும்.

உண்மையில் நோன்புக்கும் அல்-குர்ஆனுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அதாவது இந்தப் புனித ரமழான் மாதத்தில்தான் புனித அல்-குர்ஆன் அருளப்பட்டது. இதன் மூலமே முழு மனித சமுதாயத்தின் வாழ்விற்கும் சிறந்த வழிகாட்டல்கள் உண்டு. இதனைக் கடைப்பிடிப்பவர்கள் அல்லாஹ்வின் இறைநேசர்களாக ஆகுவர் என்பதில் ஐயமில்லை.


புனித அல்-குர்ஆன் அனைத்துப் பொருள்களையும் விட மிகச் சிறந்தது. எவர் திருக்குர்ஆனை கண்ணியப்படுத்துகின்றாரோ அவர் அல்லாஹ்வை கண்ணியப்படுத்தியவராவார். எவர் திருக்குர்ஆனை அலட்சியமாகக் கருதுகிறாரோ அவர் அல்லாஹ்வை அலட்சியப்படுத்தியவராவார். (ஹதீஸ்) அல்-குர்ஆன் அருளப்பட்ட இம்மாதத்தில் சுவர்க் கத்தின் வாயில்கள் திறக்கப்படுவதுடன் நரகத்தின் வாயில்கள் மூடப்பட்டு மனிதனை தீயவழிக்கு இட்டுச் செல்லும் ஷைத்தான்கள் விலங்கிடப்படு கின்றார்கள். (ஹதீஸ்).

புனித நோன்பானது ஏழைகளின் வாழ்வில் ஒளியூட்டும் ஒரு மாதமாகக் காணப்படுகின்றது. ஏனெனில், இம்மாதத்தில் ஏழைகள்படும் கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு வாரி வழங்கும் முறையை பணம்படைத்தவர் களுக்கு உணர்த்தவும் கூடியதுமானதொரு மாதமாகத் திகழ்கின்றது.

அன்றாடம் ஏழைகள் பசிபட் டினியுடன் வாழும்போது அவர்கள் அனுபவிக்கும் கஷ்ட நிலையை நோன்பின் மூலம் வசதி படைத்தவர்கள் அனுபவபூர்வமாகக் கண்டு கொண்டு அவர்களின் அந்த நிலையைப் போக்கவும் அவர்களை ஏழ்மையிலிருந்து விடுவிக்கவும், பணம் படைத்தவர்களை தமது வருமானத்திலிருந்து வாரி வழங்கும் மனோ பாவத்தை ஏற்படுத்தவும் நோன்பு வழிசமைக் கின்றது.

குறிப்பாக இம்மாதத்தில் வாரி வழங்குவதன் மூலம் பணம் படைத்தவர்கள் தமது உலோபித்தனத்திலிருந்து விடுபடவும், மனதை சுத்தப்படுத்தவும் வழிசெய்வதுடன் ஒவ்வொரு நோன்பாளியும் தான் நோன்பு நோற்றவேளையில் ஏற்படுகின்ற சிறுசிறு பாவங்கள் அகற்றப்படுவதற்கும் இந்த ஸகாதுல் பித்ர் முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது.

நோன்பு ஆரம்பமானதிலிருந்து நோன்புப் பெருநாள் தொழுகை ஆரம்பமாவதற்கு முன் இந்த ஸகாதுல் பித்ராவை கொடுப்பதே சிறந்ததாகும். அப்போதுதான் அது ஸகாதுல் பித்ராவாக ஏற்றுக்கொள்ளப்படும். மாறாக



பெருநாள் தொழுகைக் குப் பின்னர் அதனை வழங்கினால் அது சாதாரண சதாவாகவே கணிக்கப்படும். எனவே, ஸகாதுல் பித்ர் கொடுப்பவர்கள் இந்த விடயத்தில் மிகவும் அவதானத் துடன் இருக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் எமது சமூகத்தினரிடையே பல் வேறுபட்ட பிணக்குகளும், சண்டை சச்சரவுகளும் காணப்படுவதுடன் பல விரும்பத்தகாத செயல்களும் கூட இடம்பெற்று வருகின்றன. இவற்றை இல்லாமல் செய்யவேண்டுமானால் எமக் குள் இருக்கும் கசப்புணர்வுகளை நீக்கி அதிலிருந்து விடுபடவேண்டும் அத்துடன் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இவை ஏற்பட வேண்டுமானால் பொறுமையும், சகிப்புத்தன்மையும் எம்மிடத்திலே தேவை.

எனவே, இந்த அருள்மிகுந்த தினத்திலாவது அல்லாஹ்வுக்கும், நபி (ஸல்) அவர்களுக்கும் ஏற்ற விதத்தில் வாழ்வதற்கு நாம் முயற்சிக்கவேண்டும். அல்லாஹ் எம் அனைவருக்கும் நல்லருள் பாலிப்பானாக.(ஆமீன்).

**சத்தார் எம். ஜாவித்**





சீட்டிழுப்பு இலக்கம் 780 திகதி 29-08-2011

வெற்றி எண்கள்

06 13 15 61 D (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 13,861,400/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
| --- | --- | --- | --- |
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,861,400/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 09 | 50,000/= | 450,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 363 | 1,000/= | 363,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 653 | 1,000/= | 653,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15721 | 60/= | 943,260/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8319 | 40/= | 332,760/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 206240 | 20/= | 4,124,800/= |
| ஆங்கில எழுத்து | 29825 | 20/= | 596,500/= |
| | | மொத்தம் ரூ. | 8,263,320/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
| --- | --- |
| கொழும்பு | 600621131-4-24 |
| கம்பஹா | 600615025-1-11 |
| பதுளை | 600606219-5-45 |
| திருகோணமலை | 600607145-7-47 |
| யாழ்ப்பாணம் | 600605141-3-03 |
| குருநாகல் | 600601529-3-13 |
| மாத்தளை | 600603063-1-31 |
| அம்பாறை | 600610722-1-21 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,663,320 /=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 14,265,160 /=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2011 செப்டம்பர் 01 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு



## மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன்
**குணசேகரம்பிள்ளை பிரதீபன்**
(முன்னாள் தலைவர் கலைவாணி சனசமூக நிலையம்)



எமது வடலியடைப்பு கலைவாணி முன்பள்ளிக்கு பெறுமதி வாய்ந்த இரும்புக் கதவை அன்பளிப்பாக வழங்கியமைக்காக செல்வன் கு.பிரதீபனுக்கு எமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று-திருக்குறள்

வாழ்த்துவோர்
கிராம மக்களும் நிர்வாகத்தினரும்
கலைவாணி சனசமூக நிலையம்
வடலியடைப்பு.
பண்டத்தரிப்பு.



## Nothern விளையாட்டுக் கழகம்

Nothern Sports Club சட்டநாதர் வீதி, நல்லூர் நடத்தும் பரராஜசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண மாபெரும் மென்பந்துக் கிரிக் கெட் சுற்றுப்போட்டி அணிக்கு 6 பேர் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட சுற்றுப் போட்டியாக அமைய வுள்ளது.

நடைபெறும் இடம் : செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானம்
விண்ணப்ப முடிவுத்திகதி : 04/09/2011
அனுமதிக் கட்டணம் : ரூபா 400 மட்டும்.
தொடர்புகளுக்கு : 0772338896

விண்ணப்பப் படிவம் கிடைக்கும் இடம்:

Sun Multi Centre
சட்டநாதர் வீதி, கல்வியங்காடு.

Majestic Netcafee
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

ஒலிம்பியாட் Sports
யாழ்ப்பாணம்.

விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடத்தில் ஒப்படைக்கவும். நிர்வாகம்.



## தேவை

யாழ்.நகருக்கு அண்மையில் உள்ள மருந்து விற்பனை நிலையத்துக்கு மருந்து விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
0750476034



## காணி விற்பனைக்கு

உரும்பிராய் - மருதனார்மடம் வீதிக்கு அருகில், உரும்பிராய் - மருதனார்மடம் வீதியிலிருந்து இணுவில், அங்களப்பாய்க்குச் செல்லும் வீதியில் கிணற்றுடன் கூடிய 9½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (சுத்த [illegible])

தொடர்பு:0777843079, 0112360133.
தரகர்கள் தேவையில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியளம் கேட்டீர்களா?

### 'எங்கடை கிராமத்தையும் கொஞ்சம் பாருங்கோ'

நாங்கள்தானுங்கோ நாவாந்துறை மக்கள் கதைக்கிறம். வத்துக் கடல்லை தொழில் செய்து வாழ்க்கை நடத்திற மக்களய்யா! ஊருக்குள்ள கள்ளன் புகுந்தா அவங்களைக் கலைச்சதுக்கு இவ்வளவு கஷ்டப்பட்டிட்டமையா!

ஏங்க, நீங்களே சொல்லுங்கள். கள்ளன் மாதிரி அவங்கள் வந்து சேட்டை விட்டிட்டு போனா அவங்களைத் துரத்தி வாற எங்கடை பொடியங் களுக்குச் சூடு ஏறாதா? நியாயம் கேட்கப் போக இப்படி சுட்டும் வெட்டியும் விட்டது மில்லாமல் கால், கையளை அடிச்சு முறிச்சு வேலை வில்லட்டி எதுவும் செய்ய முடியாமல் பண்ணீட்டாங்களே! அதுவுமில் லாமல் பயங்கரவாதிகள் எண்டு பிடிச்சுக் கொண்டுபோய் கோட்டிலை நிறுத்திப் போட்டினமே!

ஐயா! பெரியவங்களே! எங்கடை கிராமத்தையும் கொஞ்சம் பாருங்கோ! உப்புக் காத்திலை உரமேறின எங்கடை புரியமாற்றையும், புள்ளையளின்டையும் கை, காலை உடைச்சுப் போட்டினம்.

இனி எந்தக் காலத்திலை அதுகள் தொழில் செய்யப் போறதோ? நிவாரணமும் இல்லாமல் இனி எப்படிச் சீவிக்கப் போறமோ? பட்டுப்போன தொழிலுக்கு ஆர் நஷ்டஈடு தருவாங்கள்? புள்ள குட்டியள எப்படி வளக்கப் போறமோ?

நாங்கள் அடிபட்டு அவலக் குரல் எழுப்பினபோது ஆரும் வரல்லை. வர அவையள் விடல்லை. ஆனா வரக்கூடிய பலரும் வரல்லை. பொம்புளையாயிருந்தாலும் விசயகலா அம்மாவும், சரவணை ஐயாவும் வந்து பார்த்தது எண்டு அறிஞ்சு மிகச் சந்தோசப்பட்டம். முனிசிப்பல் தேர்தலிலை நாங்கள் அரசுக்கு வாக்களிச்சதுக்கு நல்ல பரிசு தந்திருக்கிறாங்கள். எங்களிட்டை வாக்குகள் பெற்றவையைத் தொடர்பு கொண்டால் பாக்கிறம் எண்டிச்சினம். பிறகு எடுத்தால் ரெலிபோனுக்குப் பதிலே சொல்லுறாங்கள் இல்லை. யேசப்பா நீதான் எங்களைக் காப்பாத்த வேணும்.

மேயர் அம்மாவும், அமைச்சர் ஐயாவும் கூட எங்கடை குரலுக்குச் காது குடுக்கேல்லை. ஆஸ்பத்திரியிலை வந்து பாத்ததோடை அவையடை கடமை முடிஞ்சு போச்சு.

எங்கடை திருச்சபையள் சொன்னா உலகமே கேக்கும். ஆனா நாங்கள் அலறின அலறல் திருச்சபைகளுக்குக் கேட்கேல்லையே யேசப்பா! நீதிக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழு எண்டெல்லாம் வைச்சிருந்து வெள்ளக்காரரர் வரேக்கை பேசுறவங்கள் எல்லாம் எங்களுக்கு நீதி மறுக்கப்பட்டபோது குரல் குடுக்கேல்லையே?

ஆனா நாங்கள் கும்புடுற யேசப்பா எங்களைக் கைவிடேல்லை. புறக்கிராசியார் வடிவிலை வந்து எங்களைக் காப்பாற்றினார்.

உண்மையிலை கையறு நிலையிலையிருந்த எங்களுக்காக வாதாடின 32 புறக்கிறாசி ஐயாக்களும், அம்மாக்களும் எங்களுக்குத் தெய்வங்கள்தான்.

ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அம்மா தலைமையிலை ஸ்ரீகாந்தா ஐயா, றெமீடியஸ் ஐயா எண்டு எலெச்சன் கேட்ட புறக்கிறாசிமார் உட்பட புறக்கிறாசியாக்கள் எங்களுக்காக வாதாடி எங்கடை புரியமாரையும், புள்ளயளயும் பிணையெடுத்து விட்டிருக்கிறார்கள். அவங்களுக்கு நாங்களெல்லாரும் கடமைப்பட்டிருக்கிறம். அப்படி நாலு பேர் எங்களுக்காகவும் கதைக்க இருக்கினம் எண்டதிலை நிம்மதியாக இருக்குது.

என்ன இருந்தாலும் எங்களுக்கு நடந்தது அநீதி. செய்யிறதையும் செய்து போட்டு செய்யாத குற்றத்துக்குத் தண்டனையும் தாற அக்கிரமம் நிலைக்காதய்யா.

அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் எண்டதிலை எங்களுக்கு நம்பிக்கையிருக்குது. முந்தின அனுபவங்களிலை நாங்கள் கண்ட உண்மையிது.

எல்லாத்தையும் கடவுள் பாத்துக் கொள்ளுவார் எண்ட நம்பிக்கையோடை காலத்தை ஒட்ட வேண்டியதுதான்!

விழிச்சான் குஞ்சு.

# அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டபோதும் பயங்கரவாதிகளுக்கு மன்னிப்பு இல்லை

## திவியன பத்திரிகை தகவல்

கொழும்பு, ஓக. 31

நீண்ட காலமாக அமுல்படுத்தப்பட்டு வந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட போதிலும், பயங்கரவாதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடைய 250 குற்றவாளிகளுக்கு எவ்வித மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது என சிரேஸ்ட அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் மற்றும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியமை, குண்டுகளை வைத்தல், படையினரைப் படுகொலை செய்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 250 புலிச் சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தேக நபர்களுக்கு அவசரகாலச் சட்ட நீக்கத்தின் ஊடாக எவ்வித சலுகைகளும் அளிக்கப்படமாட்டாது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய உரிய முறையில் வழக்குத் தொடரப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வடபிராந்திய அலுவலகம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கரையோரப் பகுதிகளில் கடற்படை முகாம்கள்

நாட்டின் கரையோரப் பகுதிகளில் கடற்படை முகாம்கள் அமைக்கப்படும் எனக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, இதுவரையில் முகாம்கள் அமைக்கப்படாத பகுதிகளை உள்ளடக்கும் வகையில் புதிதாகக் கடற்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய முகாம்கள் சட்டவிரோத ஆயுதக் கடத்தல், போதைப் பொருள் வர்த்தகம், சட்டவிரோத ஆள்கடத்தல், மீனவர்களுக்கு உதவிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்காக அமைக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு உள்ளிட்ட பிரதேசங்களில் கடற்படை முகாம்கள் அமைக்கப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# கட்சியின் வெற்றிக்கு ஒத்துழைக்க வேண்டும்

### சஜித் பிரேமதாச கூறுகிறார்



கொழும்பு, ஓக.31

கட்சியின் வெற்றிக்காக அனைவரும் பாடுபட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அரியரட்ன சந்தியாகுவின் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னர் மத்திய கொழும்பு தொடர்பான முக்கிய பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளத் திட்டமிட்டுள்ளேன்.

மத்திய கொழும்பு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படும். மீண்டும் ரணசிங்க பிரேமதாச யுகமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

உட்கட்சிப் பூசல்கள் தொடர்பில் அதிருப்தி அடையாது கட்சியின் வெற்றிக்காக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.-என்றார். (ச)

## உத்தியோகத்தரை அம்பு எய்து காயப்படுத்திய வேடுவர்

வேடுவர் சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் கண்டி வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் மீது அம்பு எய்தி காயப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் வேடுவர் சமூகத்தைச் சேர்ந்த நபர், வைத்தியசாலைக்குள் நுழைவதை பாதுகாப்பு உத்தியோகத்தர் தடுத்ததையடுத்தே இடம்பெற்றுள்ளது. (ச)

## பச்சிலைப்பள்ளியில் 400 நிரந்தர வீடுகள்

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவில் மேலும் 400 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. யுத்தத்தினால் முற்றாக அழிவடைந்த 400 வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீடுகள் இந்திய உதவி வீடமைப்புத்திட்டம், சுவிஸ் சர்லாந்து அபிவிருத்தி அமைப்பு போன்றவற்றின் உதவியுடன் நிர்மாணிக்கப்படுகின்றன.

இந்த அமைப்புகளின் உதவித் திட்டத்தின் கீழ் தம்பகாமம், இயக்கச்சி, பளை உள்ளிட்ட பகுதிகளில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# காணிகளை வேறு நபர்களுக்கு கையளித்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

### ஜனக பண்டார தென்னக்கோன்

கொழும்பு, ஓக. 31

வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள பிறருக்குச் சொந்தமான காணி நிலங்களை யுத்தம் நிகழ்ந்த கால கட்டத்தில் சட்டவிரோதமாக வேறு நபர்களுக்குக் கையளித்துள்ள அரச அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்விதம் சட்டவிரோதமாகக் காணி நிலங்கள் கையளிக்கப்படுவதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பைப் போன்றே அரச அதிகாரிகளும் கூட அழுத்தங்களை விடுத்துள்ளமை அண்மையில் பாதுகாப்புப் பிரிவுகளுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள பேச்சுக்களின்போது தெரிய வந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக இந்தக் காணி நிலங்களைக் கைவிட்டு வேறு பிரதேசங்களுக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ சென்றுள்ள அந்தக் காணி நிலங்களின் ஆரம்பக் குடியிருப்பாளர்களிடமிருந்து தற்போது இது சம்பந்தமாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் அமைச்சர் தென்னக்கோன் மேலும் தெரிவித்தார். (எ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலயக் கட்டடங்கள் இராணுவத்தின் பாவனையில் நெருக்கடிக்குள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம்

கிளிநொச்சி, ஓக.31

இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள அன்னதான மடம், குருக்கள் விடுதி என்பவற்றை இராணுவத்தினர் ஆலய நிர்வாகத்திடம் இதுவரை ஒப்படைக்காத நிலையில் கிளிநொச்சிக் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வருமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சிக் கந்தசுவாமி ஆலயத்தின் அன்னதானமடம், குருக்கள் விடுதிகள், ஆலயக் கழிப்பறைத் தொகுதிகள், குடிதண்ணீர்க் கிணறு என்பவற்றை இராணுவத்தினர் தமது பயன்பாட்டில் வைத்துக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த ஆண்டு முதல் இவற்றை விடுவித்துத் தம்மிடம் ஒப்படைக்குமாறு பல்வேறு தரப்பினரிடமும் ஆலய நிர்வாகம் கோரிக்கை விடுத்திருந்தது. ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷவுக்கு அனுப்பிய கடிதத்தை ஏற்றுக் கொண்ட அவர் குறிப்பிட்ட பகுதிகளை ஆலய நிர்வாகத்திடம் கொடுத்துதவுமாறு தெரிவித்த போதும் இதுவரை அவை விடுவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இந்த ஆண்டு வருடாந்த உற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதிகளவு பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்களின் தேவைகளுக்கு இங்கு உள்ள வசதிகள் போதுமானதாக இல்லையெனத் தெரிவித்த ஆலய நிர்வாகத்தினர் குறித்த பகுதிகளைத் தற்காலிகமாக வேனும் தந்துதவுமாறு பல தடவை கோரியுள்ளதாகவும் அதற்கான பயன் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் ஆலயக் குருக்கள், உற்சவத்துக்காக அழைக்கப்படும் குருக்கள், தொண்டர்கள் போன்றோர் பிற இடங்களில் வாடகைக்குத் தங்க வைக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதேவேளை, உற்சவ காலத்தில் பத்து நாள்களும் அன்னதானம் வழங்கப்படுகின்ற போதும் அவற்றை ஆலய வெளி வீதியில் வைத்தே வழங்க வேண்டியுள்ளது.

ஆலய உற்சவம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் ஆலயத்தின் கட்டடங்கள் இதுவரை ஒப்படைக்கப்படாமை ஆலய நிர்வாகத்தினருக்கும் பக்தர்களுக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)

## மின்சாரம் இல்லாத சிவபுரம்

வவுனியா, ஓக.31

வவுனியா - மன்னார் வீதியில் அமைந்துள்ள சிவபுரம் கிராமத்துக்கு இதுவரை மின்சார வசதி வழங்கப்படாததால் கிராம மக்கள் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளதாகத் தெரிய வருகின்றது.

பிரதான வீதியில் மின்சார விநியோகம் நடைபெறுகின்ற போதிலும் தமது கிராமம் புறக்கணிக்கப்பட்டு வருவதாக இங்கு வாழும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்திலுள்ள மாணவர்கள் மின்சார வசதி இல்லாமையால் தமது கல்வியை ஒழுங்காகக் கற்க முடியாத அவல நிலையிலுள்ளனர். அத்துடன் இரவு வேளைகளில் அச்சத்துடனேயே இங்கு வாழும் மக்கள் தமது பொழுதைக் கழிக்கின்றனர்.

தமது அவல நிலையைக் கருத்திற் கொண்டு இக் கிராமத்துக்கு விரைவில் மின்சார வசதியை வழங்குமாறு இந்தக் கிராம மக்களும், மாணவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (க)

## அடிக்கல் நடுகை...



அபிவிருத்தியை நோக்கி : வவுனியாவில் அமைக்கப் படவுள்ள பஸ் நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் தனியார் பஸ் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் ரத்நாயக்க உள்ளிட்ட பலர் காணப்படுகின்றனர்.

## காட்டுப் பகுதியில் குடியமர்வு

முல்லைத்தீவு, ஓக.31

முல்லைத்தீவு மாவட்டம் திருமுறிகண்டியைச் சேர்ந்த 125 குடும்பங்கள் சனநடமாட்டமற்ற காட்டுக் குளப் பகுதியில் குடியமர்த்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மக்களைக் குடியமர்த்துவது தொடர்பான கூட்டம் கடந்த 23 ஆம் திகதி திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் இரணைமடு கட்டளைத் தளபதி மற்றும் இராணுவ சிவில் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் அனைவரையும் குறித்த காட்டுப் பகுதியில் குடியமருமாறும் தவறின் இடைத் தங்கல் முகாமில் வைக்கப்பட்டு 10, 20 வருடங்களுக்குப் பின்னரே சொந்த இடங்களில் குடியமர்த்தப் படுவார்களென எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பாகத் தம்மால் எதுவுமே செய்ய முடியாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்தனர். (க)

## பொது நூலகத்தில் சிரமதானம்

வவுனியா, ஓக.31

வவுனியா பொது நூலகத்தில் டெங்கு நோய் பரவாமல் தடுப்பதற்காகச் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி சனிக்கிழமை டெங்கு நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பொது நூலக ஊழியர்களும், இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். இவர்கள் நூலக வளாகப் பகுதியில் காணப்பட்ட டெங்கு நுளம்பு பெருகக் கூடிய வெற்றுப் போத்தல்கள் மற்றும் கழிவுப் பொருள்களை எரித்து அழித்தனர். மற்றும் நீர் தேங்கி நிற்கக் கூடிய பகுதிகள் சீர் செய்யப்பட்டன.

இந்தச் சிரமதானப் பணிகளில் இராணுவத்தினர் முழுவீச்சில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (க-431)


## உடன் விற்பனைக்கு

யாழ் நகர் மத்தியில் 100 வருடங்கள் பழைமை வாய்ந்த வீட்டுக்கட்டடம், கதவு, நிலை, கூரை போன்ற அனைத்துப்பொருள்களுடன் விற்பனைக்குண்டு.

ஈஸ்வரன் ரான்ஸ்போட்
இல.69.கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
TP.0212222813



## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

திருமதி
**நடனராணி ஜெகநாதன்**
(B.Com. Dip.in Edu, S.L.T.S-I)



34 வருட கால ஆசிரிய சேவையில் எமது பாடசாலையில் கடந்த 14 வருடங்களாக அளப்பரிய ஆசிரிய சேவையை ஆற்றி 30.08.2011 முதல் ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி ந.ஜெகநாதன் அவர்களுக்கு எமது உளங்கனிந்த மணி விழா வாழ்த்துக்களையும், பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதுடன் மேலும் பல்லாண்டு காலம் குடும்பத்தினருடன் மகிழ்வுடன் வாழ மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.

(7430)



## திருமண வாழ்த்து



அல்வாயைப் பிறப்பிடமாகவும்
லண்டனை வசிப்பிடமாகவும்
கொண்ட
திரு. திருமதி சபாரத்தினம்
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**பிரதீபன்**
அவர்களுக்கும், அச்சுவேலி
தெற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட
திரு. திருமதி சிவபாதம்
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**தர்விஹாவிற்கும்**

இன்று (31.08.2011) புதன் கிழமை வல்வை சிவன் முத்துமாரி அம்மன் துணை கொண்டும் அச்சுவேலி தெற்கு உலவிற்குளம் சித்திவிநாயகர் துணை கொண்டும் பிரீஸ் ரெசிடென்சி (ஜென்னீஸ் ஹோட்டல்) திருச்சியில் நடைபெறும் திருமண நன்நாளில் "இருவரும் நறுமணம் வீசிடும் மலர்களாய் நாளும் புகழ் மணம் பரப்பி" ஒரு கணமும் பிரியாது கனியும் சுவையுமாய் கலந்து சுவைக்க மதிவளம் மிக்க மழலைச் செல்வங்களைப் பெற்று என்றும் மஞ்சள் குங்குமத்துடன் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மணமகள் குடும்பத்தினரான
பெரியம்மா, சித்தப்பா, சித்தி, பிரேமன்
மாமா, மாமி, சூரிமாமா, மாமி
(லண்டன்), மச்சான்மார், மச்சாள்மார்.

தகவல்:
திருமதி சத்தியவிமலாதேவி
தம்பித்துரை
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.



## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
No 15, Sirampiyadi Lane, (off Stanly Road) Jaffna. 0212228250

A/L 2011 பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

05ம் திகதிக்கு முன் பதிவுசெய்துகொள்ளவும். 80% கட்டணக்கழிவுடன்...

| Course | Duration | Old fee | Fee |
|---|---|---|---|
| Diploma in Microsoft office | 3 Months | ~~10000~~ | 2000 |
| Diploma in Desktop Publishing | 3 Months | ~~10000~~ | 2000 |
| Diploma in Web page Designing | 3 Months | ~~10000~~ | 2000 |
| Diploma in Graphic Designing | 3 Months | ~~10000~~ | 2000 |
| Diploma in Hardware Engineering | 3 Months | ~~10000~~ | 2000 |
| Diploma in Computerized Accounting | 3 Months | ~~15000~~ | 3000 |
| Diploma in Computer Science | 4 Months | ~~12500~~ | 2500 |
| Hon. Diploma in Computer Science | 4 Months | ~~12500~~ | 2500 |
| Hon. Diploma in Programming | 3 Months | ~~10000~~ | 2000 |
| AUTO CAD | 3 Months | | 2000 |

*Advanced Diploma Courses*

| Course | Old fee | Fee |
|---|---|---|
| Diploma in Video Editing | ~~15000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~15000~~ | 3000 |
| Diploma in Networking | ~~15000~~ | 3000 |

Tally — You can Change Transaction Date

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 31/08/2011
Batch II - 02/09/2011
Batch III - 03/09/2011
Batch IV - 04/09/2011
09AM or 3PM

வரையறையற்ற செய்முறைபயிற்சி, ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பள்ளிமுனை மீனவர்கள் மீது கடற்படையினர் தொடர்ந்தும் கெடுபிடி





மன்னார், ஓக.31

மன்னார் பள்ளிமுனைக் கடற்பரப்பில் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்டுவரும் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அந்தப் பகுதி மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அரசினால் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ள போதிலும் பாஸ் நடைமுறையை வடக்கில் அரசு தளர்த்தாமையால் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழும் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குவதாகவும் இவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

பாஸ் நடைமுறையினால் தமக்கு நேரவிரயம் ஏற்படுவதோடு கெடு பிடிகளுக்கு மத்தியில் கடலுக்குச் செல்ல வேண்டியுள்ளதாக இவர்கள் கூறுகின்றனர்.

பாஸ் இல்லை அல்லது திகதி முடிந்து விட்டது என்றால் எங்களைக் கடலுக்குள் செல்ல விடமாட்டார்கள். அத்துடன் படகுகளில் அதிகளவு மீன்களைக் கொண்டு வந்தால் கடற்படையினர் அதற்கும் ஒரு விசாரணை வைக்கின்றனர்.

இவ்வாறு தாம் தொடர்ந்தும் பல சிரமங்களுக்கு ஆளாகின்ற போதிலும் அதிகாரிகள் எவரும் தமக்குக் கை கொடுக்கவில்லையெனவும் இவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க-601)

# இதுவரை மின் இணைப்பு இல்லாத அரிப்பு நூறு வீட்டுத்திட்டக் கிராமம்



மன்னார், ஓக.31

மன்னார் அரிப்பு நூறு வீட்டத் திட்டக் கிராமத்திலுள்ள வீடுகளுக்கு மின் இணைப்புக்கள் இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிராமத்தில் 141 குடும்பங்கள் வசிக்கின்றன. இரவில் இருள் சூழ்ந்து காணப்படுவதால் குறித்த கிராம மக்கள் உறவினர்களின் வீடுகளுக்குச் செல்வதற்குக் கூடத் தயங்குகின்றனர்.

இதேவேளை நெல்சிப் திட்டத்தின்கீழ் தமது கிராமத் துக்கு வரவேண்டிய 100 மீற்றர் நீளம் கொண்ட இரண்டு வீதிகள் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டதாகவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் மீள்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில் தமது கிராமத்துக்கென எவ்வித அபிவிருத்திப் பணிகளும் அரசால் முன்னெடுக்கப்படவில்லை எனவும் ஆனால் தமக்கு அயலிலுள்ள கிராமங்களில் சகல அபிவிருத்திப் பணிகளும் இடம்பெற்று வருவதாகவும் இந்த மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

குறித்த கிராமத்துக்கு அமைச்சர்கள் வந்து போனாலும் தமக்குப் பயன் ஏதும் கிடைப்பதில்லையெனவும் மேலும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்தக் கிராமத்தில் முசலிப் பிரதேச சபையினர் தெருவிளக்குகளைப் பொருத்திய போதிலும் அவை தற்போது ஒளிராத நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-601)

# ஏ-9 வீதியில் வாகன நெரிசல்

கிளிநொச்சி, ஓக.31

ஏ-9 வீதியின் திருத்த வேலைகள் தற்போது நடைபெறுவதால் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீதியின் ஒரு பக்கத்தில் வேலைகள் நடைபெறுவதால் மறுபக்கத்தில் மாத்திரமே வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. இதனாலேயே வாகன நெரிசல் காணப்படுகின்றது.

கிளிநொச்சி, மாங்குளம், பரந்தன், கனகராயன்குளம் ஆகிய பகுதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த இடங்களில் சிலர் வாகனங்களை வேகமாகச் செலுத்துவதைக் காணமுடிகின்றது. இதனால் ஏனைய பயணிகள் சிரமங்களுக்கு ஆளாவதையும் காணமுடிகின்றது.

வீதியின் திருத்த வேலைகள் இடம்பெறும் இந்த வேளையில் வாகனச் சாரதிகள் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டுமெனப் பலரும் கோரிக்கை விடுக்கின்றனர். (க-426)

# உதவிக்கல்விப் பணிப்பாளராக சக்திதரனுக்குப் பதவி உயர்வு

துணுக்காய், ஓக.31

துணுக்காய் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப்பிரிவின் உதவிக் கல்விப்பணிப்பாளராக கந்தசாமி சக்திதரன் பதவி உயர்வுடன் நியமனம் பெற்றுள்ளார். வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் கடந்த 15 ஆம் திகதி இந்தப் பதவி உயர்வு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளது.

முறிகண்டி இந்து வித்தியாலயத்தில் ஐந்து வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் நான்கு வருடங்களாக மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கணக்கியல் பாட ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். அதனைத்தொடர்ந்தே உதவிக் கல்விப் பணிப்பாளராக சக்திதரன் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளராகவும், வன்னிப்பிரதேச இணைப்பாளராகவும் இவர் செயற்பட்டு வருகிறார். வணிகமாணிப்பட்டதாரியான இவர் முதுகலை வர்த்தகமாணிப் பட்டப்படிப்பைத் தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-14)

# கிளிநொச்சியில் வயிற்றோட்டத்தால் சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரிப்பு

கிளிநொச்சி, ஓக.31

கிளிநொச்சியின் சில பகுதிகளில் வயிற்றோட்ட நோயினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கிளிநொச்சி, அக்கராயன் மருத்துவ மனையில் வயிற்றோட்ட நோய்க்குச் சிகிச்சை பெறும் நோயாளர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை காரணமாகவே இந்த நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதாரக் கேடான குடிதண்ணீரினால் இந்த நோய் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாக உள்ளன. எனவே கொதித்தாறிய நீரைப் பருகுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதார நடைமுறைகளைத் தவறாது கடைப்பிடிக்குமாறு மருத்துவர்கள் பொது மக்களுக்கும், நோயாளர்களுக்கும் ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

அத்துடன் இந்தப் பிரதேசத்தில் மணியம்குளம் பகுதியிலேயே அதிகமான நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வயிற்றோட்ட நோயால் கடந்த காலங்களிலும் பலர் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# இந்திய மீனவர் அத்துமீறலை தடுப்பது தொடர்பான கூட்டம்

மன்னார், ஓக.31

தலைமன்னார் மற்றும் மன்னார் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பது தொடர்பான கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி வட பகுதியில் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கடற்பரப்புகளில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதால் உள்ளூர் மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

அத்துடன் அவர்களின் வாழ்க்கையே கேள்விக் குறியாகியுள்ளது. பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் இவர்கள் இந்திய மீன வர்களின் அத்துமீறலால் தமது அன்றாட வருமானத்தை இழந்து நிற்கின்றனர்.

ஒரு வாரத்தில் மூன்று நாள்களுக்குள் 100 இக்கும் மேற்பட்ட இந்திய மீனவர் படகுகள் மன்னார் கடற்பரப்பினுள் நுழைகின்றன. இதுவரை 2000 இக்கும் மேற்பட்ட படகுகள் அத்துமீறியுள்ளதாக வடக்கு மீனவ கடற்றொழிற் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

தாம் ஒரு மாதகாலத்தில் பிடிக்கும் மீன்களை அவர்கள் ஒரு நாளிலேயே பிடித்துச் செல்வது தம்மை ஒருமாதத்துக்குக் கஷ்டத்தில் ஆழ்த்துவதாகவும் இவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு ஒரு தீர்வு காணுமுகமாகவே இந்தக் கூட்டம் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

# வவுனியா பிரதேச கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

வவுனியா, ஓக.31

வவுனியா பிரதேச செயலகத்தால் பிரதேச கலை இலக்கிய விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் விரைவில் நடத்தப்படவுள்ள பிரதேச கலை இலக்கிய விழாவில் வைத்து வழங்கப்படும் என வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

போட்டிகளும், அவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர், பாடசாலை விவரம் முறையே வருமாறு:-

**கட்டுரை - கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம் - க.சுஜிதா (விபுலானந்தாக் கல்லூரி), இரண்டாமிடம் - ந.பாத்திமா சஸ்மிதா (முஸ்லிம் மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் - க.சித்தாரா, த.கோபிகா (விபுலானந்தா கல்லூரி).

**கட்டுரை - சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம் - செ.கிசாந்தினி (பூந்தோட்டம் மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் - ஆ.ஜெசிதா (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - க.துவாரகா (விபுலானந்தா கல்லூரி), மு.சமீனா (முஸ்லிம் மகா வித்தியாலயம்).

**கவிதை - கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம் - க.நிரோஜா (விபுலானந்தா கல்லூரி), இரண்டாமிடம் - ரா.கஜலக்சி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்), மூன்றாமிடம் - சி.தமிழ்ச்செல்வன் (கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம்), சி.யூலியானா (பூந்தோட்டம் மகா வித்தியாலயம்).

**கவிதை சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம் - பா.சந்துஜா (விபுலானந்தா கல்லூரி), இரண்டாமிடம் - ஆ.கவிதா (கல்மடு மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் த.மேனகா (கல்மடு மகா வித்தியாலயம்).

**கவிதை பாடும் போட்டி சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம் - ஸ்.சர்மிலா (பூந்தோட்டம் மகா வித்தியாலயம்), இரண்டாமிடம்- ஞா.பிறிஸ்கா (பூந்தோட்டம் மகா வித்தியாலயம்).

**கவிதை - திறந்த பிரிவு**

முதலாமிடம் - த.ஐங்கரன் (இல.29 கோவில் வீதி, குருமண்காடு), இரண்டாமிடம் - ஞா.ஞானலோகேஸ்வரி (இல.95/12, பண்டாரிக்குள வீதி, வேப்பங்குளம்), மூன்றாமிடம் - ப.க.சிதம்பரப்பிள்ளை (இல.60/22, மதவுவைத்தகுளம் மூன்று முறிப்பு).

**கவிதை - ஆங்கிலம் திறந்த பிரிவு**

முதலாமிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம் - நல்லதம்பி செல்வராஜா (நொச்சிமோட்டை ஓமந்தை).

**பாடலாக்கம் - திறந்த பிரிவு**


முதலாமிடம் - த.ஐங்கரன் (இல. 29, கோவில் வீதி, குருமண்காடு), இரண்டாமிடம் - ச.லலிதாத்மிகா (95/12, பண்டாரிக்குள வீதி, வேப்பங்குளம்), மூன்றாமிடம் - செ.சுபாசினி (தேசிய கல்வியியற் கல்லூரி). (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரங்களினலான கிரகம் கண்டுபிடிப்பு

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இத்தாலி, ஜேர்மனி, இங்கிலாந்து நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் சர்வதேச விஞ்ஞானிகள் குழுவை அமைத்துள்ளனர்.

அவர்கள் செஷிர் நகரில் உள்ள வானிலை ஆய்வு மையத்தில் இருந்து சக்தி வாய்ந்த டெலஸ்கோப் மூலம் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது வான்வெளி வீதியில் வழக்கத்தைவிட வித்தியாசமாக ஒரு நட்சத்திரத்தைக் கண்டுபிடித்தனர். அதற்கு புல்சர் எனப் பெயரிட்டு ஆராய்ச்சிசெய்தனர். அது ஒரு புதிய கிரகம் எனக் குறிப்பிடுகின்றனர். இந்தக் கிரகம் 10 மைல் சுற்றளவுக்கு ரேடியோ அலைகளை உமிழ்கின்றன. எனவே இந்தக் கிரகம் வைரத்தால் ஆன பாறைகளைக் கொண்டது என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இது பூமியில் இருந்து 4 ஆயிரம் ஒளியாண்டு தூரத்தில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.



# அமேசன் ஆற்றுக்கு அடியில் மற்றொரு ஆறு

பிரேசில் நாட்டின் அமேசன் ஆற்றின் கீழே 4 கிலோ மீற்றர் ஆழத்தில் வேறொரு ஆறு ஒடுவதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பிரேசில் நாட்டில் உள்ள அமேசன் காடு மிகப் பிரபலமானது.

இந்தக் காட்டில் வளைந்து நெளிந்து செல்லும் நீண்ட நதி உள்ளது. கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் காட்டில் பல இடங்களில் துளை யிட்டு பெற்றோல் எடுக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். அப்போது பலதரப்பட்ட தட்ப வெப்ப நிலைகள் தோன்றியதை அடுத்து ஆராய்ச்சியின் திசை திரும்பியது. அதன் காரணத்தைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சிகளை மேற்கொண்டபோது அமேசன் காட்டின் ஆறு போல 4 கிலோ மீற்றர் ஆழத்தில் மற்றோரு ஆறு ஒடுவதைக் கண்டறிந்தனர். ரியோ ஹம்சா என்று பெயரிடப்பட்டுள்ள இந்த நிலத்தடி ஆறு அமேசன் ஆற்றை ஒத்து அதே அள வில், அதே திசையில் செல்கிறது.

ஆனால் அமேசன் நதியை விட அளவில் குறுகிக் காணப்படுகிறது. நிலத்தடி ஆறு ஆண்டிஸ் என்ற இடத் தில் ஆரம்பித்து சோலி மேயிஸ் கடந்து நேரடியாக அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கிறது. அமேசன் ஆற்றை விட குறைந்த வேகத்தில் பயணிக்கும் ரியோ ஹம்சா 2000 மீற்றர்களுக்கு அமேசன் ஆற்றைப் போலவே பாறைகளின் இடுக்குகள் வழியாக செல்கிறது.

அதன்பின் தன் திசையை மாற்றிக்கொண்டு குறுகிய அளவில் செல்கிறது. நிலத்தடி ஆறு குறித்து தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற் கொண்டு வருகிறோம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றோம்.

# சமிஞ்ஞை கொடுத்து இனத்தைக் காக்கும் வண்ணத்துப்பூச்சிகள்

அழகிய வண்ணத்துப்பூச்சிகள் ஆபத்துக் காலங்களில் அருகில் இருக்கும் தங்கள் இனத்துக்கு சமிஞ்ஞை கொடுத்து சாதுர்யமாகத் தப்பவைக்கும் முறையைக் கண்டு ஆராய்ச்சியாளர்கள் வியந்து போயுள்ளனர். ஐரோப்பிய பூச்சிஇன ஆராய்ச்சியாளர்கள் வண்ணத்துப்பூச்சிகள் குறித்த ஆய்வை மேற்கொண்டனர். தொடர்ந்து அவற்றின் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டன. அவற்றின் சாதுர்யமான செயல்கள் பிரமிப்பூட்டுவதாக உள்ளன என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். வண்ணத்துப்பூச்சிகள் அழகிய வண்ணமயமான சிறகுகளைப் பலவிதமாக அசைத்து அருகில் இருக்கும் தங்கள் இனத்துக்கு ஆபத்துக் குறித்த எச்சரிக்கையை உணர்த்துகின்றன. இதன்மூலம் உடனடியாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.



உலகில் முதன்முறையாக இத்தகைய ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. சி.என்.ஆர்.எஸ் பரிஸ் அருங்காட்சியக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இங்கிலாந்து எக்சிடர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இணைந்து மேத்யூ ஜோரான் தலைமையில் இந்த வித்தியாசமான ஆய்வை மேற்கொண்டனர். வியக்க வைக்கும் வண்ணத்துப்பூச்சிகளின் செயற்பாடுகளைப் பற்றி அவர்கள் கூறியதாவது:

வண்ணத்துப்பூச்சிகள் நுண்ணிய உடலும் பெரிய அழகிய சிறகுகளும் கொண்டவை.

உலகில் உள்ள மற்றப் பூச்சிகளில் இருந்து மாறுபட்டுக் காணப்படுகிறது. அரிய வண்ணங்களைக்கொண்ட சிறகுகளை அசைத்து அருகில் இருக்கும் தங்கள் இனத்துக்கு சமிஞ்ஞை கொடுக்கின்றன. ஆபத்து நெருங்குவதை குறிப்பால் உணர்த்தி சாமர்த்தியமாகத் தப்புகின்றன. இவற்றின் இந்தச் செயற்பாடுகள் முலேரியன் மிமிக்கிரி எனப்படுகிறது. அமேசன் காடுகளில் அதிக அளவில் காணப்படும் ஹெலிகோனியஸ் நுமாட்டா என்ற வகை வண்ணத்துப்பூச்சிகளே இத்தகைய முறையை அதிகம் பின்பற்றுவது தெரியவந்துள்ளது.

ஒரே குரோமோசோம் உள்ள இந்த வண்ணத்துப் பூச்சிகளின் உடலில் ஏராளமான ஜீன்கள்தான் அவற்றின் சிறகுகளைக் கட்டுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு ஆற்றல்களுக்குக் காரணமாக உள்ளன. இத்தகைய ஜீன்கள் சூப்பர்ஜீன் எனப்படுகிறன.

உலகம் முழுவதும் உள்ள அனைத்து வண்ணத்துப்பூச்சிகளுக்கும் சூப்பர் ஜீன் அமைப்பு இருக்காது.

ஜீன்கள் ஒன்றாக இருந்தாலும் ஒவ்வொரு வண்ணத்துப்பூச்சியின் செயற்பாடுகளும் வெவ்வேறாக இருக்கும். இயற்கையில் காணப்படும் சில பூக்களிலும், உயிரினங்களில் நத்தையின் உடலிலும் இத்தகைய ஜீன்கள் உள்ளன. அவற்றின் ஒடுகள் மற்றும் நிறத்துக்கு இந்த ஜீன்கள்தான் காரணம்.

# விரதத்தின் பயன்பாடு

நோன்பிருக்கும்போது [விரதம்] மேலதிகமாகச் சேகரிக்கப்பட்டுள்ள கொழுப்பு, காபோவைதிரேட்ஸ் மற்றம் சர்க்கரையைப் பயன்படுத்தி உடம்பானது தனக்குத் தேவையான சக்தியைத் தயாரித்து கொள்கின்றது. இந்தக் கைங்கரியத்தில் ஈடுபடும் முக்கிய உறுப்பு எமது ஈரலாகும். அது கொழுப்பை கெட்டோன் பகுதிகள் என்று கூறப்படும் இரசாயனங்களாக மாற்றிவிடுகின்றது. இவை மூன்று வகையான நீரில் கரையும் தொகுதிகளாகும். இவை பின்னர் சக்தியைத் தயாரிக்கும் மூலகங்களாகின்றன.

விரதமிருப்பதால் மிக முக்கிய பயன்பாடு என்னவென்றால் உடலில் ஏற்படும் விஷச் சேர்க்கைத் தன்மையை இல்லாதொழிப்பதாகும். உடலில் வழமையான செயற்பாடுகளின்போது பெருங்குடல், ஈரல், சிறுநீரகம், சுவாசப்பை மற்றும் சில சுரப்பிகள் மற்றும் சருமம் ஆகியவை விஷப் பொருள்களை வெளியேற்றி அல்லது சமநிலையாக்கி விஷச் சேர்க்கையை இல்லாதொழிக்கின்றன.


இந்தச் செயற்பாடானது விரதத்தின்போது உடற்கொழுப்பை உடைத்து நிர்மூல மாக்குவதால் வேகமடைகின்றது. இரசாயனப் பொருள்கள் மற்றும் விஷப்பொருள்கள் உணவிலிருந்து அல்லது சுற்றுச்சூழலிலிருந்து எடுக்கப்பட்டு கொழுப்பில் சேர்மானமாக்கப்பட்டவை விரதத்தின்போது விடுவிக்கப்படுகின்றன. விரதமானது [நோன்பு] ஒரு வகையில் அல்ல பல வகைகளில் மனம், உடல் மற்றும் ஆன்மாவுக்கு சுகமளிக்கும் தன்மையைக் கொண்டுள்ளது.

டாக்டர் நொரீன் ஏ.காஸெம்

# கப்பல்கள் தண்ணீரில் மிதப்பதற்கு காரணம் என்ன?

ஓர் ஊரே நகர்ந்து செல்வது போன்ற கப்பல் தண்ணீரில் மிதப்பது எப்படி என்ற வியப்பு எமக்கு உண்டு.

சிறிய கப்பல்கள், பெரிய கப்பல்கள் என்ற வித்தியாசமின்றி எல்லாக் கப்பல்களும் அதிக எடை கொண்டவை. ஆகவே ஒரு கப்பல் தண்ணீரில் இருக்கும் போது அதன் உடற்பகுயின் குறிப்பிட்டளவு தண்ணீரில் அமிழ்ந்திருக்கும். அதாவது கப்பலின் எடைக்குச் சமமான தண்ணீர் இடம்பெயரும் வரை அதன் உடற்பகுதி தண்ணீரில் அமிழும். ஒரு கப்பலின் எடையைக் கூறுவதற்குப் பதிலாக அது இடம்பெயரச் செய்யும் தண்ணீரின் எடையைக் கூறுகிறார்கள்.



அமிழ்ந்துள்ள கப்பலின் ஒவ்வொரு பகுதியையும் தண்ணீர் அழுத்துகிறது. தண்ணீரில் கிடப்பு நிலையில் இருந்து ஏற்படும் அழுத்தங்கள் கப்பலின் உடற்பகுதியை நசுக்குகின்றன. ஆனால் அவை இந்த நடைமுறையில் ஒன்றையொன்று அமிழ்த்திச் சமநிலையை ஏற்படுத்துகின்றன.

செங்குத்தான போக்கில் உள்ள அழுத்தங்களின் சக்தியே கப்பலின் எடையை ஒரு சமநிலைக்குக் கொண்டுவருவதாக ஆக்கிமிடிஸ் கருதினார். காற்றில் அமிழ்ந்துள்ள பொருள்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும். கியாஸ் உள்ளிட்ட எல்லாத் திரவங்களுக்கும் ஆக்கிமிடிஸின் கொள்கை பொதுவானதே. உதாரணமாக பலூனை எடுத்துக்கொள்வோம். அது தனது பருமனுக்குச் சமமான எடையை விட இலேசாக இருந்தால்தான் பறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றப்பட்டும் மக்கள் மீள்குடியமர்வு இன்னும் இல்லை

அம்பாறை, ஓக.31

அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் கிராமங்களில் யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட மிதி வெடிகளை அகற்றும் பணிகள் பூர்த்தி யடைந்து 6 மாதங்கள் கடந்துவிட்ட போதிலும், அங்கிருந்து இடம்பெயர்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்கள் இன்னமும் மீள்குடியமர்த்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசால் இதுவரை மீள்குடியேற்றப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில், சில குடும்பங்கள் தமது வாழ்வாதாரம் கருதி தாமாகவே அங்கு சென்று இருப்பிடம் உட்பட அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மீளக்குடியமர்ந்துள்ளன.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்கள் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி யுத்த சூழல் காரணமாக அங்கிருந்து வெளியேறி அயல் கிராமங்களில் அகதிகளாகத் தஞ்சம் பெற்று வாழ்ந்துள்ளனர்.

இது தொடர்பில் கஞ்சி குடிச்சாறு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செல்வராசா கமலேஸ்வரன் தெரிவித்ததாவது:

மிதிவெடிகள்அகற்றப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை மீள்குடியமர்வு நடைபெறவில்லை.

மீள் குடியேற்றமின்றி தொடர்ந்தும் அகதிகளாகவே உள்ள தமது கிராம மக்களுக்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட உணவு நிவாரணம் கூட ஒரு வருடத்திற்கு முன்னர் நிறுத்தப்பட்டுவிட்டது.

எமது மீள்குடியமர்வு என்பது இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது.

அரசால் மீள்குடிமர்வு செய்யப்படாத நிலையில் தன்னார்வத் தொண்டர் அமைப்புகள் கூட தங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க முன்வருவதாக இல்லை- என்றார்.

இந்தக் கிராமங்களின் மீள்குடியமர்வு தொடர்பாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனிடம் கேட்டபோது, எதிர்வரும் பருவ மழைக்கு முன்னதாக இந்தக் குடும்பங்களை மீள்குடியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனப் பதிலளித்தார் எனபி.பி.சி.செய்தி வெளியிட்டுள்ளது.

## இந்திய அரசின் நிதியில் 4000 வீடுகள்

மஸ்கெலியா, ஓக.31

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்காக இந்திய அரசின் முழுமையான நிதியுதவியுடன் சுமார் நான்காயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் இந்தக் குடியிருப்புக்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த வீடுகள் ஒவ்வொன்றுக்கும் சுமார் பத்து லட்சம் ரூபா செலவிடப்படும். இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இ.தொ.காவின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பொன் கணேசன் தெரிவித்துள்ளார்.



திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுகூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## பொலிஸாரைத் தாக்கிய குற்றச்சாட்டில் 9 பேர் கைது

அம்பாறை,ஓக.31

அம்பாறை, வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற மர்ம மனிதர்கள் கலவரத்தின்போது பொலிஸாரைத் தாக்கியமை மற்றும் அமைதிக்குப் பங்கம் விளைவித்த குற்றச்சாட்டுக்களில் 9 பேர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவின் கீழுள்ள வளத்தாப்பிட்டி பிரதேசத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் மர்ம மனிதர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொதுமக்களால் பிடித்துவைக்கப்பட்ட மூவரையும் விடுவிப்பதற்காக சம்மாந்துறை பொலிஸார் சென்றிருந்தபோது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதன்போது சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட நான்கு பொலிஸார் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட 9 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ச)

## விவசாய அபிவிருத்தித் திட்டம் இந்த வருடம் நிறைவுபெறும்

### திட்டத்தின் பணிப்பாளர் நீல் பண்டார தெரிவிப்பு

குருநாகல், ஓக.31

மாவட்டத்திலுள்ள இருபத்தையாயிரம் விவசாய குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டம் இந்த வருடம் டிசெம்பர் மாதத்துடன் முடிவடையவுள்ளது என திட்டத்தின் பணிப்பாளர் நீல் பண்டார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயச் சங்கங்களைச் சக்தியடையச் செய்தல், நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனர் நிர்மாணம் செய்தல், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துதல், வறிய விவசாயக் குடும்பங்களுக்கு மேலதிக வருமானம் ஈட்டுவதற்கான வழி வகைகளைக் காட்டிக் கொடுத்தல், விவசாய உதவிச் சேவையை சக்தியடையச் செய்தல், நீர் முகாமைத்துவம் மற்றும் இதனை முன்னெடுத்துச் செல்ல வசதிகளை ஏற்படுத்தல் போன்ற அம்சங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வேலைப் பணிகளில் தற்பொழுது 85 சதவீதமானவை முடிவடைந்துவிட்டன.

இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள முழுமையான நிதி 5039 மில்லியன் ரூபாவாகும். இதில் 3867 மில்லியன் ரூபா ஜப்பான் நாட்டு வங்கியின் கடனுதவியாகும். மிகுதி 1172 மில்லியன் ரூபா அரசால் ஒதுக்கப்பட்டதாகும் -என்றார்.

## காட்டு யானையின் அட்டகாசத்தால் வீடுகள் சேதம்

மட்டக்களப்பு,ஓக.31

மட்டக்களப்பு, பின்சேனை பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காட்டு யானை புகுந்து அங்குள்ள குடிமனைகளுக்கு சேதம் விளைவித்ததில் ஐந்து வீடுகள் சேதமடைந்துள்ளதாக பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கேதாரம் தெரிவித்துள்ளார்.

கடந்த எட்டு மாதங்களில் காட்டு யானைகளின் அட்டகாசத்தில் 150 வீடுகளுக்கு மேல் சேதமடைந்துள்ளன. 4 பேர் காயமடைந்துள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாளும் அச்சத்தின் மத்தியில் இரவுப்பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)

## பாதுகாப்புக் கடவையை அமைக்குமாறு கோரிக்கை

மூதூர், ஓக. 31

திருகோணமலை, பூம்புகார், பாலையூற்று ஊடாகச் செல்லும் ரயில் பாதைக்குப் பாதுகாப்புக் கடவை அமைக்குமாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜரை போக்குவரத்து அமைச்சர், ரயில்வே பொது முகாமையாளர் ஆகியோருக்கு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் அனுப்பிவைத்துள்ளது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

திருகோணமலை, பூம்புகார், பாலையூற்று பிரதேசம் ஊடாகச் செல்லும் கொழும்பு-திருகோணமலை ரயில் பாதை நாற்பது வருடங்கள் பழைமை வாய்ந்தது. பொதுமக்கள் பாதுகாப்பற்ற ரயில் பாதையைக் கடந்தே செல்ல வேண்டியுள்ளது.

இதனால் பொதுமக்கள் ரயிலில் மோதுண்டு விபத்துக்குள்ளாகும் சம்பவங்களும் நிகழ்ந்து வருகின்றன. எனவே, மூவின மக்களும் பயணிக்கும் இந்தப் பாதைக்குத் தாமதமின்றிப் பாதுகாப்புக்கடவை ஒன்றை அமைக்க ஆவன செய்யுமாறு கோருகின்றோம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பிணையில் விடுவிக்க பொலிஸாருக்கு லஞ்சம்

### நுவரெலியாவில் இருவர் கைது

நுவரெலியா, ஓக.31

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரு சந்தேகநபர்களைப் பிணையில் விடுவிப்பதற்காக பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு லஞ்சம் வழங்க முயன்ற இருவரை நுவரெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும், தங்கநகைகள் திருடப்பட்ட சம்பவமொன்று தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்தியாவைச் சேர்ந்த பெண்ணொருவரையும், இலங்கையைச் சேர்ந்த ஒருவரையும் பிணையில் விடுவிப்பதற்கே லஞ்சம் கொடுக்க முயன்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றத்திற்கு முன்பாக வைத்து இந்தப் பொலிஸ் அதிகாரிக்குப் பத்தாயிரம் ரூபாவை லஞ்சமாக வழங்க முற்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இவர்கள் தொடர்பான விசாரணைகள் நுவரெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கமல்ரணவீர பணிப்புரையின் கீழ் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரி கே.ஜீ.ஜயவீர தலைமையில் நடைபெற்றுவருகின்றன. (ச)

## ஆசிரியர் இடமாற்றத்தை முன்னெடுக்க நடவடிக்கை

மட்டக்களப்பு,ஓக.31

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் 2012ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக வலயமட்ட இடமாற்றச் சபைகளை செப்ரெம்பர் மாதத்துக்கு முன் நிறுவுமாறும் சகல இடமாற்றங்களும் இடமாற்றச் சபைகள் ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் என்.ஏ.ஏ.புஷ்பகுமார அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அவர் சுற்றுநிருபங்களை அனுப்பி வைத்துள்ளார். இந்த சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சகல இடமாற்றங்களிலும் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை, மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை ஆகியவை பின்பற்றப்பட வேண்டும். அதேவேளை, வலயமட்ட, மாகாணமட்ட ஆசிரியர் இடமாற்றங்கள் யாவும் 2012 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆகவே, எதிர்வரும் ஒக்ரோபர் 30 ஆம் திகதிக்கு முன்னர் இடமாற்றம் தொடர்பாக உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டு, நவம்பர் 30ஆம் திகதிக்கு முன் மேன்முறையீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன் இறுதி முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே இடைநிறுத்தப்பட்டுள்ள சகல இடமாற்றங்களும் இடமாற்ற சபைகள் ஊடாகவே ஒழுங்குபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இடமாற்ற சபைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கு அங்கத்துவம் வழங்கப்படுவதை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உறுதி செய்ய வேண்டும். -இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


**மேடம்:**
சேமிக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு, ஏதாவது ஒரு வகையில், செலவு ஏற்படலாம். செய்ய நினைத்த வேலை ஒன்றை சோம்பலால், மாற்றி அமைப்பீர்கள். எதிலும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என பேசுவதால், மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தியை கேட்கலாம்.


**இடபம்:**
உங்களின் பழமைய கதைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். செய்த காரியம் ஒன்றில், முழுமையான திருப்தி கிடைக்காமல் அதிருப்தி அடையலாம். உறவினர்கள் சிலரை கடும் வார்த்தைகளால் விமர்சிக்கலாம். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு, நீங்கள் பொறுப்பேற்கலாம். வாக்குக் கொடுத்த ஒருவர், காப்பாற்றாமல் கையை விரிக்கலாம்.


**மிதுனம்:**
குதர்க்கமாகப் பேசும் சிலரிடமும், கனிவாகப்பேசி, காரியம் சாதிப்பீர்கள். முன்பின் பார்த்திராத ஒருவரின் உதவி கிடைக்கும். நண்பர்கள் உங்களைப் பார்த்து, பொறாமைப்படலாம். பல மணி நேரமாகும் என, நினைத்த காரியம் ஒன்று, சுலபமாக முடிந்து விடும். மகிழ்ச்சி பெருகும் நாள். நடக்குமோ, நடக்காதோ என, சந்தேகத்தில் இருந்த ஒரு விடயம் நடக்கலாம்.


**கடகம்:**
மனக்குறைகள் அதிகரிக்கும். மற்றவர்கள் செல்வாக்கைப் பார்த்து ஆதங்கம் அடைவீர்கள். திடீரென சந்திக்கும் சிலரால் செலவு ஏற்படலாம். அவசர வேலை ஒன்றை முடிக்க, அங்கும் இங்கும் அலையலாம். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். விமர்சனங்களைத் தவிர்க்கவும்.


**சிங்கம்:**
எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். விலை மதிப்பு மிக்க பொருள் ஒன்றை வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். யாருக்காகவும் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் உறுதியுடன் செயற்படுவீர்கள். நாளை வரும் என, நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவம் பெறலாம்.


**கன்னி:**
குடும்ப உறுப்பினர்கள், உங்கள் தலையில் சுமைகளைச் சுமத்தி விட்டு, அவர்கள் தப்பித்துக் கொள்ளலாம். அவசரப்பட்டு சில முடிவுகளை எடுத்துவிட்டுப் பின்னர் அதற்காக வருத்தமடைவீர்கள். நண்பர்கள் சிலரின் தந்திரமான செயற்பாடுகளை அறிந்து கொள்வீர்கள். ஒருவர் உதவி செய்ய முன்வந்தும் அதை வேண்டாம் என, மறுப்பீர்கள்.


**துலாம்:**
அலைச்சல் இல்லாமல், இருந்த இடத்திலிருந்தே தொலைபேசி மூலம், சில வேலைகளை முடிப்பீர்கள். உங்களிடம் உதவி பெற்ற ஒருவர் மனதாரப் பாராட்டலாம். பெற்றோர் வழியில் பெருமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். நிலம், பூமி வாங்கும் விவகாரங்களில் முன்னேற்றம் உண்டு. மனதில் ஊக்கம், உற்சாகம் குடிகொள்ளும்.


**விருச்சிகம்:**
கடன் மிகுதிகள் எளிதில் வசூலாகும். மனக்குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த பிரச்சினை ஒன்று, நல்ல விதமாக முடிவுக்கு வரும். பெண்கள் பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம். உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். சவால்களைச் சந்திக்கும் நாள்.


**தனுசு:**
மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காக, சில ஆடம்பரச் செலவுகளைச் செய்வீர்கள். நண்பர் ஒருவரின் தயவில், சில காரியங்களை முடிப்பீர்கள். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளுக்காக அலையலாம். மாற்று மதத்தினர் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. ஏமாறாமல் இருக்க எதிலும் எச்சரிக்கை அவசியம்.


**மகரம்:**
நண்பர்கள் அல்லது உறவினர்கள் சிலர் தலையீட்டால், உங்களின் வேலைகளில் இடையூறு ஏற்படலாம். என்ன தான் பொறுப்பாகச் செயற்பட்டாலும், ஏதாவது விமர்சனங்களுக்கு ஆளாகலாம். ஆதாயமில்லாத விடயங்களில் தலையிட்டு, அவதிக்கு ஆளாகலாம். சிலரைச் சந்திக்க முற்பட்டு, அது முடியாமல் போகலாம்.


**கும்பம்:**
எதிலும் ஏற்றமான பலன்களைக் காணும் நாள். உறவினர்கள் இடையே ஏற்பட்ட பிரச்சினை ஒன்றை தீர்த்து வைக்க முற்படுவீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவரை சந்தித்துப் பேசலாம். சிறிய வேலை ஒன்றுக்கு கடுமையாக அலையலாம். பிள்ளைகள் விரும்பிக் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள்.


**மீனம்:**
பணப்பற்றாக்குறை தீரும். வெளிவட்டாரத் தொடர்புகளை அதிகரிப்பீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். புதியவர் ஒருவரின் நட்பைப் பெறலாம். கடன் பாக்கிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம். ஆதாயகரமான நாள்.

# என் கண... எங்கே...

## 'யாராவது சொல்லு...

**நேர்காணல்: தர்சினி**

விடுதலைப் புலிகள் இயக்கம் போரில் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அந்த அமைப்பில் இருந்த பல உறுப்பினர்கள் படையினரிடம் சரணடைந்திருந்தனர். பொதுமக்களின் முன்னிலையில் - பட்டப் பகலில் சரணடைந்தவர்களில் பலர் இப்போது எங்கே என்று தெரியாத நிலையில் அவர்களுடைய உறவினர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களைப் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்று படைத்தரப்பும் அரசாங்கமும் சொல்கின்றன. இந்த நிலையில், இவர்களைத் தேடிக் கொண்டேயிருக்கின்றனர் இவர்களுடைய உறவினர்கள். அவர்களில் ஒருவரை வன்னியில் சந்தித்தோம்.

இந்தப் பெண்ணின் கணவர் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர். ஒரு மூத்த போராளி. இந்தப் பெண்ணும் ஒரு போராளியே. இரண்டு பிள்ளைகள். ஆனால், இவர்களுடைய இரண்டாவது பிள்ளை சற்றுச் சுகவீனமான நிலையில் இருந்ததால், பிள்ளையைப் பராமரிப்பதற்காக ஒருவர் வீட்டிலிருந்தார். இதற்கான அனுமதியை இயக்கம் வழங்கியிருந்தது. இறுதிப் போர்வரை இதுதான் நிலைமை.

போரின் இறுதிக்கட்டத்தில், எல்லோரையும் போல இவர்களும் படையினரிடம் சரணடைந்திருந்தனர். ஓமந்தைவரை இணைந்தே படையினரால் கொண்டுவரப்பட்டபோதிலும் பின்னர் போராளியை விசாரணைக்கு என்று அவர்கள் அழைத்துச் சென்றனர். அதன் பின்னர் அவர் பற்றி எந்தத் தகவலுமே இல்லை.

இங்கே அவருடனான உரையாடல்...

***இயக்கத்தில் எப்போது இணைந்தீர்கள்?***

நான் 1989 இல் இந்திய இராணுவ காலத்தில் இயக்கத்தில் இணைந்தேன். இணையும்போது எனக்குப் 19 வயது. ஏ.எல் (கல்விப் பொதுத்தராதரம் - உயர்தரம்) படித்துக்கொண்டிருந்தேன். அண்டைக்கு எங்களின் பள்ளிக்கூடத்தில் இருந்து என்னோட சேர்ந்து நான்குபேர் இயக்கத்தில் இணைந்தார்கள். நாங்கள் உள்ளூர்ப் பயிற்சி எடுத்தோம். காட்டில் தான் பயிற்சி. காட்டிலேயே முகாம். அங் கேயே இயக்கத்தின் வேலைத் திட்டங்கள்.

நான் நகரத்தில் பிறந்து வளர்ந்தவள். எனக்கு காடு பரீட்சயமில்லாதது. இருந்தாலும் காட்டில் இருக்கும் போது நாங்கள் போராளிகளாக இருந்ததால், எப்பவும் ஒரு திகிலும் மெல்லிய பயமும் இருந் தது. பிறகு காடும் பழகி, சண்டையும் பழகிய பின்னர், அங்கே இருப்பதே சந்தோசம் என்று மாறிவிட்டது.

***யாழ்ப்பாணத்தில் நீங்கள் என்ன துறையில் - அல்லது என்ன பணியில் இருந்தீர்கள்?***

யாழ்ப்பாணத்தில் அரசியல் வேலைகளை ஆரம்பத்தில் செய்தேன். பின்னர் மருத்துவத்துறைக்கு மாற்றப்பட்டேன். அது ஒரு கொஞ்சக் காலம்தான். அதன் பிறகு புலனாய்வுத்துறைக்குப் போய் அங்கேயே நீண்டகாலம் இருந்தேன். அதிலும் நிர்வாகப் பிரிவிலேயே அதிக காலம் வேலை செய்தேன். புலனாய்வுத்துறைக்கு மாற்றப்பட்டபோதே யாழ்ப்பாண இடப்பெயர்வும் வந்தது. அதோடு நாங்கள் இடம் பெயர்ந்து வன்னிக்கு வந்தோம். பிறகு வன்னியில் தான் இறுதிப்போர் வரையில் இருந்தோம்.

***உங்களின் திருமணத்தைப் பற்றி...***

திருமணம் இயக்கத்தின் நடைமுறைப்படியே நடந்தது. நாங்கள் விரும்பத் தொடங்கியபோதே இயக்கத்துக்கு அறிக்கை கொடுத்தோம். அறிக்கை என்பது எங்களின் காதலை இயக்கத்துக்கு உத்தியோக பூர்வமாகத் தெரியப்படுத்துவதாகும். அதற்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் (இரண்டு வருசத்துக்குப் பிறகு) இயக்கம் திருமணத்துக்கான ஏற்பாட்டைச் செய்தது. என்னுடைய வீட்டில் அப்பா, அம்மாவைக்கு என்னுடைய திருமணத்தில் - நான் விரும்பியவரில் அவ்வளவு விருப்பம் இருக்கவில்லை. ஆனால், அக்காவும் அத்தானும் முழுமையான ஆதரவு தந்தார்கள்.

திருமண ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கும் போதே - நாள் குறித்ததற்குப் பின்னர்- ஜெயசிக்குறுச் சண்டை தொடங்கியது. அதனால், கொஞ்ச நாளைக்கு எல்லாத் திருமணங்களையும் இயக்கம் ஒத்தி வைச்சது. பிறகு, சண்டை சற்று ஓய்ந்த ஒரு சந்தர்ப்பத்தில் எங்களின் திருமணம் நடந்தது. நாங்கள் இருவரும் போராளிகள் என்பதால், எங்களுடைய பிள்ளையைப் பராமரிப்பதற்காக இயக்கம் ஏற்பாடு செய்திருந்த ''தளிர்'' என்ற பராமரிப்பு நிலையத்தில் விட்டுவிட்டு எங்களின் பணிகளுக்குச் செல்வோம். பின்னர் மாலையில் நான் போய் பிள்ளையை வீட்டுக்குக் கொண்டு வருவேன். இரண்டாவது பிள்ளை கொஞ்சம் வருத்தக்காரப் பிள்ளை எண்டபடியால், நான் வீட்டிலேயே நிற்கவேண்டியிருந்தது. இதற்கான காரணங்களை இயக்கத்துக்குச் சரியாக தெரிவித்ததால், நான் வீட்டில் நிற்கக்கூடியதாக இருந்தது. ஆனாலும் நான் என்னால் முடிந்த பணிகளைச் செய்து கொண்டேயிருந்தேன்.

***இறுதிப் போரின்போது உங்களுடைய கணவரின் பணிகள் எப்படி இருந்தன? நீங்கள் எங்கே இருந்தீர்கள்?***

2002 இல் சமாதானப் பேச்சுகள் வந்த பின்னர் சில போராளிக் குடும்பங்கள் வெளி மாவட்டங்களுக்குப் போய்வந்தனர். என்னுடைய கணவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். ஆனால், நாங்கள் யாழ்ப்பாணத்துக்குப் போகவில்லை. பிள்ளைகள் மட்டும் போய் வந்தனர். அப்பா, அம்மாவும் என்னுடைய கணவரின் பண்பைப் பார்த்து, அவருடைய செயற்பாடுகளைப் பார்த்துப் பின்னர் எம்முடன் ஒற்றுமையானார்கள் அதனால், அவையள் எங்களோடயே கொஞ்சக்காலம் வந்திருக்க விரும்பிச்சினம். அவையள் வந்து நிற்கும்போதே சண்டை மீண்டும் ஆரம்பமாகிவிட்டது.

இந்தத் தடவை இது இறுதிப்போராகவே இருக்கும் என்று இயக்கம் சொன்னது. அதனால், சண்டை நிச்சயம் உக்கிரமாகவே நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஏறக்குறைய ஒரு வருசம் வரையில், மன்னார்ப் பக்கத்திலேயே சண்டை நடந்தது. அப்ப நிலைமை அவ்வளவு நெருக்கடியாக இருக்கேல்லை. ஆனாலும் எல்லாத்துறைப் போராளிகளும் போர் தொடர்பான நடவடிக்கைகளில் குறைந்த அளவுக்கேனும் ஈடுபட்டுக்கொண்டுதானிருந்தனர்.

பிறகுதான் நிலைமை இறுகத் தொடங்கியது. 2008 ஐப்பசியில் போர் கிளிநொச்சிக்குக் கிட்டவாக வரத்தொடங்கியபோது எல்லாமே மாறத் தொடங்கியது. அம்மாவும் அப்பாவும் எங்களோட இருந்தது அப்ப ஒரு வகையில ஆறுதல். ஆனால், மற்றவகையில், அவையளும் தேவையில்லாமல் எங்களோட இருந்து கஸ்ரப்பட வேண்டியிருக்கே எண்ட கவலை. நான் அவர்களைப் போகச் சொன்னேன். எங்களுடைய தீர்மானத்தை அம்மாவோ அப்பாவோ ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் ஒரே யடியாக எங்கள் தீர்மானத்தை மறுத்து விட்டார்கள். என்ன நடந்தாலும் அவர்கள் எங்களை விட்டுப் போவதில்லை என்று சொல்லி விட்டார்கள். ஆகவே அவர்களையும் கொண்டு நாங்கள் இடம்பெயரத் தொடங்கினம்.

இந்தத் தடவை சனங்கள் இடம்பெயரப் பெயர போர் அவர்களைத் துரத்திக் கொண்டு வந்தது. அதுவும் 2009 ஜன வரிக்குப் பிறகு அதைப் பற்றிச் சொல்ல முடியாத அளவுக்கு அது வேற மாதிரியே இருந்தது. என்னுடைய போராட்ட அனுபவத்தில் அப்படியான ஒரு நிலையை, அப்படியான ஒரு கட்டத்தை நான் சந்திச்சதேயில்லை.

முந்திச் சண்டை நடக்கும்போது ஏதோ ஒரு கட்டத்தில் எதிரி யைச் சிதைத்து, அவனை நகர விடாமல் இயக்கம் தடுத்துப் போடும். ஆனால், இந்தத் தடவை அப் பிடி யில்லை. இராணுவம் மிக வேகமாகவே வந்து கொண்டிருந்தது. நாங்கள் கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சிக்குப் போயிருந்தம். அங்கே ஒரு மாதம் இருந்திருப்பம்.

அங்கே இருக்கும்போது கிளிநொச்சியைப் படையினர் கைப்பற்றினார்கள். நாங்கள் வள்ளிபுனத்துக்குப்போனோம். ஆனால், அப்ப புதுக் குடியிருப்புப் பக்கத்திலேயும் பிரச்சினை. ஆனால். அங்கே எங்களுக்குத் தெரிந்தவர்கள் இருந்தபடியால், அவர்களோட போயிருந்தம். இயக்கத்தின் நடவடிக்கைகளில் ஒரு மாற்றம் அல் லது திருப்பம் ஏற்படும் என்றே எண்ணினேன்.

இடையில் வீட்டுக்கு வந்திருந்த கணவர் போரின் போக்கைப் பற்றியும் களநிலைமைகளைப் பற்றியும் சொன்னார். அவருடன் நின்ற போராளிகளிற் பலரும் வீரச்சாவடைந்திருந்தனர். பலர் காயப்பட்டிருந்தனர். எங்களுக்குத் தெரிந்த ஏராளம் போராளிகள் அப்படி வீரச்சாவடைந்திருந்தனர். ஆனாலும் கணவரோ நானோ மனந் தளரவில்லை. அப்படித் தளர்ந்தால் எங்களால் எங்களையே நிலைப்படுத்திக் கொள்ள முடியாது.

நிலைமை வரவர மோசமாகிக் கொண்டிருந்தது. எப்படியாவது அம்மாவையும் அப்பாவையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ணவர் கே?

## ால்லுங்களேன்'

வன்னிக்கு வெளியே அனுப்ப முயற்சியும் என்று கணவர் சொல்லி விட்டுப் போய் விட்டார். நானும் அவர்களுக்கு அதைச் சொன்னேன். நிலைமையைச் சொல்லி நீங்கள் போகும்போது முடிந்தால் எங்களின் பிள்ளைகளையும் கொண்டு போகலாம் என்று கூறினேன். இறுதியில் ஒரு வழியாக அம்மா மட்டும் வெளியே போவதற்குச் சம்மதித்தா. அவவோட ஒரு பிள்ளையை அனுப்பினோம். அப்பா போக மறுத்து விட்டார்.

நாங்கள் வள்ளிபுனத்தில் இருக்கும்போது அங்கே கடுமையான ஷெல்லடி தொடங்கியது. அதனால், அங்கேயிருந்து சுதந்திரபுரத்துக்குப் போனோம். ஆனால், வள்ளிபுனத்தையும் விடச் சுதந்திரபுரத்திற்கே பிறகு போட்டுத் தள்ளினார்கள். அகோர அடி. அங்கே நூற்றுக்கணக்கான சனங்கள் செத்ததுகள். அதோடு அங்கேயிருந்து வெளிக்கிட்டு,

சனங்களை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால், அப்பவும் இயக்கம் வேகமாகத்தான் செயற்பட்டுக் கொண்டிருந்தது. புதுக்குடியிருப்புப் பக்கத்தால் ஒரு தாக்குதல், தேவிபுரம் பக்கத்தால ஒரு தாக்குதல் என்று இந்தக் காலப் பகுதியில் நடந்தது. ஆனால், இந்தத் தாக்குதல்களில் எதிர் பார்த்த வெற்றிகள் கிடைக்கவில்லை.

*இந்தச் சுழலில் நீங்கள் அடுத்ததாக என்ன செய்தீர்கள்? எப்படியான மனநிலைக்கு வந்தீர்கள்? என்ன முடிவெடுத்தீர்கள்?*

அந்தக் கட்டத்தில் நான் சனங்கள் என்ன செய்கிறார்களோ, அதன்படியே செய்தேன். அதுதான் சரியாகவும் இருந்தது. அதாவது சனங்கள் எங்கே இடம்பெயர்ந்து கொண்டிருந்தார்களோ, நாங்களும் அங்கேயே போனோம். அவர்கள் மாத்தளனுக்கும் பொக்கணைக்குமாகப் போனார்கள். நாங்களும் பொக் கணைக்குப் போனோம். ஆனால், சனங்கள் மெல்ல மெல்ல படையினரிடம் போகத் தொடங்கினார்கள். அப்படி எங்களால் போக முடியவில்லை. இதுதான் போராளி குடும்பங்களாக இருந்த எங்களுடைய பிரச்சினையாக இருந்தது.

மற்றவர்களுக்கு இந்தப் பிரச்சினை இருக்கவில்லை. அவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும்போது போர்ச் சுழலை விட்டுப்போனார்கள். நாங்கள் தொடர்ந்தும் போர்ச் சுழலிலேயே இருந்தோம். கணவரையும் காணவில்லை. தொடர்பெடுத்து அவரைக் குழப்பவும் நான் விரும்பவில்லை. அதேவேளை அவரைத் தொடர்பு கொள்ளாமல் எங்களால் இருக்கவும் முடியவில்லை. இப்பிடியே நாங்கள் தவிச்சுக் கொண்டிருந்தம். கடைசியில் ஏப்ரல் மாதம் பதினைந்தாம் திகதி இவர் (கணவர்) வந்து நிலைமையைச் சொன்னார். ஆனந்தபுரம் சண்டையும் தோல்வியில் முடிந்த பிறகு இருந்த நம்பிக்கை எல்லாம் ஏறக்குறைய இறங்கீட்டுது.

அந்தத் தோல்வி தந்த துக்கத்தை என்னால் இப்பவும் தாங்கவே முடியவில்லை. நாங்கள் எத்தனையோ தோல்விகளைச் சந்திச்சிருக்கிறம். ஆனால், அதெல்லாம் நிரந்தரத் தோல்வியாகவோ நிரந்தரத் தோல்விக்கு வாய்ப்புக் கொடுத்ததாகவோ இருந்த தில்லை. ஆனந்தபுரம் தோல்வி எங்களை நிலைகுலைய வைச்சது. அதுக்குப் பிறகு நான் நித்திரையே கொள்ளவில்லை. வரப்போகிற நிலைமை என்னை நல்லாப் பாதித்தது. ஆனால், நான் கணவரிடம் இதைப் பற்றிக் கதைக்கவேயில்லை.

*அதுக்குப் பிறகு?*

அதுக்குப் பிறகுதான் நாங்கள் அப்பாவை இழந்தம். இரட்டை வாய்க்காலில் இருக்கும்போது ஒரு இரவு அப்பா தண்ணீர் அள்ளிக் கொண்டு வந்தார். அப்ப கடுமையான சண்டை நடந்து கொண்டி ருந்தது. எல்லாப் பக்கத்தாலும் ரவுண்ஸ் வந்து கொண்டிருந்தது. அதில ஒரு ரவுண்ஸ் அப்பாவைக் கொண்டு போட்டுது. அப்பா விழுந்திட்டார். அப் பாவைக் காணவில்லை என்று நாங்கள் தேடிக் கொண்டு போகும்போதுதான் என்ன நடந்தது எண்டது தெரிஞ்சது. எங்களுக்காக நின்ற அப்பாவை நாங்கள் இழந்திட்டம்.

அதுக்குப் பிறகு நிலைமை இன்னும் மோசமாகிட்டுது. கணவர் வந்தார். ஒரு நாள் நின்றார். மே 15. திடீரெனத் தான் வெளிக்கிட்டுப்போக வேணும் என்றார். எனக்கு எல்லாமே குழப்பமாக இருந்தது. என்ன செய்யிறது என்றே தெரியேல்ல. எங்களைப் போலக் கனபேர் இருந்தது மட்டுந்தான் ஒரே ஆறுதல். போனவர் இரவு வந்தார். தான் வரவில்லை என்றும் எங்களைச் சனங்களோட போகும்படியும் சொன்னார். நான் மறுத்திட்டன். இந்தக் கட்டத்தில் நான் எதுவும் செய்ய முடியாத நிலை யில் இருந்தேன். அதுமட்டுமில்லை. இனி நாங்கள் எதுவும் செய்ய முடியாது. எங்களுடைய போராட்டத் தின் தோல்வியை நாங்கள் கண்ணின் முன்னேயே பார்த்துக் கொண்டிருந்தோம். பல போராளிகளே படையினரிடம் சனங்களோட சனங்களாகக் குடும்பம் குடும்பமாகச் சரணடைந்து கொண்டிருந்தார்கள்.

*பிறகு?*

கடைசியாக நாங்கள் முள்ளிவாய்க்காலில் இருந்து வட்டுவாகலுக்குள்ளால் முல்லைத்தீவுக்குப் போனோம். அந்த அனுபவத்தை மறக்கவே முடியாது. முல்லைத்தீவுச் சமரில் 1996 இல் வெற்றியோட உள்ளுக்குள்ளே போன போராளிகளும் அப்ப தலையைக் கவிழ்ந்து கொண்டுதான் வந்தார்கள். என்ன கொடுமை? வட்டுவாகலில் ஒருநாள் முழுவதும் வைச்சிருந்தார்கள். பிறகு அங்க இருந்து ஓமந்தைக்குக் கொண்டு போனார்கள். ஓமந்தையில் வைத்தே கணவர் படையினரிடம் சரணடைந்தார். அவரோடு இன்னும் பலர் அன்று, அப்படிச் சரணடைந்தார்கள். நாங்கள் அன்று பட்டபாடு ருக்கே, அதை என்றைக்கும் மறக்கவே முடியாது.

*அதற்குப் பிறகு?*

அதுக்குப்பிறகு, எங்களை முகாமுக்குக் கொண்டு போனார்கள். அது கதிர்காமர் முகாம். முகாம் வாழ்க்கை எல்லாம் நீங்கள் அறிந்ததுதானே. ஆனால், நான் அதுக்குப் பிறகு, இரண்டு வருசமாகக் கணவரைத் தேடாத இடமேயில்லை. ஐ.சி. ஆர்.சி, பாதுகாப்பு அமைச்சு, புனர்வாழ்வு சிறைச் சாலைகள் அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, மனித உரிமைகள் ஆணைக்குழு, நல்லிணக்க ஆணைக்குழு என்று எல்லா இடங்களுக்கும் கடிதங்களும் கொடுத்திருக்கிறேன். என்னைப் போல பலபேர் இப்படி ஒரு முடிவும் தெரியாமல் அலைந்து கொண்டி ருக்கிறார்கள்.

*ஏன் வெளியுலகத்துக்கு இதை நீங்கள் கொண்டு செல்ல முடியாதா?*

என்னைப் பொறுத்தவரை எல்லாமே நாடகந்தான். எங்களுடைய போராட்டத்தை இந்த வெளியுலகமே அழித்தது. வெளியுலகத்தின் ஆதரவில்லாமல் இலங்கை அரசினால் வெற்றியடைந்திருக்கவே முடியாது. போரில் இலங்கை அரசுக்கு உதவிகளைச் செய்த இந்த வெளியுலகம், தமிழர்களுக்கு ஒரு நல்ல தீர்வைக் கொடுக்க வேணும் என்று சொல்லவே இல்லை. அதுமட்டுமல்ல, போரின் இறுதியில் நிச்சயமாக ஒரு சரணடைவு இருக்கும்; அதில் ஏராளம் போராளிகள் சரணடைவார்கள்; அவர்களைப் பாதுகாக்க வேண்டும்; ஆகவே அதற்கான பொறுப்போ பாதுகாப்போ எப்படி அமைய வேண்டும் என்பதைப் பற்றிக்கூட இந்த வெளியுலகம் சிந்திக்கவில்லை.

உண்மையில் இதையெல்லாம் உலகம் சிந்திக்காமல் விடவில்லை. அவை தேவையற்ற விடயங்களாக உலகுக்கு இருந்தன. வெளியுலகத்தைப் பொறுத்த வரையில் புலிகளின் முக்கிய தலைவர்களை இல் லாமற் செய்து விட்டால், பிறகு அந்தப் போராட் டமே, இயக்கத்தின் சிந்தனையே இல்லாமற்போய் விடும் என்று அவர்கள் நினைத்தார்கள். இந்த நிலைமையில் நான் வெளியு லகத்தை எப்படி நம்பிக்கை வைத்துக் கேட்பது?

*இப்போது உங்களுடைய நிலைமை எப்படியிருக்கிறது?*

முதலில் எப்படியாவது, கணவரைக் கண்டு பிடிக்கவேணும். குறைந்தபட்சம் அவர் எங்கிருக்கிறார் என்ற தகவலாவது கிடைத்தாற் போதும்.

இப்போது எல்லாமே பிரச்சினையாகத்தான் இருக்கு. நாங்கள் இருந்த காணியை விலை கொடுத்தே வாங்கினோம். ஆனால், இப்போது அந்தக் காணிக்காக மீண்டும் எங்களுக்குக் காணியை விற்றவர்களே வந்து நிற்கிறார்கள். இதைவிடக் கணவரைத் தேடவேணும். பிள்ளையின் உடல் நிலையைப் பார்க்கவேணும். அப்பாவின் உதவியும் இல்லை. வருமானமும் இல்லை. ஏறக்குறைய நான் இப்ப தனித்து விட்டேன்.

முந்தி நாங்கள் பலமாக இருந்தம். நிறைய ஆக்களாக இருந்தம். அணி அணியாக இருந்தம். முகாமில்கூட ஒரு ஒற்றுமை இருந்தது. ஆனால், முகாமுக்கு வெளியில வந்தாப்பிறகு, அவரவர் தங்கட தங்கட பாடுகளைப் பார்த்துக் கொண்டு போகினம். வரவர நிலைமை மாறிக் கொண்டே போகுது....



## மாமியார் மகிமை



மாமியாருக்கும் மருமகளுக்கும் கருத்து வேறுபாடு வருவதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்களா? அதற்குக்காரணம் ஒரு விதமான மனோதத்துவ பாதிப்புத்தான். இதனைவிட வேறு ஒரு காரணமும் இருக்க முடியாது.

அதை மனோதத்துவ ரீதியாகவே சரி செய்வதற்கு எமது முன்னோர்கள் சில பழக்க வழக்கங்களை சம்பிரதாயமாகவே ஏற்படுத்தி வந்திருந்தார்கள். அதாவது முற்காலத்தில் மாமியார்தான் மருமகளுக்குத் தலைவாரிப் பின்னிவிட வேண்டும் என்ற ஒரு வழக்கத்தை வைத்திருந்தார்கள் இது எதற்காக?

அந்தச் சின்னப் பெண்தனது அப்பா, அம்மாவை விட்டு புதிதாக ஓர் இடத்துக்கு வந்து இருக்கிறாள். அந்தப் பெண் மனதில் உள்ள இறுக்கம் குறைய வேண்டும். அதற்காகத்தான்.

ஒரு குழந்தையை மடியில் போட்டுவிட்டு அதன் தலையை வருடினால் அது தூங்கிவிடும். அது மாதிரித்தான் இந்தநடைமுறை.

மாமியார் தலையைக் கோதி விடுவதும் வருடி விடுவதும் கூந்தலைப் பின்னுவதும் மருமகளுக்கு இதமாக இருக்கும். இதனால் இரண்டு பேருக்கும் இடையில் உள்ள மன இடைவெளி குறைந்து. ஒரு புரிந்துணர்வு ஏற்படும்.

இதற்காகத் தான் அந்தப் பழக்கம் இருந்தது ஆனால் இந்தக் காலத்தில் இது சாத்தியமா? என்பது யோசிக்க வேண்டிய விடயம்.

இந்தக் காலத்துப் பெண்கள் தலையை மாமியாரிடம் கொடுக்கத் தயாராகத் தான் இருக்கிறார்கள். ஆனால் மாமியார் அதைக் கோதி விட்டால் பரவாயில்லை, மோதிவிட்டால் என்ன செய்வது? எதற்கும் முன்னெச்சரிக்கை சுவரில் ஒரு தலையணையை வைத்துக்கொள்ள வேண்டியதுதான்.

இந்தப் பிரச்சினை இந்தக் காலத்துக்கு மட்டும் தான் என்று இல்லை. அந்தக் காலத்திலும் இருந்திருக்கிறது. முற்காலத்தில் ஒருத்தன் இருந்தான். அவன் எப்படிப்பட்டவன் என்றால் மனைவி ஒரு கோடு கீறினால் அதைத் தாண்டவேமாட்டான். அப்படிப்பட்ட பதிவிரதன்.

அந்தப் பெண்ணுக்கு மாமியார் ஒரு பிரச்சினை. இந்தக் கிழவியை எப்படி அப்புறப்படுத்துவது என்று யோசித்தார். ஒரு யோசனை தோன்றியது. தன் கணவரைக் கூப்பிட்டு " இதோ பாருங்கள் - நீங்கள் உங்கள் அம்மாவை அழைத்துக்கொண்டு போய் எங்கேயாவது காட்டில்விட்டு விடுங்கள். அதுதான் நல்லது", என்றாள்.

சரி என்று இவனும் தாயை எங்கேயோ ஊருக்கு அழைத்துப் போவது மாதிரி ஏற்பாடு செய்து காட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

மருமகள் இரண்டுபேருக்கும் சோற்றுப் பொதி கட்டிக் கொடுத்துவிட்டாள். கணவனது சாப்பாட்டுப் பொதிக்குள் பாற்சோறு இருந்தது. மாமியாருக்குக் கொடுத்த பொதிக்குள்ளே களிமண்ணை வைத்துக் கொடுத்தாள்.

இது தெரியாமல் அவர்கள் அதை வாங்கிக் கொண்டு புறப்பட்டார்கள். ஒரு நடுக்காடு வந்தது. ஒரு குளக்கரையில் "நீங்கள் இங்கேயே சாப்பிட்டுக் கொண்டிருங்கள், நான் அந்தப் பக்கமாய் போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு தவறுதலாக தாய்க்குக் கொடுத்த பொதியை எடுத்துக்கொண்டு புறப்பட்டவன் திரும்பி வரவே இல்லை.

இந்த அம்மா மகனைக் காணவில்லையே என்று அழ ஆரம்பித்து விட்டார். அப்போது அந்தப் பக்கமாக ஒரு தேவதை நீராடுவதற்காக வந்தது. அது "ஏனம்மா அழுகிறீர்கள்?" என்று கேட்டது.

இந்த அம்மா விடயத்தைக் கூறினாள். கவலைப்படாதீர்கள் என்று ஆறுதல் சொல்லியது அந்தத் தேவதை.பின்னர்சோற்றுப் பொதியை அவிழ்த்து அந்தத் தேவதைக்குக் கொடுத்துச் சாப்பிட்டார். அந்தச் சாப்பாடு தேவதைக்குப் பிடித்து விட்டது. அதனால் மகிழ்ந்து வரம் கொடுத்தது.

அந்த அம்மா இளமங்கையாக மாறிவிட்டார். நிறைய நகை, துணிகளுடன் வீட்டுக்குப் போகும் வழியையும் காட்டிவிட்டது அந்தத் தேவதை.

வீட்டுக்குப் போன அந்த அம்மா விவரத்தைக் கூறக் கேட்ட மருமகள் களிமண் மூட்டையைக் கொடுத்து தன்னுடைய தாயையும் இளமையாக மாற்ற கணவனுடன் காட்டுக்கு அனுப்பினாள்.

தேவதை வந்தது இரண்டு பேரும் சாப்பிடப்பொதியை அவிழ்த்தார்கள். களிமண்ணைக் கண்ட தேவதைக்கு கோபம் வந்தது. " நீ கழுதையாக போகக் கடவது" என்று சாபம் கொடுத்து விட்டுப் போய்விட்டது.

வீட்டு வாசலில் கழுதைச் சத்தம் கேட்க உள்ளே இருந்த மருமகள் ஓடிவந்து பார்த்தாள். கணவன் ஒரு பக்கம் கழுதை ஒரு பக்கம். "என்ன நடந்தது? " என்று விசாரித்தாள். அதற்கு அவன்வரவர மாமியார் கழுதை மாதிரி மாறிவிட்டார் என்றான்.

இந்தக் காலத்து இளைஞன் ஒருவனிடம் "நீயாக இருந்தால் அந்த நிலைமையில் என்ன செய்வாய் என்று கேட்டால் "நானாக இருந்தால் களிமண் மூட்டையை என் மனைவியிடமே கொடுத்தனுப்பியிருப்பேன்" என்றான்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி .தென்மேற்கு மானிப்பாய்ப் பிரதேச சபை மண்டபத்தில் முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழாவில் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சிறுவர் முன்பள்ளி மாணவர்கள் பங்குபற்றும் காட்சி. (302)

# ஆலயங்களின் சிறப்பை எடுத்தியம்பும் பக்தித் திருவுலா இறுவட்டு

## யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர்

'பக்தித் திருஉலா' இறுவட்டில் உள்ள பாடல்களிலும் காட்சிகளிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள மிக முக்கியமான இந்துத் திருத்தலங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்குப் பாடல்களை இயற்றிய பா.சிவபாலனின் முயற்சி இந்து மக்களால் போற்றப்பட வேண்டியதாகும்.

பக்தித் திருஉலா இறுவட்டு வெளியீட்டின் போது கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் மா.வேதநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.வேலணை, சரவணையைச் சேர்ந்த பா.சிவபாலனால் இயற்றப்பட்ட இந்துத் திருத்தலங்களின் பாடல்களைக் கொண்ட பக்தித் திருஉலா இறுவட்டு வடமாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் அண்மையில் நல்லை ஆதீன கலா மண்டபத்தில் வெளியிட்டுவைக்கப்பட்டது. மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் எஸ். ஸ்ரீதேவி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வெளியீட்டுரையை நிகழ்த்திய யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் மா.வேதநாதன் தொடர்ந்து தமது உரையில் தெரிவித்ததாவது:

பா. சிவபாலன் இயற்றிய பாடல்களைக் கொண்ட பக்தி உலா இறுவட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் நல்லூரான் மஹோற்சவ நன்னாளில் வெளியிடப்படுகிறது. இவர் யாழ். கல்வித்திணைக்களத்தில் நிதி உதவியாளராகக் கடமைபுரிந்து பின்னர் வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சில் நிர்வாக உத்தியோகத்தராக சேவைபுரிந்து இளைப்பாறியுள்ளார்.

இவர் 'நகை' என்ற நகைச்சுவைக் கவிதைநூலை வெளியிட்டவர். 'குறளின் குரல்' என்ற குறும்பாவை இயற்றித்தந்தவர். பல நாடகவசன நூல்களை வெளியிட்டவர். இன்று வெளியிடப்படும் பக்தித் திருஉலாவில் பல இந்துக் கோயில்களைப் பற்றிப் பாடியுள்ளார். இந்த இறுவட்டு ஒலியாகவும் ஒளியாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பாடல்கள் யாவும் 2002 ஆம் ஆண்டு இந்த ஆதீன கலா மண்டபத்தில் இசைத்தட்டாக இவரால் வெளியிடப்பட்டது. தற்போது இப்பாடல்களுக்கு காட்சியை இணைத்து இறுவட்டாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இறுவட்டில் இந்து மக்களின் திருத்தலங்களான நல்லூர் கந்தசாமி கோயில், நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில், வண்ணை வரதராஜர் கோயில்,யாழ். மருதடிப்பிள்ளையார் கோயில், வேலணைப் பெருங்குளத்து அம்மன் கோயில், புளியங்கூடல் மகமாரி அம்மன் கோயில், நாரந்தனை தான் தோன்றி அம்மன் கோயில், வீரமாகாளி அம்மன் கோயில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில், ஏழாலை வசந்த நாகபூஷணி கோயில், திருநெல்வேலி முத்துமாரி அம்மன்கோயில், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், திருக்கோணேஸ்வரம், வண்ணை வைத்திலிங்கம், சிலாபம் முனீஸ்வரர் கோயில் ஆகியவைகள் காட்சிகளாக வெளிப்படுத்தப் பட்டுள்ளதுடன் பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

இந்து மக்களது வீடுகளில் அவசியம் இருக்க வேண்டிய ஒலி, ஒளி இறுவட்டு இந்த பக்தித் திருஉலா இறுவட்டு ஆகும்-என்றார். (வ-51)

# மக்களை நல்வழிப்படுத்துவதே இலக்கியங்கள்

## கனகரட்ணம் ம.வி. அதிபர்

யாழ்ப்பாணம்,ஒக.31

மக்களை நல்வழிப்படுத்துவதாகவே இலக்கியங்கள் விளங்குகின்றன. எனவே இலக்கியம் காட்டும் வழியில் சென்றால் நல்ல பயனை அடைய முடியும். எவற்றை அடிக்கடி பார்க்கப், பேச, நினைக்கத் தோன்றுகின்றதோ அவை அனைத்தும் இலக்கியத்தில் அடங்குகின்றன. ஒன்றைப் படிப்பதன் மூலம் மற்றொன்றை உருவாக்க வேண்டும். ஒன்றைப் பார்ப்பதன் மூலம் மற்றொன்றை சித்திரமாக வடிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் யாழ். கனகரட்ணம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.ஞானகாந்தன்.

யாழ்.றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் 'இலக்கியக்குவியம்' என்னும் அமைப்பு நாவலர் வீதியில் அமைந்துள்ள உதயன் விருந்தினர் விடுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:

தற்போதைய இளம் சமுதாயம் இலக்கிய நயங்களைக் கைவிட்டுப் புதிய பாணியில் அதாவது சினிமா மோகத்தில் மூழ்கியுள்ளது. இலக்கிய உணர்வுகளைக் கைவிட்டுள்ளது. கைவிட்ட இலக்கிய உணர்வுகளைப் பாடசாலை மட்டத்தில் ஊக்குவிக்க வேண்டும். இலக்கியங்களில் அடங்கியுள்ள கலைகளை, மாணவரிடையே வளர்த்தெடுக்க வேண்டும். இருந்தபோதும் உயர்தரத்தில் தமிழ் இலக்கியம், இலக்கணங்களை விரும்பிக் கற்கும் மாணவர் களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இதற்குக் காரணம் மனப்பாடம் செய்ய வேண்டியுள்ளது என்று காரணங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்கு இலவச நூல்களை அரசு வழங்குகின்றது. அவற்றிலே வண்ணமயமான அழகிய சித்திரங்களுடன் கதைபேசுவதாக ஒவ்வொரு அலகும் அமைந்துள்ளது. அவற்றை மாணவர்கள் பார்த்துச் சிந்தித்து விமர்சிப்பது இல்லை. அதைவிடுத்து தொலைக் காட்சி நாடகங்கள் விளையாட்டுக்கள், இணையத்தளம் என்பவற்றில் மூழ்கியிருக்கின்றனர். இந்த நிலையிலிருந்து விடுபட வேண்டும்.

மாறியிருக்கும் மாணவ சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டும். அவர்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டும். ஒவ்வொரு பாடசாலையிலும் இலக்கியவாதிகளை உருவாக்க வேண்டும். தமிழை வளர்த்தெடுக்க தமிழ் மக்கள் அனைவரும் உழைக்க வேண்டும்.-என்றார் அவர். (வ-311)

# சர்வதேச லயன்ஸ் கழகத் தலைவர் சாவகச்சேரிக்குப் பயணம்

தென்மராட்சி,ஒக.31

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துக்கு சர்வதேச லயன்ஸ் கழகத்தின் வலயத் தலைவர் லயன் தி.முருகதாஸன் எதிர்வரும் நான்காம் திகதி பிற்பகல் 4 மணிக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் கழகத்தால் மேற்கொள்ளப்படவுள்ள வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கல், தையல் பயிற்சி வகுப்பு, மரக் கன்று நடும் திட்டம் போன்ற கழகத்தின் நலத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளதாகக் கழகத் தலைவர் லயன் கே.பிரதீபன் தெரிவித்தார். (வ-207)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 8000 ரூபா அபராதம்

தென்மராட்சி,ஒக.31

மதுபோதையில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 8 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசா ரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவான் மா.கணேசராஜா இந்த நபருக்கு எட்டாயிரம் ரூபா அபராதம் விதித்தார். (வ-207)

# இடமாற்றம்

தென்மராட்சி,ஒக.31

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் திருமதி சீ.ஜே. நாணயக்கார எதிர்வரும் முத லாம் திகதி தொடக்கம் காலி, பலப்பிட்டிய மேல்நீதிமன்றத்துக்கு நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரினால் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (த-207)

# இளம்பராயத்தில் இருந்தே கலைகளை கற்றுக் கொள்வது அவசியமானதாகும்

## யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர்

இளம்பராயத்தில் இருந்தே ஏதாவது ஒரு கலையைக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தக் கலையிலேயே மிகுந்த பாண்டித்தியத்துடன் விளங்க வேண்டும். கல்வி ஒருபுறம் இருக்க அதனுடன் கலையையும் கற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக் கழக நுண்கலைத் துறைத் தலைவர் ஏ.என்.கிருஸ்ணவேணி.

செல்வி.அஜந்தா அருளானந்தனின் பரதநாட்டிய அரங்கேற்றம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:

கலைகள் உடலுக்கும் உள்ளத்துக்கும் மகிழ்ச்சி, உற்சாகம் அளிக்கக்கூடியவை. ஒவ்வொரு கலைக்கும் ஒவ்வொரு உளவியல் தத்துவம் உள்ளது. பரதம், சங்கீதம், ஓவியம் என 63 கலைகள் உள்ளடங்கியுள்ளன. அவற்றிலே ஒரு கலையாவது கற்றுத் தேர்ச்சியடைதல் அவசியம். எவையெல்லாம் மகிழ்ச்சி ஊட்டுகின்றனவோ அவையெல்லாம் கலைகளில் அடங்குகின்றன.

கலைகளை வளர்த்துக் கொள்ளும் களமாகப் பாடசாலைகள்,கோயில்கள், பொது நிகழ்வுகள் என்பன விளங்குகின்றன.

அவற்றிலே பாடசாலை மட்டங்களிலே தமிழ்த்தினப் போட்டிகள் போன்ற பல்வேறு வகையான போட்டிகளை நடத்தி மாகாண, மாவட்ட, தேசிய ரீதியில் மாணவர்களைக் கொண்டு செல்ல வேண்டும். மாணவர்களுக்கு எந்தக் கலையில் ஆர்வம் உண்டோ அந்தக் கலையைப் பயிலவிட வேண்டும். பெற்றோர்கள் தமது விருப்பத்துக்காக இந்தக் கலையினையே கற்றுக்கொள் என்று திணிக்கக் கூடாது. ஆர்வம் இல்லாமலும் உற்சாகம் இல்லாமலும் எவற்றையும் நிறை வாகக் கற்றுக்கொள்ள முடியாது.

வெளிநாடுகளில் கலைத் துறைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் எம்மவரிடையே சற்றுக் குறைவுதான்.

சங்கீதம், பரதம் ஆகிய துறைகளைப் பெண்கள்தான் ஆர்வத்துடன் பயின்று வருகின்றனர். ஆண்களைப் பொறுத்தவரையில் ஓவியம், மிருதங்கம் போன்ற துறைகளோடு மட்டும் நின்று விடுகின்றனர்.

ஆலயத் திருவிழாக்களின் போது தேவாரம் பாடக் கேட்டால் இளம் சமுதாயம் முன்வருவதில்லை. இலவசமாக ஆலயங்கள் தோறும் பண்ணிசை வகுப்பு, அறநெறி வகுப்புகள் நடத்தினாலும் அவற்றில் பாலர் பாடசாலை மாணவர்கள்தான் பங்குபற்றுகின்றனர். ஏனைய மாணவர்கள் அவற்றை மதிப்பதில்லை.

கலைகளானது எதிர்காலத்தில் கைகொடுக்கக் கூடியவை. அழிந்துபோகும் கலைகளைத் தற்போதைய சமுதாயம் பாதுகாக்க வேண்டும். இதுவே கலை ஆர்வம் உள்ள அனைவரினதும் வேண்டுகோளாகும்.-என்றார் அவர். (வ-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சையா? உயிரா?

பரீட்சை நடந்துகொண்டிருந்தது. பாடசாலைக்கு வெளியே பதைபதைப்புடன் பெற்றோர். உள்ளே பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவர்களை விடவும் அதிக பயமும், பதற்றமும் பெற்றோரிடம் தொற்றியிருந்தது. எந்தப் பரீட்சைக்காக இவ்வளவு நாள்களும் வேள்விக் கிடாய்கள் போலத் தம் பிள்ளைகளை வெளியே ஒரு இடமும் திரியவிடாமல், கால்கட்டுப் போட்டு, துள்ளித் திரியவேண்டிய வயதில் துடுக்கடக்கி, படிப்பை மட்டுமே தீத்தி வளர்த்தார்களோ அந்தப் புலமைப் பரிசில் பரீட்சை நடக்கும் போது கடைசிக்கட்டப் பயம் ஒன்று வருவது இயல்புதானே. பரீட்சையின் முதலாவது பகுதி முடிவடைந்தது. சின்னதொரு அலுப்புடன் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் வெளியே வந்தனர். ஆனால் அடுத்த பகுதிப் பரீட்சை தொடங்குவதற்கிடையிலான மிகக்குறுகிய காலத்தைக் கூட நிம்மதியாக அவர்களால் கழிக்க முடியவில்லை. குத்துச் சண்டைப்போட்டிகளில் ஒவ்வொரு ரவுண்ட் முடிவிலும் வீரர்களுக்கு அவர்களின் பயிற்சியாளர்கள் உற்சாகத்தோடு தொடர்ந்து போராட குளுக்கோஸ் போன்ற பானங்களைக் கொடுப்பார்கள். அதுபோல , பிள்ளைகளுக்குத் தெம்பூட்டுவதற்காக சுடுதண்ணீர்ப் பிளாஸ்க்குகளில் கொண்டு வந்திருந்த நெஸ்ரமோல்ட், வீவா உள்ளிட்ட பானங்களைப் பருகக் கொடுத்தார்கள். ஆசையோடு அதனைப் பிஞ்சுகள் குடித்துக் கொண்டிருக்கும் போதே-

என்ன மாதிரி? எக்ஸாம் சுகமே? என்னென்ன கேள்வி வந்தது? எல்லாம் செய்தனியே? நேரம் காணுமே? என்னென்ன கேள்வியள் வந்ததெண்டு சொல்லு சரியோ எண்டு பாப்பம் என்று இடைவெளியே இல்லாமல் கேள்விகளை அள்ளிவீசும் போது, குடித்த நெஸ்ர மோல்ட் புரைக்கேறத் தானே செய்யும். பெற்றோரின் கேள்விகளுக்கு பதில் சொல்வதா? அல்லது அடுத்த பகுதி பரீட்சைக்குத் தன்னைத் தயார் படுத்துவதா? அல்லது நெஸ்ரமோல்ட்டைக் குடிப்பதா? இதில் எதைச்செய்வதென்று பிள்ளைகள் முடிவெடுக்க முன்னரே இடைவேளை நேரம் முடிந்து விட்டது. குடித்தது பாதி, குடிக்காதது பாதியாக மாணவர்கள் மீண்டும் பலிக்களம் நோக்கி- பரீட்சை மண்டபம் நோக்கி- நகரத் தொடங்கினர். அப்போது தான் எதேச்சையாக அந்தக் காட்சியைக் காண முடிந்தது. கால்கள் இரண்டிலும் பெரிய கட்டுகளைச் சுமந்து கொண்டிருந்த மாணவன் ஒருவனை அவனது தாய் பரீட்சை மண்டபத்துக்குள் தூக்கிச் சென்று கொண்டிருந்தார்.எனினும் தாய் சுமந்து செல்லும் போதே அந்த மாணவன் வலியால் துடித்து, அழுது கொண்டே தான் சென்றான்.

அம்மா! ஏலாமல் இருக்கம்மா. கதிரையில இருந்து எழுதப் பயங்கரமா எரியுதம்மா. நான் வீட்ட போப் போறன். வலியின் கொடுமையால் பரீட்சையை பாதியிலேயே விட்டு விட்டுப் போகவே அவனது மனது ஏங்கியது. ஆனால் அவனது தாயார் ஒரு முடிவோடு தான் இருந்தார். ''ஒரு கொஞ்ச நேரம் தானே. இப்ப எக்ஸாம் எழுதாட்டி பிறகு ஒரு நாளுமே கொலர்சிப் எக்ஸாம் எழுத முடியாது. பிறகு நீ கஷ்டப் பட்டுப் படிச்சது எல்லாம் வீணாப் போயிடும். நல்ல பிள்ளையெல்லோ. போயிருந்து எக்ஸாமை வடிவா எழுதிட்டு வா''.

கெஞ்சுதலோடு தாய் சொன்ன வார்த்தைகளைத் தட்டமுடியாமல், தலையாட்டி விட்டு கதிரையில் அமர்ந்து கொண்டான் அந்தப் பிஞ்சு. மகனை மண்டபத்துக்குள் இருத்தி விட்டு வந்த தாயை அணுகினேன்.

மகனுக்கு கால்ல என்ன காயம்? கொஸ்பிட்டலுக்கு கொண்டு போகேலையோ? எக்ஸாம் எழுதச் சரியாக் கஷ்டப்படுறார் போல கிடக்கு என்று விடுப்பு அறியும் ஆர்வத்துடன் கேட்டேன்.

ஓம். அவருக்கு நேற்றுக் காலமை காலில எண்ணெய் ஊத்திண்டு போட்டுது. இரண்டு பாதமும் அப்பிடியே இறைச்சி மாதிரி அவிஞ்சு போட்டுது. நாங்கள் பதறியடிச்சுட்டம். அதால இப்ப எக்ஸாம் எழுதிற அளவுக்கு மாறிட்டு நடந்ததைச் சுருக்கமாக அவர் சொன்னார். ஆனாலும் என் கேள்விக்கணைகள் தொடரவே செய்தன.

எண்ணெய் ஊத்துப்பட்ட புண் ஒரு நாளில மாறுமோ? டொக்டர் என்னெண்டு ஒரு நாளில துண்டு வெட்டினவர். அதுவும் பெரிய ஆக்கள் எண்டால் பரவாயில்லை.பத்து வயசுப் பாலகனை வடிவா மாத்திப் போட்டு அனுப்பாம இப்படி அரைகுறையா அனுப்பியிருக்கினமே என்று ஆஸ்பத்திரி மீது என் கோபம் திரும்பியது. ஆனால் அந்தக் கோபம் தவறானது என்பதை மாணவனின் தாயார் சொன்ன வார்த்தைகள் தெளிவுபடுத்தின.

ஆஸ்பத்திரியில நிக்கத்தான் சொன்னவை. இன்னும் இரண்டு, மூண்டு நாளைக்குக் கட்டாயம் ஆஸ்பத்திரியில வைச்சிருந்தாத்தான் மாறுமெண்டவை. ஆனா பிள்ளைக்கு எக்ஸாம் தானே முக்கியம். வாழ்க்கையில ஒருக்காத் தானே கொலர்சிப் எடுக்கலாம். இவ்வளவு காலமும் பிள்ளை படிச்சது வீணாகிடுமெல்லோ. மற்றவையின்ர பிள்ளையள் கொலர்சிப் பாஸ் பண்ண, எங்கட பிள்ளை வருத்தத்தால எக்ஸாம் எடுக்கேலை எண்டு சொன்னா மரியாதைக் கேடெல்லோ. அதுதான் டொக்டர்ஸ் மறிக்க, மறிக்க நாங்கள் மகனைக் கூட்டிக் கொண்டு வந்திட்டம்

ஏதோ பெரிய வீரதீரச்செயலைச் செய்துவிட்ட கெட்டித்தனத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டார் அந்தத் தாய். மகனின் உடல் நலத்தை விடவும் வறட்டுக் கௌரவத்துக்காக வைத்தியர்களின் ஆலோசனையையும் மீறி, சிகிச்சையினைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு, பரீட்சைக்காக வலியோடு போராடும் மகனை அழைத்து வந்த தாயை நினைத்து அழுவதா, சிரிப்பதா என்று தெரியாமல் விழிக்கவேண்டிய நிலை எனக்கு.

இப்படி நிறையப் பெற்றோர் எங்களிடத்தே இருக்கிறார்கள். அவர்களுக்குப் பரீட்சைகள் தான் பெரிதாகத் தெரிகின்றனவே தவிர பிள்ளைகளின் நலன் கண்ணுக்குத் தெரிய மறுக்கின்றது. காலிரண்டிலும் காயங்களோடு தவிக்கின்ற மாணவன் 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையை எழுதாவிட்டால் குடியா மூழ்கிவிடும்? சில வேளைகளில் சிகிச்சையை உதறி விட்டு பரீட்சை எழுத வந்ததால், காயங்கள் கால்களை இயங்க முடியாத் தன்மைக்கு இட்டுச் சென்றால் காலம் முழுதும் அந்தப் பிள்ளை முடமாக வல்லவா அலைய வேண்டியிருக்கும்.அதை விட பரீட்சை தான் பெரிதா பெற்றோருக்கு? உயர்தரப் பரீட்சையில் கூட காய்ச்சலோடு பரீட்சை எழுதிய மாணவன் டெங்கு நோயால் பலியான சம்பவம் மிக அண்மையில் இதே யாழ்ப்பாணத்தில் தான் நிகழ்ந்திருக்கிறது.

3 நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் டெங்கு நோயாக இருக்கலாம். அதற்கு உரிய பரிசோதனைகளும் சிகிச்சையும் செய்யப்படவேண்டும்' என சுகாதாரத் திணைக்களம் கிளிப்பிள்ளை போல திரும்பத் திரும்பச் சொல்லியும் அதைக் கேளாமல், காய்ச்சலுடன் பரீட்சை எழுத அனுப்பி வைத்த பெற்றோரை என்னவென்பது?

பரீட்சைகள் மட்டுமே பிள்ளைகளின் வாழ்க்கையல்ல. பரீட்சைகள் வெறும் அளவு கோல்கள் மாத்திரமே. பிள்ளைகளின் உடல், உள நலன்களை உரிய முறையில் பேணினால் மாத்திரமே பரீட்சைகளினால் பெற்ற விளைவுகளை அனுபவிக்க முடியும். ஏனெனில் சுவர் இருந்தால் மாத்திரமே சித்திரம் வரைய முடியும்.

## ஓலைக் கோலங்கள்

### ஓடு காலி

## மரண அறிவித்தல்



### திருமதி தேவகி சண்முகநாதன்

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவகி சண்முகநாதன் நேற்று (30.08.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகநாதனின் (இலங்கை மின்சார சபை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பூபாலன்- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சாமினி (அமெரிக்கா), ஜனகன்,விசாகன், குகசீலன், வாசுகி, நிவேதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மீனாம்பிகை, கமலாம்பிகை (கொழும்பு), காலஞ்சென்றவர்களான சண்முகானந்தன், அம்பிகை மற்றும் சிவானந்தன் (கொழும்பு), விஜயலக்சுமி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும், சுமதி (கொழும்பு), குணபாலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் சத்தியரூபனின் (அமெரிக்கா) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2011) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காக்கை தீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்,
சி.சண்முகநாதன்(கணவர்)

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

**Personal Class** தரம்3 - A/Lவரையான மாணவர்களுக்குEnglish Personal Class உம்Spoken with Grammar கற்க விரும்புவர்களுக்கு(**No age limit**)வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: அனுபவம் வாய்ந்த பிரபல ஆசிரியர், செட்டித்தெரு, நல்லூர் T.P:0778861621

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 21.03.1955
மறைவு 01.08.2011

அமரர் குழந்தைவேலு கண்மணிராசா

இமை மூடித் திறப்பதற்குள் நீர் மறைந்து
நாள்களோ முப்பத்தொன்றாகினவே!
நாம் வாழும் காலம் வரை உம் நினைவு
எம் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தி பெற அருளுமாறு காரைநகர்
வியாவில் ஐயனாரை இறைஞ்சுகிறோம்

மன்னார் றோட், ஆறாம் ஒழுங்கை,
வேப்பங்குளம், வவுனியா.

நி.முகவரி
பலகாடு,காரைநகர்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பொன். நடேசன்
(இளைப்பாறிய அதிபர்)
திதி:திருதியை-31.08.2011)

மனம் மகிழ:
1940.07.18

மனம்நெகிழ
2004.08.18

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததனால்
வானுறையும் தெய்வமாகினீர்''
எங்கள் கண்கண்ட தெய்வமே!
நித்தம் நித்தம் மாறுகின்ற இந்த உலகத்திலே
நெஞ்சில் நினைத்ததை எல்லாம் நடத்தி வைத்து
சென்ற இடத்திலும் மகளின் கல்வியையும் தொடர வைத்தாய்;
ஏழு ஆண்டுகள் ஏழு யுகங்களானாலும்
மறக்கும் உருவம் அல்ல; உங்கள் தத்துவமான
வார்த்தைகள் என்றும் எம்மை வழிநடத்திச் செல்லுமே!
மகள் எனது அப்பா ஒரு கனவான்
கற்பனையிலும் காணமுடியாத ஒரு தந்தை என்பாள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண வாழ்த்து



நிகழும் மங்களகரமான கரவருடம், ஆவணி மாதம் 14ஆம் நாள் இன்று (31.08.2011) புதன்கிழமை திருமணபந்தத்தில் இணையும்

**செல்வதீபன்- புவனேஸ்வரி**

ஆகியோரை பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**ஊடக நண்பர்கள்.**

(7406)

## மங்களகரமான திறப்பு விழா

இன்று (31.08.2011) புதன்கிழமை காலை 06.02 -07.10 மணி வரையுள்ள சுபவேளையில் எமது வியாபார ஸ்தாபனமான

## Green Leaf Cream House

சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இங்கு மெகா ஸ்பெசல், ஸ்பெசல், நட்ஸ், பலூடா, ஐஸ்கிறீம், ஐஸ் சொக், சர்பத், சோடா வகைகள், நெல்லி கிறஸ், சொக்லெட் வகைகள், பிஸ்கட் வகைகள், சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் ஓடர் செய்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

அனைத்து சுவைப் பிரியர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

**N.M.M.V. வீதி நெல்லியடி கரவெட்டி T.P. 0773773197**

## தென்கோவை திருவருள்மிகு கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்



இருபாலை, கோப்பாய்

### விநாயகர் சதுர்த்தி விஷேட தீர்த்தவாரி

கற்பகன் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான கர வருடம் ஆவணி மாதம் 15ஆம் நாள் (01.09.2011) வியாழக்கிழமை ஆவணிச் சதுர்த்தி நன்நாளில் ஆலயத்தில் அமைந்துள்ள சதுர்த்திப் பிள்ளையாருக்கு காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையும் பக்தர்கள் கற்பகப் பிள்ளையார் தீர்த்த புஷ்கரணியில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து தங்களுடைய கைகளால் தீர்த்தவாரி (நீர் ஊற்றுதல்) செய்வதற்கு கற்பகப் பிள்ளையார் திருவருள் கைகூடியுள்ளது. அன்று பிற்பகல் 4 மணி முதல் கற்பகப் பிள்ளையாருக்கு விஷேட அபிஷேகமும் விஷேட பூஜை வழிபாடுகளும் மாலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் இடம்பெற்று எம் பெருமான் வீதியுலா வருகின்ற கண்கொள்ளாக் காட்சியும் நடைபெறும்.

இருபாலை,
கோப்பாய்.

**தேவஸ்தானம்.**
(சி/3361)

## A/L முடிந்து விட்டதா?

### அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்...?

### பிரபல கம்பனிக்கு ஆள்கள் தேவை

எத்தனையோ வெற்றியாளர்களை உருவாக்கிய கம்பனி எமது கம்பனியே. உங்களை வெற்றியாளர் ஆக்கும், இதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

**நீங்கள் செய்யவேண்டியது இதுதான்**

★ உங்கள் கல்விச் சான்றிதழ்
★ தகைமைச் சான்றிதழ்
★ தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் (முக்கியம்)

உங்கள் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 10.09.2011 இற்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

**விளம்பர இல 4152**
**மே/பா உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## சமய சந்நிதிகளில்

இருபாலை கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விசேட தீர்த்தவாரி நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 3மணிவரை இடம்பெறவுள்ளது.

அன்றயதினம் பிற்பகல் 4 மணிக்கு விசேடபூசை வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப்பூசை இடம்பெறும். (ச-313)

* * *

தம்பசிட்டி, மாயக்கை சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும், 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமுத்திரதீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

சுழிபுரம் வழக்கம்பரை அம்பாள் ஆலய பிரதமகுருவான சக்தி உபாஷகர் சிவஸ்ரீசுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள் பிரதம குருவாக இருந்து பெருந்திரு விழாவை நடத்தி வைப்பார்.

(ச-236)

* * *

பளை, இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கும்பாபிஷேக நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7.35 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேகத்தை உசன் கந்தசுவாமிகோவில் பிரதம குரு கிரியாரத்தினம் பிரம்மஸ்ரீ இ.கேதீஸ்வரக்குருக்கள் பிரதிஷ்டா பிரதமகுருவாக இருந்து நடத்திவைப்பார்.

நாளை வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 3 மணி வரை பக்தர்கள் எண்ணொய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு வசந்த மண்டபத்தில் விசேட அலங்காரப்பூசை இடம்பெற்று அம்பாள் வீதி உலா வரும்காட்சி இடம்பெறும். (ச-236)

## காணி விற்பனைக்கு

நவக்கிரியில் தனிக் கிணற்றுடன் 117 பரப்பு, மற்றும் 14 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற் பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776569570, 0712696689

## வீடு வாடகைக்குத் தேவை

இரு அங்கத்தவருடைய குடும்பத்துக்கு 6 மாத காலத்துக்கு உடன் வீடு வாடகைக்கு தேவை. யாழ்.மா.சபை எல்லைக்குள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0770724810, 0770724811

## வீடு வாடகைக்கு தேவை

வைத்திய குடும்பம் ஒன்றுக்கு 3-4 Rooms, Attach bathroom, Car park உடன் கூடிய வீடு Town க்கு அண்மையில் உடன் தேவை.

* பெரிய கோயிலடி, Old Park Road விரும்பத்தக்கது.

T.P:0772269909, 0774965793

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு முன்னால் பலாலி வீதிக்குக் கிழக்குப் பக்கமாக இரண்டாவதாக அமைந்துள்ள "பழைய குடியிருப்பு" என்னும் நி.பர 10 விஸ்தீரண ஆதனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779499379

## கோழிக் குஞ்சு விநியோகம்

ஒரு நாள் பைரகா No.1 புறொயிலர் குஞ்சு 2.9.2011 இல் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

விவரங்களுக்கு:

S.கிருஷ்ணகுமார்.
விதானை வளவு,
மானிப்பாய்.
T.P.0772338084

## German, Swiss மொழிகள்

நீங்கள் கற்க வேண்டுமா? பல வருடமாக இயங்கி வரும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு Institute.

Germany யில் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப் படுகின்றது.

No. 10. Palaly Road, Jaffna.
T.P 0771604823

## இறைச்சிக் கோழி விற்பனை


உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்றர்,**
19, முருகேசர் லேன், நல்லூர்.

(7381) (38)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மடியில்
18 . 10 . 1942



இறை அடியில்
31 . 08 . 2010

### அமரர் வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை

(ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர், நில அளவைத் திணைக்களம், நாரஹேன்பிட்டி, கொழும்பு, மாவட்டச் செயலகம் (கச்சேரி) யாழ்ப்பாணம், கமநல சேவைகள் திணைக்களம், நல்லூர்)

கல்விதான் கண்திறக்கும் கரையேற்றும் வாழ்க்கையெனச்
சொல்லியெமைத் தூக்கிவிட்ட சுடர்விளக்கே!- நல்லபடி
வாழ வழிகாட்டி வளஞ்சேர்த்து மேலுலகை
ஆளநீர் போய் ஓர் ஆண்டு!

பிறருக்கு உதவுதலே இறையைப் பின்பற்றும் வழியென்று
உறவுக்கு சுவைசேர்த்த உத்தமரே!- வரலாறு
நல்ல மனிதர்களை நாளேட்டில் பதிந்து வைக்கும்
உள்ளதே உம்பேரும் உதில்!

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**குடும்பத்தினர்.**
(7413) (38)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் மலர்வு:
15.12.1919

விண்ணில் உதிர்வு:
11.09.2010

### திருமதி வன்னியசிங்கம் வள்ளிப்பிள்ளை

திதி: பூர்வ பக்க திருதியை (31.08.2011)

ஆண்டொன்று கழிந்தபோதிலும் ஆறவில்லை நம் துயரம்
ஈரைந்து மாதங்கள் எமைச் சுமந்து பெற்றெடுத்து
பாலூட்டித் தாலாட்டி எமை வளர்த்து ஆளாக்கி
எம் வாழ்வை வளமாக்கி உயர்வுபெற வைத்திட்டீர்
காலமது கரைந்தாலும் எங்களுடன் நீர் வாழ்ந்த
பசுமை மிகு நினைவுகளெம் மனதை விட்டு அகலாமல்
காலமெல்லாம் நிலைத்திருக்கும் விண்ணக வாழ்வதனை
நீர் ஏற்றுச் சென்றாலும் எம் மனதில் உம் நினைவு
என்றென்றும் நிலைத்திருக்கும் .

உங்களது ஆன்மா சாந்தி பெற இணுங்கித் தோட்டம் முருகப் பெருமானின் பாதம் பணிந்தேற்றுகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி தெற்கு, கைதடி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் முதன் முதலில் தோன்றிய சைவப் பாடசாலையான ஸ்ரீகணேசா. வித்தி.



லக்ஸ்மன்

மனித வளர்ச்சிக்கான வாய்ப்புக்களின் மூலகாரணமே கல்வி. அது எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்ற உயரிய நோக்குடன் பெரியார் பசுபதிப்பிள்ளையின் முயற்சியால் உருவானதே புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாலயம்.

புங்குடுதீவின் முதலா வது சைவப் பாடசாலையாக 1910 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 3 ஆம் திகதி இது ஆரம்பிக்கப்பட்டது. இந்த வித்தியாலயம் 1914 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10 ஆம் திகதி அரசின் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக மாறியது. 1923 இல் உயர்தர வகுப்புக்களைக் கொண்ட மத்திய பாடசாலையானது. 1967 இல் கல்விப்பகுதியின் பாடசாலைகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 1972 ஆம் ஆண்டு முதல் 1-9வரைவகுப்புக்கள் உள்ள கனிஷ்ட வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

இந்தப் பாடசாலையின் முதலாவது தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர் வேலணையைச் சேர்ந்த பண்ணிசைப் புலவர் கா.நமசிவாயம்பிள்ளை ஆவார். இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் எழுச்சிக்காகவும் அயராது பாடுபட்டவர். அவரைத் தொடர்ந்து தலைமை ஆசிரியரான இ.சதாசிவம் பிள்ளை இந்தப்பாடசாலைக்கெனப் பழையமாணவர் சங்கத்தை உருவாக்கி அதன்மூலம் பாடசாலையின் அபிவிருத்திக்கு வழியேற்படுத்தினார். இவர்களைத் தொடர்ந்து க.செல்லத்துரை, வை.கந்தையா ஆகியோர் தலைமை ஆசிரியர்களானார்கள். கந்தையாவின் காலத்தில் இந்தப்பாடசாலையின் கட்டடங்கள் திருத்தியமைக்கப்பட்டன. ஓலைக்கொட்டில்கள் ஓட்டுக்கட்டடங்களாக மாற்றியமைக்கப்பட்டன.

ஆரம்பகர்த்தாவான பசுபதிப் பிள்ளையின் முகாமைத்துவத்தின்கீழ் பாடசாலை மிகவும் சிறப்பாக இயங்கியதுடன் புங்குடுதீவின் நலனிலும் கவனம் செலுத்தி வந்துள்ளார். இந்தப் பாடசாலையின் சேவைகளை முதலாவது சபாநாயகரான சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி பாராட்டிப் பல தடவைகள் இங்கு பயணம் செய்ததுண்டு.

1938 இல் இங்கு இடம்பெற்ற பழையமாணவர் சங்கத்தின் ஆண்டு விழாக் கூட்டத்தில் கலந்துகொண்ட சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு கூறினார். ''பழையமாணவர் சங்கத்தின் ஆண்டுவிழா கூட்டத்துக்குச் சபாநாயகர் துரைசுவாமி வந்து திருக்கைலாய யாத்திரை குறித்து உபந்நியாசம் செய்தேன். கல்வியிலும் சமய அபிமானத்திலும் தேச சேவையிலும் ஈடுபட்ட அனேகமானோர் சமுகமாயிருந்தார்கள். இளைஞர் பலர் கதருடை அணிந்து தொண்டாற்றி நின்ற தன்மையைக் கண்டு மனமகிழ்வுற்றேன். இன்று பல பந்தைய ஆட்டங்கள் நடைபெறுகின்றன. இவையெல்லாம் நாட்டின் எதிர்கால நலனுக்கு உபகாரமாயிருப்பன. இந்தக் கல்விச்சாலை சிறந்த முறையாகச் செயற்பட்டு வருகிறதென்பதை அறிந்து பெருமகிழ்வு எய்துகிறேன்'' எனக் கூறி பாடசாலையின் செயற்பாட்டைப் பெரிதும் பாராட்டியிருந்தார்.

1940 ஆம் ஆண்டில் நடைபெற்ற பழையமாணவர் சங்க விழாவில் புங்குடுதீவுக்கு ஆங்கிலப்பாடசாலை வேண்டும் மென அப்போதய வித்தியாபதியால் டிறொபிசனிடம் விடுவிக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய 1946 இல் கணேச வித்தியாலய மண்டபத்தில் முதல் தடவையாக புங்குடுதீவு மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப் பட்ட பின்னரும் 21 ஆண்டுகள் வரை சிரேஷ்ட வகுப்புகள் இங்கே நடைபெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

1959 இல் புதிய கல்வித்திட்டத்துக்கு அமைய அப்போது யாழ்.மாவட்ட கல்வி அதிபதியாக இருந்த திருமதி இரத்தினம் நவரத்தினம் புதிய பாலர் களரி ஒன்றைத் திறந்து வைத்தார். அது இப்போதும் சிறந்த முறையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. 1973 இல் சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்த ஏ.ரி.அரியரட்ன புதிய நூலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்தப் பாடசாலையின் அதிபர்களாக நா.கார்த்திகேசு, சோ.சேனாதிராசா, த.துரைசிங்கம், ரி.தர்மலிங்கம், செ.ஈஸ்வரமூர்த்தி, ச.சதாசிவம், எஸ்.அமிர்தலிங்கம் ஆகியோர் கடமையாற்றியுள்ளனர். தற்போனதய அதிபராக என்.கே.சண்முகலிங்கம் பணியாற்றி வருகிறார்.

கல்வித்துறையில் உன்னத இடத்தைப் பெற்ற ஒரு பாடசாலையாக அதன் வரலாறு வளர்ச்சியடைந்து கொண்டிருந்ததால் ஆண்டுதோறும் மிகவும் கூடுதலான மாணவர்கள் இந்தப் பாடசாலையை நோக்கி வருவதால் இருந்து வந்த இடவசதிக் குறைகளைக் களைவதற்கு அதிபர் சண்முகலிங்கம் அனைத்துத் தரப்பினரதும் உதவிகளைக் கோரினார். இதனையடுத்து பெற்றோர், ஆசிரியர் சங்கம்,பழைய மாணவர் சங்கம், கல்வித்திணைக்களம் என்பன இந்தக் குறையை நீக்க நடவடிக்கை எடுத்தது. இதன் பயனாகப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

கல்விப் புனரமைப்பில் தொழில் முன்னிலைப் பாடங்களை மாணவர்களுக்கு வழங்குவதிலும் அக்கறை காண்பிக்கப்பட்டது. வரட்சியி னால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்தக் கிராமத்தில் மாணவர்கள் தமது முயற்சியினூடாக விவசாயத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகப் புங்குடுதீவு கிழக்கு தல்லையப்பற்று முருகமூர்த்தி கோயில் தர்மகர்த்தா சபையிடம் இருந்து காணி ஒன்றைக் குத்தகைக்குப் பெறப்பட்டது. அதில் கிணறொன்றும் அமைக்கப்பட்டது.

புதிய கல்வித்திட்டத்தின் பயனை மாணவர்கள் முழுமையாகப் பெறுவதற்கு உகந்த முறையில் அதன் செயற்பாடுகள் உள்ளதாகப் புங்குடுதீவு மக்கள் பெருமிதம் கொள்கின்றனர். அதிபர், ஆசிரியர்களுடன் பாடசா லையின் வளர்ச்சிக்காகக் கிராமசேவகர் சின்னத்துரை, திருமதி தையல்நாயகி ஆகியோர் அர்ப்பணிப்பான செயற்பாடுகளை வழங்கியுள்ளனர். மாணவர்களின் எதிர்கால உளவளர்ச்சி பாடசாலை களிலேயே தங்கியுள்ளது என்பதால் நிதிப் பற்றாக் குறை; ஆசிரியர் பற்றாக்குறை போதிய கற்றல், கற்பித்தல் சாதனங்கள் இன்மை போன்ற குறைபாடுகளைக் களையக் கூடியதாக இங்கு நிரந்தர வைப்பு நிலையம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கென புங்குடுதீவைச் சேரந்த பலர், தமது உதவிகளை வழங்கியுள்ளனர்.

1991 இல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் புங்குடுதீவு மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் தற்காலிகமாக இயங்கிய இந்தப் பாடசாலை புங்குடுதீவின் நிலைமை ஓரளவு சாதாரண நிலைக்கு வந்ததையடுத்து முன்னாள் பிரதி அதிபர் கார்த்திகேசு, சி.இரத்தினசபாபதி ஆகியோர் அப்போதைய கல்விப் பணிப்பாளர் சு.இரத்தினராசாவுடன் தொடர்பு கொண்டதை அடுத்து பல்வேறு சிரமங்களுக்கு உட்பட்டு அங்கு சென்ற சண்முகலிங்கம் அங்கிருந்த ஏனைய சிலரின் உதவியுடன் பாடசான்லயைப் பொறுப்பேற்று நடத்தினார்.

கடந்த 2010 இல் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய இந்தப் பாடசாலை இப்போது 210 மாணவர்களையும் 16 ஆசிரியர்களையும் கொண்டு இயங்குகிறது. இல்ல விளையாட்டுப் போட்டிகளுடன் மாவட்டப் போட்டிகளிலும் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். நூறு ஆண்டுகளைக் கடந்தும் புங்குடுதீவின் சைவசமய கலாசார, சமூக வளர்ச்சிக்கான சகலதுறைகளிலும் அளப்பரிய தொண்டாற்றி வரும் இந்தப் பாடசாலை பல்துறைசார் திறமைகளையும் புங்குடுதீவில் உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. ★

புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்கள்கரமான கர வருடம் ஆவணி மாதம்
14ஆம் நாள் இன்று (31.08.2011) புதன்கிழமை
காலை 9.12 மணி முதல் 10.08 வரையிலான
துலா லக்கினமும் உத்தர நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும்
கூடிய சுபவேளையில்
எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

லட்சுமி வாசம்

என்னும் புதுமனையில் கிருகப் பிரவேசம்
செய்ய இறையருள் கூடியுள்ளதால் அத்தருணம் தாங்கள்
தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து
இந்த நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்

தாங்கள் நல்வரவை நாடும் :

திரு. திருமதி
கனகசபை தர்மகுலசிங்கம் - தனலட்சுமி
குடும்பத்தினர்.

144/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

aat (SriLanka)
Foundation , Intermediate & Final
Medium :- English & தமிழ்
* க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன்
உங்கள் பதிவுகளை 12-09-2011முன் மேற்கொள்ளவும்

Certificate Course in English
commenced on 10-09-2011
Day Classes :- Monday & Friday
Weekend classes :- Saturday & Sunday

Chartered Accountancy
Foundation level & Intermediate level
(CAB-I & CAB-II)
Medium :- English & தமிழ்
Minimum Requirement :- GCE A/L 3 Passes
** இம்முறை A/L பரீட்சை எழுதிய
மாணவர்களும் பதிவினை மேற்கொள்ளலாம்

வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான
வங்கியியல் கற்கைநெறிகள்
CBF,DBF
அடிப்படைத்தகமைகள்
G.C.E.( O/L) 06 PASSES WITH 05 Gredits including
Maths/Commerce & Accounts, and Language (Tamil/English)

External Degree (Jaffna University)
G.A.Q, B.A 1 & B.A Final
1st in com,B.com (1&11), Final

Further Detail,
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான மூன்று அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு தீர்மானம்

## ஊழியர்களுக்கு நட்டஈட்டுடன் ஓய்வு

கொழும்பு, ஓக.31

இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனம், கந்தளாய் சீனித் தொழிற்சாலை, எம்பிலிப்பிட்டிய கடதாசி ஆலை ஆகிய மூன்று அரச நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதன்காரணமாக அந்த நிறுவனங்களில் தற்போது பணிபுரியும் ஊழியர்களுக்கு நட்டஈடு மற்றும் ஓய்வூதியம் வழங்கி கட்டாய ஓய்வில் அனுப்புவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய இந்த நிறுவனங்களில் பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு இந்தவருடம் டிசெம்பர் மாதம்வரை சம்பளம் வழங்குவதற்கு ஏழுகோடி 15 லட்சம் ரூபாவை வழங்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டிய கடதாசி ஆலையின் ஊழியர்களின் மாதாந்த சம்பளம் 43 லட்சம் ரூபா வீதம் ஐந்து மாதங்களுக்கு 2 கோடியே 15 லட்சமும், கந்தளாய் சீனித் தொழிற்சாலை ஊழியர்களின் மாதாந்த சம்பளம் 10 லட்சம் ரூபா வீதம் 50 லட்சம் ரூபாவும்,

இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனத்துக்கு மாதாந்தம் 90 லட்சம் ரூபா வீதம் 4 கோடியே 50 லட்ச ரூபாவும் திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளது.

இந்த மூன்று நிறுவனங்களையும் புனர்நிர்மாணம் செய்யும்பொருட்டு தனியார் முதலீட்டாளர்களிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த வருடம் ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலப்பகுதியில் இந்த மூன்று நிறுவனங்களின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க இதே அளவு தொகை திறைசேரியால் வழங்கப்பட்டது. எனினும், தனியார் முதலீட்டாளர்களைத் தேடிக்கொள்ள ஏற்பட்ட சிக்கல் காரணமாக இந்த நிறுவன ஊழியர்களுக்கு மேலும் ஆறுமாத சம்பளத்தை வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

அதேசமயம், தாமாகவே விலகிக் கொள்ள விரும்பும் ஊழியர்களுக்கான நட்டஈட்டை வழங்குவதற்கான கணிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு அரசு, சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு பணிப்புரை வழங்கியுள்ளது.

அதற்கமைய இந்த நிறுவனங்களின் ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்கி அவர்களது சேவைகளை நீக்கம் செய்யும்வரை அவர்களுக்கான மாதாந்த சம்பளம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# போலி மருந்தகங்கள் முற்றுகை; சுகாதார அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 31

பதிவு செய்யப்படாமல் சட்டவிரோதமாக நடத்தப்படும் பார்மசிகளைக் கண்டுபிடிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கையொன்றை முன்னெடுத்துள்ளது.

இலங்கையில் சுமார் மூவாயிரம் தனியார் மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. இவை வருடாந்தம் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகாரசபையில் பதிவு பெற வேண்டியது அவசியம்.

எனினும்,ஏராளமான மருந்தகங்கள் பதிவுபெறாலேயே இயங்கி வருகின்றன என சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக கடந்த சனிக்கிழமை அதிகாரசபையின் பணிப்பாளர் ஹேமந்த பெணரகம வின் தலைமையில் சென்ற அதிகாரிகள் குழு கொழும்பு, மருதானை பஞ்சிகாவத்தை ஆகிய பிரதேசங்களில் இயங்கும் 10 மருந்தகங்களைச் சோதனையிட்டபோது அவற்றுள் நான்கு பதிவுபெறாமல் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பயிற்சி பெறாதவர்களைப் பணியில் அமர்த்துவது, வைத்தியர்களின் மருந்துச்சீட்டு இன்றி மருந்துகளை விற்பது, ஒவ்வொரு மருந்தும் அதற்கான நிர்ணய வெப்பநிலையில் குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்படாமை, மருந்துகளையும் உணவுப் பொருள்களையும் ஒரே குளிர்சாதனப்பெட்டியில் களஞ்சியப்படுத்தல், பாவனையில் இருந்து நீக்கப்பட்ட மருந்துகளை விற்பனை செய்தல்,தரம் குறைந்த மருந்துகளை விற்பனைசெய்தல், வைத்தியர் பரிந்துரை செய்த மருந்துகளுக்குப் பதிலாக விலைகூடிய மாற்று மருந்துகளை விற்றல் போன்ற விடயங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிரிசேன அதிகார சபைக்கு உத்தரவிட்டுள்ளதையடுத்தே இந்த முற்றுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த முற்றுகை நாடளாவிய ரீதியில் மருந்துகள் மற்றும் உணவுப் பொருள்கள் பரிசோதகர்களின் மூலம் மேற்கொள்ளப்படும். (ச-5)

# அனுமதிப்பத்திரங்கள் இல்லாத ஹோட்டல்களுக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஓக 31

கொழும்பில் இயங்கும் ஹோட்டல்களில் 50 சதவீதமானவை அனுமதிப்பத்திரங்கள் இன்றி இயங்கி வருவதாகவும், அவற்றிற்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டு வருவதாகவும் கொழும்பு மாநகரசபையின் பிரதம சுகாதார வைத்தியர் டாக்டர் பிரதிப் காரியவசம் தெரிவித்தார்.

வருடாந்தம் மாநகர சபையால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இந்தக் ஹோட்டல் உரிமையாளர்கள் அக்கறை காட்டுவதில்லை.

ஹோட்டல் ஊழியர்களின் குறித்து மருத்துவ அறிக்கைகளை சமர்ப்பிக்காமை, உணவுப் பொருகளை சுகாதாரமாகத் தயாரிக்காமை, பாதுகாக்காமை, உணவு தயாரிக்கவும் குடிப்பதற்கும் சுத்தமான தண்ணீரைப் பயன்படுத்தாமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் இவர்களுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ள தென அவர் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த வாரம் கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் உணவை உட்கொண்ட குடும்பத்தினர் உணவு விஷமானதால் சுகவீனமுற்று வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர் எனத் தகவல் கிடைத்துள்ளதாகவும், அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தொழில்நுட்பக் கலைஞர் மரணம்; சந்தேகத்தில் நால்வர் கைது

கொழும்பு, ஓக.31

இலங்கை மத்திய வங்கியில் பணிபுரிந்த தொழில்நுட்பக் கலைஞர் ஒருவர் 3 வாரங்களுக்கு முன்னர் மர்மமான முறையில் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் பெண் உட்பட நால்வர் கடந்த வியாழக்கிழமை பிலியந்தலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொலையுண்டவர் பணிமுடிந்து கோட்டை ரயில் நிலையத்துக்கு வந்தபோது இனம்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுக் கிடந்த நிலையில் பொலிஸா ரால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் அடுத்த நாள் மரணமானார்.

அவரிடமிருந்த கையடக்கத் தொலைபேசியில் பதிவாகியிருந்த இலக்கமொன்றைப் பின்பற்றிய பொலிஸார் மாளிகாவத்தையில் பெண்ணொருவரைக் கைது செய்ததுடன் மேலும் மூவரையும் கைதுசெய்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச-5)


## மரண அறிவித்தல்கள்

### சவரிமுத்து சூசைப்பிள்ளை

(முன்னாள் அதிபர்)

(B.A. Lon. Hons, Dip.in Edu, Dip. in Tamil)



கதீற்றல் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சவரிமுத்து சூசைப்பிள்ளை 28.08.2011 இல் காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01.09.2011) வியாழக்கிழமை பி.ப 3. மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.11, கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி சண்முகவேல் ஆச்சாரி கமலவல்லி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகவேல் ஆச்சாரி கமலவல்லி நேற்றுமுன்தினம் (29.08.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா ஆச்சாரி - சிதாலக்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா ஆச்சாரி -வேலம்மாள் தம்பதியரின் மருமகளும் சண்முகவேல் ஆச்சாரியின் அன்பு மனைவியும் சுந்தரவல்லி, புஸ்பவல்லி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சந்திரசேகரன்(HNB Assurance), பாலா, சுரேஸ்கண்ணா ஆகியோரின் பாசமிகு தாயும் யசிந்தா, சித்திரா, ரேவதி ஆகியோரின் பாசமிகு மாமியும் நிசாந்தசேகரம் , கஜனி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2011) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


# புதிய பஸ் நிலையம்

வவுனியார்,ஓக.31

வவுனியாவில் புதிய பஸ் நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளது.

வவுனியா ஏ-9 வீதியில் தாண்டிக்குளம் அரசினர் பண்ணைக் காணியில் இந்த புதிய பஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் தனியார் பஸ் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் ரத்நாயக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சசி வெல்கம, அத்தியட்சகர் கலேகல, அமைச்சின் செயலாளர் விக்டர் சமரவீர மற்றும் பலர் கலந்து கொண்டனர். (க)


### அருள் முருகன் திருமணப் பணியகம்

மணமகள் தேவை: உயர் கௌரவ குடும்பம், 1980 சித்திரை 1ஆம் பாதம் செவ்வாய் 10 இல், கி.பா 6 ¾, பட்டதாரி, அரச பதவியில் உள்ள மணமகனுக்கு பொருத்தமான மணமகள்தேவை. ஜாதகங்கள், போட்டோவுடன் தொடர்பு கொள்ளவும். தபாலிலும் அனுப்பி வைக்கலாம். Doctors, Engineers உட்பட ஏராளமான மணமக்கள் எமது கௌரவ சேவையில் உள்ளனர். விரும்பும் மணமக்களை பெற்றுக் கொள்ளலாம்.

03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன்(Cosy Restaurant Lane)
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3334, 0718475114

## மரண அறிவித்தல்

### சபாரத்தினம் சுப்பிரமணியம்



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சுப்பிரமணியம் 29.08.2011 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம்-ராஜலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் தர்மசோதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் - மகிழம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இந்துமதியின் பாசமிகு தந்தையும் வென்ற் (Bent) இன் அன்பு மாமனும் தாரணி சினேகாவின் பாசமிகு பேரனும் திருச்சிற்றம்பலம், இந்திரா, சிவசோதி, தேவராணி, காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் தனபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தாமோதரம் பிள்ளை, உமாபதி, சிவலிங்கம், சிவனேஸ்வரி, லோஜினி, நிமலநாயகி, அற்புதராஜன், வைத்தியநாதன், காலஞ்சென்றவர்களான சாந்தசோதி, விஜயலட்சுமி மற்றும் கோகிலா, மகேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் கௌரிசங்கரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.08.2011) புதன்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மைதானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் , அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண தண்டனை ஒத்திவைப்பு தமிழகத்தில் கொண்டாட்டம்



முருகன் சாந்தன் பேரறிவாளன்

சென்னை, ஒக. 31

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்குத்தண்டனையை 8 வாரங்களுக்கு ஒத்தி வைக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியதை அடுத்து தமிழகம் முழுவதும் வெடி கொளுத்தி, இனிப்பு வழங்கி மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

மேற்படி மூவருக்கும் எதிர்வரும் 9ஆம் திகதி தூக்கிலிடுமாறு உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டிருந்தது. இதை எதிர்த்து தமிழகமெங்கும் பல்வேறு தரப்பினரும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மேலும், தூக்குதண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று மூவரின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீது இந்தியாவின் மூத்த சட்டத்தரணி ராம்ஜெத்மலானி உட்பட பல சட்டத்தரணிகள் வாதாடினர். இதையடுத்து மூவரின் தூக்கை 8 வாரங்களுக்கு நிறுத்தி வைக்க நீதிபதி உத்தரவிட்டார். தூக்கில் போடத் தடை விதிக்கப்பட்டதை அடுத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் கொண்டாடினர்.

மேலும், தூக்குக்கு எதிராக தமிழகமெங்கும் போராடியோர் வெடிவெடித்து,இனிப்புகள்வழங்கி கொண்டாடி வருகின்றனர். (வ)

## மரண தண்டனை ஒத்திவைப்பு
# 20 வருடப் போராட்டத்துக்கு கிடைத்த முதல் வெற்றியாகும்

### நீதிமன்றத் தீர்ப்பின் பின் நெடுமாறன்



சென்னை, ஒக.31

ராஜீவ் கொலை தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவரின் மரண தண்டனையை 8 வாரங்களுக்கு ஒத்தி வைக்குமாறு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது இருபது ஆண்டு கால தொடர்ச்சியான நீண்ட போராட்டத்துக்குக் கிடைத்துள்ள முதல் கட்ட வெற்றி என்று தமிழர் உயிர்காப்பு இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இந்த இடைக்கால உத்தரவு குறித்து பழ.நெடுமாறன் கூறுகையில்;

சட்டமன்றத்திலும் கூட நேற்று மரண தண்டனைக்கு எதிரான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இது மக்களுக்குக் கிடைத்த வெற்றி. இதை மேலும் மேலும் நிரூபிக்கும் வகையில் தொடர்ந்து மக்களைக் கட்டியெழுப்ப வேண்டும். நாம் தொடர்ந்து போராட வேண்டும்.

மூவரும் விடுதலையாகும் வரை எமது போராட்டம் ஓயாது, ஓயாது, ஓயாது - என்றார். (வ)

## பேரறிவாளனின் தாய் முதல்வருக்கு நன்றி




சென்னை, ஒக.31

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்குமாறு தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய முதல்வர் ஜெயலலிதாவுக்கு பேரறிவாளனின் தாயாரான அற்புதம்மாள் நன்றி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:

மரண தண்டனையை எதிர்த்து தொடர்ந்து போராடப் போவதாகவும் அறிவித்துள்ளார். தமக்கு ஏற்பட்ட வேதனை வேறு யாருக்கும் ஏற்படக்கூடாது என்றும் அற்புதம்மாள் கூறியுள்ளார்.(வ)




ராஜீவ் கொலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன் மற்றும் முருகன் ஆகிய மூவரையும் விடுதலை செய்ய வலியுறுத்தி நேற்று செவ்வாய்க் கிழமை பெங்களூர் நகரப் பகுதியில் அமைந்துள்ள நகர மண்டபம் முன்பாக பெருந்திரளான மனித உரிமை ஆர்வலர்களும், தமிழ் உணர்வாளர்களும் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ராஜீவ் சிலை மீது தார்! சென்னையில் பதற்றம்

சென்னை, ஒக.31

சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள ராஜீவ் காந்தி சிலைக்கு தார் பூசி அவமதிக்கப்பட்டதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவுள்ள மூவரையும் காக்கக் கோரி பல்வேறு வழிகளில் போராட்டங்கள் தீவிரமாக இடம் பெற்று வருகின்றன. இதனால் தமிழகம் முழுவதும் பரபரப்பு நிலவுகிறது.

இந்த நிலையில், சென்னை சைதாப் பேட்டையில் உள்ள ராஜீவ் காந்தி சிலையில் தார் பூசி அவமதிக்கப்பட்டுள்ளது. நள்ளிரவில் இந்த செயலை சிலர் செய்து விட்டு தப்பி ஓடி விட்டனர்.

இதுகுறித்துப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்ததும் விரைந்து வந்து சிலைக்குப் பாதுகாப்புக் கொடுத் துள்ளனர். சிலையை அவமதிக்கப்பட்ட தகவல் பரவியதும் காங்கிரஸார் அங்கு குவிந்துள்ளனர். சிலையை அவமதித் தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி அவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளதால் பரபரப்பும், பதற்றமும் நிலவுகிறது. (வ)

# விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி



பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய தமிழக முதல்வருக்கு தமிழக முதல்வருக்கு விடுதலை சிறுத்தைகள் நன்றி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்தக் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

இந்த மூவரின் மரண தண்டனையைக் குறைப்பதற்கான அதிகாரம் தமிழக முதல்வருக்கு உள்ளது என்பதை மேல் நீதிமன்ற தீர்ப்புகளை மேற்கோள் காட்டி விடுதலை சிறுத்தைகள் எடுத்துக்கூறியிருந்தது.

விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட தமிழ் மக்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து தமிழக முதல்வர் நடவடிக்கை எடுத்திருப்பதை மனதார பாராட்டி வரவேற்கின்றோம் என்று தெரிவித்துள்ளார். (வ)

# முருகனைச் சந்திக்க அனுமதிக்குக!

## நளினி தமிழக அரசுக்கு மனு



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட தனது கணவரான முருகனைச் சந்திக்க அனுமதி வழங்குமாறு அவரது மனைவி நளினி சிறை அதிகாரிகள் மூலம் தமிழக அரசுக்கு மனு ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பியுள்ளார்.

இதே வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முருகனின் மனைவி நளினி சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மரண தண்டனையை எதிர்நோக்கி உள்ள தனது கணவர் முருகனை சந்தித்துப் பேச அனுமதி கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் சிறை அதிகாரிகள் மூலம் நேற்று முன்தினம் தமிழக அரசுக்கு விண்ணப்ப மனு அனுப்பி உள்ளார். அதில் வேலூர் சிறையில் இருக்கும் கணவர் முருகனை சந்திக்க அனுமதிக்குமாறு கூறியுள்ளார்.

தமிழக அரசு அனுமதி அளித்ததும் நளினி பொலிஸ் பாதுகாப்புடன் வேலூர் சிறைக்கு அழைத்துச் செல்லப்படுவார். அங்கு அவர் முருகனைச் சந்தித்துப் பேசுவார் என்று தகவல்கள் குறிப்பிடுகின்றன. (வ)

# அர்ஜுனா விருதுகள் ஜனாதிபதி வழங்கினார்

டில்லி, ஒக.31

ராஜீவ் கேல் ரத்னா, அர்ஜுனா விருதுகளை ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் நேற்று முன்தினம் வழங்கினார்.

நாட்டின் சிறந்த வீரர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான ராஜீவ் கேல் ரத்னா விருது துப்பாக்கி சுடும் வீரர் ககன் நரங்கிற்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதிபா பாட்டீல் இந்த விருதை வழங்கினார்.

வேகப்பந்து வீச்சாளர் ஜாகிர் கான், தடகள வீராங்கனை பிரிஜா ஸ்ரீதரன், ஜுவாலா கட்டா, சோம்தேவ் தேவ் வர்மன் உள்ளிட்ட 19 பேர் அர்ஜுனா விருது பெற்றனர். (வ)

# மரண தண்டனை ஒத்திவைப்பு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது

### முருகன் மகள் அரித்திரா


ராஜீவ் கொலை தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட எனது தந்தை உள்ளிட்டோரின் தூக்குத் தண்டனை ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக வெளியான தகவல் எனக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. இதற்காக பாடுபட்ட அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன் என்று முருகனின் மகள் அரித்ரா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

மரண தண்டனை ஒத்தி வைக்கப்பட்ட தகவல் எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்துள்ளது. இதற்காக பாடுபட்ட, போராடிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். நான் மிக மிக மகிழ்ச்சியாக உள்ளேன்.

ராகுல் காந்தி, பிரியங்காவுக்கு இந்த உத்தரவு கடினமானதாக இருக்கும். ஆனால் எனது பெற்றோர் தவறு செய்யாதவர்கள், அவர்கள் அப் பாவிகள். இந்த உத்தரவு எனக்கு மிகவும் முக்கியத்துவமிக்கது, மதிப்பு மிக்கது - என்றார் அரித்ரா.(வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அருள்மிகு வற்றாப்பளை ஸ்ரீ ஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலய புதிதாக செய்யப்பட்ட உற்சவ மூர்த்திக்கான கும்பாபிஷேக பெருவிழா - 31.08.2011

## ஆசியுரை

ஞானமூர்த்திப் பிள்ளையார் வற்றாப்பளை என்னும் கிராமத்தில் தோன்றிய காலம் தமிழ் என்று தோன்றியதோ கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் தோன்றியது என்றும் ஞானத்தைப் பொழிந்து கொண்டு இருக்கும் ஞானமூர்த்தி பிள்ளையார் அந்தக் கிராமத்தில் புத்திர பாக்கியம் கிடைப்பது அரிதாக இருந்தது ஞானமூர்த்தி பிள்ளையார் ஆலயத்தை மக்கள் தோற்றுவித்து வழி பாடு செய்த பிறகுதான் மக்கள் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்கள். எந்த சுகயீனம் என்றாலும் முக்கியமாக தலையிடிஎன்றால் ஒரு தேங்காய் நேர்ந்து வைக்க நோய் சுகமாகும். இன்று அவருடைய ஆலயத்தில் உற்சவமூர்த் திக்கு கும்பாபிஷேகமும் நாளை வியாழக்கிழமை ஆவணி சதுர்த்தி திருவிழாநடைபெறும்.

சிவஸ்ரீ.சிவ.கந்ததாசகுருக்கள்
வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பிரதமகுரு.

விநாயகர் துதி
திருவாக்கும் செய்கருமம் கை கூட்டும்
செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும்
உருவாக்கும் ஆதலால் வானோரும்
ஆனைமுகத்தானை காதலாற் கூப்புவர் தம்கை
திருச்சிற்றம்பலம்

## ஆலயப் பூசகர் சிவஸ்ரீ.கு.கிருஸ்ணபவன் அவர்களின் ஆசிச்செய்தி

வற்றாப்பளையில் அமர்ந்து மக்கள் குறைதீர்க்கும் ஞானமூர்த்தி விநாயகப் பெருமானின் "திக்விஜயம்" நிறைவடைந்து எம்பெருமானின் உற்சவ மூர்த்திக்கான கும்பாபிஷேகம் 31.08.2011 (புதன் கிழமை) நடந்தேற இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

எம்பெருமானின் குளிர்ச்சி எமது மக்களின் மனங்க ளிலும் குளிர்ச்சியை உண்டாக்கும் என்பது திண்ணம்.

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்"

சிவஸ்ரீ.கு.கிருஸ்ணபவன், ஆலயப் பூசகர்.

## அருள்மிகு ஸ்ரீ ஞானமூர்த்திப் பிள்ளையார் ஆலய வரலாறு

எழில் நிறைந்த இலங்கை மணித்திருநாட்டின் வளம் மிகுந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை என்பது தொன்மை வாய்ந்த ஒரு கிராமம். பத்தினியாள் உவந்து அமர்ந்த இடமும் இதுதான். இந்தக் கிராமத்தில் இந்த மக்களுக்கு ஒரு குறை இருந்தது. அது தான் பிறக்கும் குழந்தைகளில் பெரும்பாலானவை அவலக்குரல் எழுப்பியபடி இறந்து விடுவது. இவ்வாறு மக்கள் துன்பமுற்று இருக்கும்போது ஒரு ஞானி வற்றாப்பளைக்கு வருகை தந்தார். மக்களின் குறைகண்டு கவலை கொண்டார். அதனை நிவர்த்திக்க வழிகண்டார். இந்தியாவில் இருந்து விநாயகர் சிலை ஒன்றைக்கொண்டு வந்து பிரதிட்டை செய்து வைத்தார். அன்றில் இருந்து குழந்தைகளின் அவலச்சாவும் நின்று போனது. மக்கள் மனம்நிறைந்து வாழ்ந்தனர். அதனால் பிள்ளையாருக்கு ஞானமூர்த்திப் பிள்ளையார் எனும் பெயர் வந்தது.

மிகத் தொன்மையான வரலாற்றைக்கொண்ட இந்தக் கிராமத்தின் மக்கள் குடியிருப்புக்கள் ஆரம்பத்தில் இக்கோயிலைச் சூழவே அமைந்திருந்தன. இடைப்பட்டகாலத்தில் இக் குடியிருப்புக்கள் வற்றாப்பளையின் வடக்கு, கிழக்கு பகுதிகளை நோக்கி நகர்ந்தன. பறங்கியரின் படையெடுப்பு போன்ற காரணிகள் இதற்கு காரணமாக அமைந்திருக்கலாம். இந்த ஆலயத்துக்கு ஆரம்பத்தில் செங்கல்லால் ஆன சுற்றுமதில் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. எனவே இந்த ஆலயத்தின் பின்னணியில் மிகப்பழமையான ஒரு வரலாறு மறைந்து போயுள்ளது. பிள்ளையாராகப்பார்த்து அதனை வெளிப்படுத்தாதவரைக்கும் அந்த வரலாற்றை யாரும் கண்டறிவது நடக்காத காரியமே!

இவ்வாறான வரலாற்றைக் கொண்ட பிள்ளையார் கடந்த ஒர் நூற்றாண்டுக்கும் மேலாகக் காடுகள் சூழ்ந்த பிரதேசத்தில் மிக அமைதியாகக் கொலுவிருக்கின்றார்(தற்போது அப் பகுதியில் குடியிருப்புக்கள் ஒரளவுக்கு உள்ளன) எனினும் அவரது அற்புதங்கள் அநேகம். மதங்கொண்ட யானையொன்று பிள்ளையாரின் ஆலயத்தின் கிடுகுத்தட்டியை பிடுங்கி எறிந்தபின் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டு மடிந்து போனது இக் கிராமம் அறிந்த உண்மை.

இதேபோல ஞானமூர்த்திப் பிள்ளையாருக்கு பொங்கல்செய்யச் சென்ற பக்தர் ஒருவர் தீப் பெட்டியைக் கொண்டு செல்ல மறந்து விட்டார். திரும்பவும் குடியிருப்புக்கள் உள்ள பகுதிக்கு வந்து தீப்பெட்டியை எடுத்துச்செல்வதெனில் குறைந்தது ஒரு மைல் தூரம் நடக்க வேண்டும். என்ன செய்வதென்று அவர் யோசித்த வண்ணம் சுற்றும் முற்றும் பார்க்கிறார். ஆளில்லாத இடத்தில் இருந்த ஆலயத்தின் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அதில் நெருப்பெடுத்து பொங்கிப் படைத்தபின் அவர் ஊருக்குள் வந்து இதனைச் சொல்லி மெய்சிலிர்த்து ஏறத்தாழ மூன்று தசாப்தங்களின் முன்னர் நடந்த அற்புதம்.

இதே போல் தீராத நோய்தீர்க்கும் மருந்தாகவும் பிள்ளையார் அருள்பாலிக்கின்றார். தீராத தலையிடியையும் அவரை வேண்டி ஓர் சிறிய காணிக்கை செலுத்தி நினைந்தால்போதும் தலையிடியும் மறைந்துபோகும். திருடர்கள் மக்களின் ஆநிரைகளை கவர்ந்து சென்றாலோ அல்லது அவை காட்டில் இடம் மாறினாலோ பிள்ளையாரை நினைந்து வழிபட்டால் போதும் காணாதுபோன ஆநிரைகள் வீடு வந்து சேரும். பிள்ளை வரம் வேண்டும் என பிள்ளையாரை வேண்டினால் போதும். அவர்களின் மனம் நிறைந்த பிள்ளைச் செல்வம் கை கூடப் பெற்று அடியவர்கள் அவருக்குகாணிக்கை செலுத்தி வழிபடுவார்கள். அவ்வளவு அருளைப்பெற்று எத்தனையோ அடியவர்கள் ஞானமூர்த்தியானின் சிறப்பையும் மகிமையையும் தங்கள் வாழ்நாளில் அனுபவிக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு அடியாருக்குள்ளும் ஒளிந்து கொண்டிருக்கும் அற்புதங்கள் அநேகம். இன்று இவ்வாலயம் நிரந்தரமான சிறிய கட்டடங்களுடன் எழுந்து நிற்கிறது. பிள்ளையார் காட்டுக்குள் இருந்து நாட்டு மக்களுக்கு நேரடியாக அருள்வதற்காக 24.08.2011புதன்கிழமை தொடக்கம் திக்விஜயம் மேற்கொண்டிருக்கிறார். இவ் விஜயத்தின் எழுந்தருளி விக்கிரகத்துக்கு கும்பாபிஷேகம் செய்யும் பெருவிழா 31.08.2011 திகதி இடம் பெறவுள்ளது. ஞான மூர்த்திப் பெருமானுக்கு அன்னதான மண்டபம், ஆலய மண்டபங்கள் உட்பட இன்னும் அநேக திருப்பணிகள் செய்ய வேண்டியுள்ளன. அவையும் அவனருளால் ஆகும். அதற்கு உதவும் பாக்கியத்தையும் அடியவர்களுக்கு அவனே அருளப் பிரார்த்திக்கிறோம்.

## குடமுழுக்குப் பெருவிழா காணும் வற்றாப்பளை ஞான மூர்த்தி விநாயகர்

வழங்கொழிக்கும் வன்னிப் பெருநிலப்பரப்பின் முல்லையும் மருதமும் நெய்தலும் கொண்டு விளங்கும் முல்லைமாவட்டத்தின் அம்மன் குடி கொண்ட பத்தாப்பளையாம் வற்றாப்பளை கிராமத்தில் ஞானமே மூர்த்தியாக வந்துதித்த விநாயகர் வேண்டும் வரமருளிவிக்கினங்களைப் போக்கும் எம்பெருமானுக்கு கும்பாபிஷேகம் செய்வதையிட்டும் முல்லைத்தீவு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் என்ற வகையில் மட்டற்ற மன மகிழ்வடைகிறேன்.

வற்றாப்பளைக் கிராமத்தில் உள்ள சக்தி மிக்க ஒரே ஒரு விநாயகப் பெருமானாக விளங்குவது யாவரும் அறிந்த ஒன்று.

இவ்வாலயபரிபாலன சபையினரின் அயராத முயற்சியால் யுத்தத்துக்குப் பின்னர் மீண்டும் மக்களின் வழிபாட்டுக்கு ஏற்ற முறையில் புனரமைக்கப்பட்டிருப்பது பாராட்டுதற்கு உரிய ஒன்றாகும். தனவான்கள் அதிகம் இல்லாத சிறுகிராமத்தில் உள்ள மக்களின் அர்ப்பணிப்பினால் ஆலயம் புனரமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

வயல் நிலத்தை அண்டிய பனம்தோப்பு ஒன்றின் மத்தியில் இந்த ஆலயம் அமைந்திருப்பதால் அநேகமான மக்கள் அறிவதற்கு வாய்ப்பு அரிது என்றே கூறிவிட முடியும் நீண்ட கால பிரயர்த்தனத்தினால் இந்த மக்களின் கனவு நிறைவேறும் இந்தக் கைங்கரியத்தினைப் பாராட்டுவது அதிமுக்கியமானதாகும்.

அத்தோடு யுத்தத்துக்கு பின்னர் இந்துகலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இதுவரை எதுவித நிதியுதவியும் வழங்கப்படவில்லை. ஆனால் எதிர்வரும் காலங்களில் எமது மேலதிகாரிகளின் நடவடிக்கைகளின் மூலம் நிதியுதவி பெற்றுத் தர என்னால் இயன்றவரை முயற்சிப்பேன் என்பதையும் இந்த மலர்மூலம் தெரிவித்துக் கொள்ள விரும் புகிறேன்.

என்னையும் ஒருபொருட்டாக எண்ணி இம் மலருக்கு ஆசியுரை வழங்கக் கோரிய பரிபாலன சபையினருக்கு, பெருளாளருக்கும் பூசகருமான கிறிஸ்ணபவன் ஐயா அவர்களுக்கும் நன்றி அறிதலுடன் எனது நல்லாசியினை நிறைவு செய்து கொள்கிறேன்.

மோகன்,
இந்து கலாசார உத்தியோகத்தர்.

## விளம்பர அனுசரணை

பவிஸ் ஹாட்வெயர்
பிரதான வீதி,
தண்ணீரூற்று, முள்ளியவளை.

சோபனி ஜூவெல்லறி
உரிமையாளர்: இரத்தினம் ரவீந்திரன் (ரவி)
பிரதான வீதி, முள்ளியவளை.

விண்ணொளி மருந்து பால்மா அன் மெடிக்கிளினிக்
பிரதான வீதி, தண்ணீரூற்று, முள்ளியவளை.

செந்தில்குமரன் பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, தண்ணீரூற்று, முள்ளியவளை.

கோசலா புடவை மாளிகை
பிரதான வீதி,
தண்ணீரூற்று, முள்ளியவளை.

இனியநிலா உணவகம்
பிரதான வீதி, முள்ளியவளை.

ஞானவிநாயகர் ஸ்ரோர்ஸ்
தமிழ் மருந்துக்கடை,
தண்ணீரூற்று, முள்ளியவளை.

சுடர் மோட்டார் சைக்கிள் திருத்தகம் சுத்திகரிப்பு நிலையம்
பிரதான வீதி, தண்ணீரூற்று, முள்ளியவளை.

ராஜ் மோட்டோர்ஸ்
பிரதான வீதி,
முள்ளியவளை.

காயத்திரி வெதுப்பகம்
வற்றாப்பளை, முள்ளியவளை.

பிள்ளையார் வாணிபம்
பிரதான வீதி, முள்ளியவளை.

அம்பாள் களஞ்சியம்
பிரதான வீதி, முள்ளியவளை.

சுரேந்திரன் பல்பொருள் வாணிபம்
வற்றாப்பளை, முள்ளியவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபி குடும்பத்துடன் தப்பி வந்ததை அல்ஜீரிய அமைச்சகம் ஒப்புக் கொண்டது

லிபியாவில் புரட்சிப்படையினரின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் கடாபியின் மனைவி, மகள் மற்றும் மகன்கள் ஆகியோர் அல்ஜீரியா நாட்டுக்குத் தப்பி ஓடியுள்ளனர். இதனை அல்ஜீரிய அமைச்சகம் ஒப்புக் கொண்டுள்ளது. கடாபியின் மனைவி சபியா, மகள் ஆயிஷா மற்றும் மகன்கள் முகமது, ஹனிபயல் ஆகியோர் அல்ஜீரியாவுக்கு நேற்றுமுன்தினம் காலை தப்பி ஓடி வந்துள்ளனர் என்று அல்ஜீரியா அரசியல் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அல்ஜீரியத் தூதர் கூறுகையில்:

''அவர்கள் மனித நேய அடிப்படையில் வரவேற்கப்பட்டு உள்ளனர்'' என்றார்.



இதற்கிடையே லிபியாவில் கடாபி ராணுவத்தினர் கொன்று குவித்து புதைத்த ஆயிரக் கணக்கான நபர்கள் உள்ள 4 கல்லறைகளைக் கண்டு பிடித்துள்ளதாக புரட்சிப்படையினர் தெரிவித்தனர்.

கடாபி ஆதரவாளர்கள் உள்ள பகுதியைப் புரட்சியாளர்கள் தொடர்ந்து கைப்பற்றி உள்ளனர். லிபியாவுக்கு அருகில் துனிஷியா மற்றும் அல்ஜீரியா நாடுகள் உள்ளன. இதில் அல்ஜீரியாவுடன் கடாபி குடும்பத்தினருக்கு சுமூக உறவு உள்ளது. எனவே அவர்கள் அந்த நாட்டுக்குத் தப்பி ஓடி உள்ளனர்.

அவர்களது வருகையை அல்ஜீரியா அரசும் எதிர்க்கவில்லை. அவர்களுக்கு உரிய ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளது. கடாபி குடும்பத்தினர் நேற்றுமுன்தினம் லிபிய எல்லையைக் கடந்து அல்ஜீரியாவிற்குள் நுழைந் தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நிலச்சரிவில் சிக்கி உகண்டாவில் 50 பேர் பலி

உகண்டாவில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 50 பேர் பலியாகினர்.

ஆபிரிக்க நாடான உகண்டாவின் கிழக்குப்பகுதியில் கனமழை பெய்துவருகிறது. இந்த நிலையில் உகண்டாவின் புலாம் புலி மாவட்டம் மொபானோ கிராமத்தில் பெய்த கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி 50 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தால் பல வீடுகள் மண்க்குள் புதைந்து போனதாகவும், மீட்புப் பணியின் போது 22 பேரின் உடல்கள் மட்டும் மீட்கப்பட்டதாகவும் செஞ்சிலுவைச் சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் கூறினர். இதே போன்று வடகிழக்குப் பகுதிகளிலும் கனமழை பெய்துவருவதால், கிராமமே வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது.

# விசாரணையில் இஸ்லாமியப் பெண்கள் முகத்திரையை விலக்கிக் காட்ட வேண்டும்

## ஆஸ்திரேலியாவில் புதிய சட்டம் அறிமுகம்


சிட்னி, ஒக.31

பொலிஸார் கேட்டுக் கொண்டால் இஸ்லாமிய பெண்கள் தங்கள் முகத்திரையை விலக்கிக் காட்ட வேண்டும். இல்லையெனில் கைதாக வேண்டி வரும் என அவுஸ்திரலியாவில் புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி மற்றும் ஸ்பெயினின் சில பகுதிகளில் இஸ்லாமியப் பெண்கள் தங்கள் முகத்தை மூடும் பர்கா அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் இரு சக்கர வாகனங்களில் செல்பவர்களைக் கண்டறிய இஸ்லாமிய பெண்கள் தங்கள் முகத் திரையை விலக்கி பொலிஸாரிடம் காட்ட வேண்டும் என சட்டமியற்றப்பட்டது.

இந்தச் சட்டத்தை தற்போது விக்டோரியா மாகாணமும் பின்பற்றியுள்ளது. இதற்கான அதிகாரம் அம் மாகாண பொலிஸாரிடம் ஏற்கனவே இருந்த போதிலும் இனி இரு சக்கர வாகனங்களில் வரும் சந்தேகத்திற்குரிய நபர்களையும் இப்புதிய உத்தரவின் கீழ் விக்டோரியாப் பொலிஸார் விசாரிக்க முடியும்.



அரசுமுறைப்பயணமாக சிரியா வந்துள்ள ரஷ்ய அரசின் மூத்த பிரதிநிதி மிக்ஹெயில் போக்டோனோவ் (வலது), தலைநகர் டமாஸ்கஸில் அதிபர் பஷார் ஆசாத்தை சந்தித்துப் பேசினார்.

# திரிபோலி களஞ்சிய சாலையில் 53 சடலங்கள் கண்டுபிடிப்பு



திரிபோலி,ஒக.31

லிபியத் தலைநகர் திரிபோலியில் அமைந்துள்ள களஞ்சியசாலை ஒன்றிலிருந்து 53 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.லிபியத் தலைவர் மும்மர் கடாபியின் ஆதரவுப் படையினரால் இந்தக் கொலைகள் கடந்த வாரம் மேற்கொள்ளப் பட்டிருக்கலாம் எனப் பிரிட்டன் செய்திச் சேவை ஒன்று கூறுகின்றது.இந்தச் சடலங்கள் எரியூட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

லிபியாவின் அனைத்துப் பகுதிகளிலும் கிளர்ச் சியாளர்களின் ஆதிக்கம் மேலோங்கியுள்ள நிலையில், இது போன்ற சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

இதே வேளை லிபிய தலைநகர் திரிபோலியில் வாழும் மக்கள் பல்வேறு மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்நோக்கிவருவதாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.குறிப்பாக மின்சாரம், குடிநீர் போன்ற வசதிகள் இன்றி அந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்குள்ள வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், எரிபொருள்களைப் பெற்றுக் கொள்வதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை லிபிய மனிதாபமான நெருக் கடிகளுக்கு உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அனைத்து நாடுகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஐரீன் புயல் அடித்து ஓய்ந்திருக்கலாம்; சோதனையிலிருந்து நாம் மீளவில்லை

## புயலுக்குப் பின் ஒபாமா உரை

நியூயோர்க், ஒக.31

அமெரிக்காவை அச்சுறுத்திக் கொண்டிருந்த ஐரீன் புயல் அடித்து ஓய்ந்திருக்கலாம். ஆனால் அதனால் ஏற்பட்ட சேதங்களிலிருந்து மீள இன் னும் சில வாரங்கள் ஆகும் என் பதை நினைவில் வையுங்கள்; இயற்கை நமக்கு வைத்த. சோதனை இன்னும் முடிய வில்லை என்று அதிபர் பராக் ஒபாமா நாட்டு மக்களை எச்சரித்துள்ளார்.அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது;

இந்தப் புயல் பற்றி முன்கூட்டியே எச்சரிக்கை விடப்பட்டும் 21 பேர் உயிரிழந்துள்ளனர்; சுமார் ஏழாயிரம் கோடி டொலர் மதிப்புள்ள சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டிருப்பதாகப் பூர்வாங்க மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஏறத்தாழ 50 லட்சம் வீடுகளுக்கு மின்சார இணைப்புத் துண்டிக்கப்பட்டிருக்கிறது. தொலைபேசி உள்ளிட்ட தகவல் தொடர்புகளை உடனடியாக ஏற்படுத்தியாக வேண்டும்.

மழையால் சேதம் அடைந்துள்ள சாலைகளையும் பாலங்களையும் விரைவாகப் பழுது பார்க்க வேண்டும். ரயில் நிலையம், பஸ் நிலையம், விமான நிலையம் போன்றவற்றைச் சீர்படுத்தி விரைவில் சேவையைத் தொடங்க வேண்டும். கடைகளும் வர்த்தக நிறுவனங்களும் திறப்ப;நற்கு உதவியாக அடித்தளக் கட்டமைப்பு வேலைகளைச் செய்ய வேண்டும்.

வடக்கு கரோலினா, வர்ஜீனியா, பென்சில்வேனியா, நியூ ஜெர்சி, கனெக்டிகட், ஃபுளோரிடா ஆகிய மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அறுந்த மின் இணைப்புகளைப் பழுதுபார்த்து மீண்டும் இணைக்க வேண்டும். வளைந்த, ஒடிந்த மின்கம்பங்களை அகற்ற வேண்டும். பாலங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை ஆராய்ந்து அவற்றை கனரக வாகனப் பயன்பாட்டுக்கும் ஏற்ப தயார் செய்ய வேண்டும்.

நியூயோர்க் சுரங்கப் பாதைகளில் திங்கள்கிழமையே ஓரளவுக்கு வாகனப் போக்குவரத்து தொடங்கினாலும் தேங்கிய மழை நீராலும் கசடுகளாலும் வாகனங்களால் வேகமாகச் செல்ல முடியவில்லை.

புயலில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதால் விமானங்களின் சேவை அடியோடு ரத்து செய்யப்பட்டிருந்தது. இப் போது சேவை படிப்படியாகத் தொடங்கியிருப்பதால் விமான நிலையங்களிலும் விமானங்களிலும் நெரிசல் ஏற்பட்டு வருகிறது.

புயல் ஓய்ந்து மழை சற்றுக் குறைந்திருந்தாலும் பொது மக்கள் எச்சரிக்கை யுடனேயே எந்த வேலையையும் செய்ய வேண்டும் என்று அரசு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

புயல் வந்து தாக்கியபின் ஏற்பட்ட சேதங்களைப் பழுது பார்த்துச் சீரமைக்கும் வேலைகள் திட்டமிடப்பட்டு ஒருங்கிணைத்து நடத்தப்பட வேண்டும். புயலால் ஏற்பட்ட பாதிப்பு களிலிருந்து மீளும் வழிகளைக் கையாள வேண்டும். அரசு இப்போது இரண்டாவது கட்ட வேலைகளில் தீவிரம் காட்டி வருகிறது என்று உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜேனட் நபோலிதனோ தெரிவித்தார்.

நியூயோர்க் நகரின் தாழ்வான பகுதிகளிலிருந்து 30,000 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப் பட்டிருந்தனர். அவர்கள் புயல் ஓய்ந்து விட்டதால் தங்களுடைய பகுதிகளுக்குத் திரும்பத் தொடங்கி விட்டனர். நியூயோர்க் பங்குச் சந்தை வழக்கம்போலச் செயல் படும் என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன் நெருக்கடி நிலைப் பிரகடனமும் விலக்கிக் கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
31 ஒகஸ்ட் 2011 புதன்கிழமை

# சாட்டி ஏசியன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 31

வேலணை சாட்டி ஏசியன் மொபிரெல் அனுசரணையுடன் நடத்திய 10 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சாட்டி ஏசியன் சம்பியன் வென்றது.

இந்தச் சுற்றில் சாட்டி ஏசியன் வி.க , சரவணை நாகபூசணி வி.க, மண்கும்பான் நண்பர்கள் வி.க, செட்டிபுலம் ஐயனார் வி.க ஆகிய கழகங்கள் பங்கு கொண்டன.

இந்தத் தொடரில் சாட்டி ஏசியன்,மண்கும்பான் நண்பர்கள் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றன. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சாட்டி ஏசியன் மண்கும்பான் நண்பர்கள் அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நண்பர்கள் வி.க 10 ஓவர்கள் நிறைவில் 86 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்ளை இழந்தது . இதில் அதிகூடிய ஓட்டமாக குமார் 38 ஓட்டங்களைப் பெற்றார். சாட்டி ஏசியன் சார்பாக கஜானன் 3 விக்கெட்டுக்களையும், துஸ்யந்தன் ஒரு விக்கெட்டையும், ஜனகன் 2விக்கெட்டுக்களையும், விஜயராஜ் 2விக்கெட்டுக்களையும், தமது அணிக்காகப் பெற்றனர்.



தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சாட்டி ஏசியன் 87 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடியது. 7 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றுச் சம்பியனானது.

இதில்இரட்சநாதன் விஜயராஜ் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களை பெற்று ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். மண்கும்பான் சார்பில் குமார், றொக்சன், தினேஸ் ஆகி யோர் ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சிறந்த களத்தடுப்பாளராக மண்கும்பான் நண்பர்கள் அணியின் றொக்ஷன் தெரிவு செய்யப்பட்டார். (த-26)

# கைதடியில் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 31

அலெக்ஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக கைதடி வடக்கு நவ சனசமூக நிலையமும் நவசக்தி விளையாட்டுக் கழகமும் இணைந்து மின் ஒளியில் இடம்பெறும் கரப்பந்தாட்டச் சுற்றுபோட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

தென்மராட்சிப் பகுதிக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் 'ஏ' அணியை எதிர்த்து கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.

யாழ்.மாவட்ட ரீதியான அணிகள் பங்குபற்றும் ஆட்டங்களில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து அரியாலை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(த-23-288)

# கபடிப் போட்டி ஹொரணையில்

கல்வி அமைச்சினால் அகில இலங்கைப் பாடசாலைகளின் ஆண்கள், பெண்கள் அணிகளுக்கு இடையே நடத்தும் கபடிப் போட்டிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் ஹொரணை தக்சிலா மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் வட மாகாணப் பாடசாலைகளின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**ஆண்கள் பிரிவு**

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, வடமராட்சி தொண்டமானாறு வேலாயுதம் மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு:**

இளவாலை கன்னியார்மடம் மகாவித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், வவுனியா தெற்கு கணேஸ்வரா மகாவித்தியாலயம். (எ-86)

# அரையிறுதி ஆட்டம் சனியன்று

யாழ்ப்பாணம்,ஓக.31

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பி.எஸ். குமாரசாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டம் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும். (த-23)

# அரையிறுதி ஆட்டத்துக்கு யாழ். ஸ்ரார்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் பாடசாலைகள் விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான மாவட்ட ரீதியான ஹொக்கிச் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ். ஸ்ரார் விளையாட்டுக்கழகம் காலிறுதியாட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம் அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஓல்ட்கோள்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் யாழ்.ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் ஓல்ட்கோள்ட் விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது. (த-23)

# நெல்லியடியில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.31

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இன்ரர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டம் ஒன்று எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது.

(த-23)

# யாழ்.பல்கலைக்கழகத்தின் கிரிக்கெட் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் அழைக்கப்பட்டகழகங்களுக்கு இடையிலான 8 ஆவது மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரரின் ஆட்டம் இன்று காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

முதல் நாள் ஆட்டத்தில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல் கலைக் கழகத்தின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகஸ்தருமான என்.சுதேஸ்குமார் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைப்பார். (த-[illegible])

# முரசுமோட்டையில் வீரர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 31

கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் பரந்தன் மத்திய விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப்போட்டியில் வெற்றியீட்டிய முரசுமோட்டை விளைபூமி அணி வீரர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் பரந்தன் மத்தியவிளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி முரசுமோட்டை விளைபூமி அணி வெற்றிக்கேடயத்தினை சுவீகரித்துக் கொண்டது. இந்நிகழ்வையொட்டி வெற்றியீட்டிய வீரர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கோரக்கன் கட்டுகிராமத்தில் கமக்கார அமைப்பின் தலைவர் செல்வா தலைமையில் நடைபெற்றது. இதில் கண்டாவளை விளையாட்டு உத்தியோகத்தர் சிவநேசன், கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவர், கிளிநொச்சி மாவட்ட மீள்குடியேற்ற அமைச்சின் இணைப்பாளர் விக்ரர், தட்டுவன்கொட்டி பாடசாலை அதிபர் க.கருணானந்தன் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், முரசுமோட்டை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் யோகேஸ்வரன், சமாதான நீதிவான் வசந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(கு-6)

# இராமநாதபுரம் பாடசாலைக்கு உயரம் பாய்தல் உபகரணங்கள்

வலி.வடக்கு,ஓக.31

வடமாகாண ஆளுநரின் வடமாகாணப் பாடசாலை களின் விளையாட்டின் தரத்தை உயர்த்தும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு உயரம் பாய்தலுக்கான மெத்தை உட்பட ஏனைய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடந்த பல வருடங்களாக வன்னியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இந்தப் பாடசாலையில் பல நூற்றுக்கணக் [illegible] விளையாட்டு திறமைகளை வெளிக்கொண்டுவர முடியாத நிலைமை காணப்பட்டது.

கடந்த மாதத்தில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் இந்தப் பாடசாலை மாணவர்கள் மாகாண மட்டம் வரை சென்று வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

இந்தமுறை அவர்கள் தேசிய மட்டப் போட்டிகளிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிலையில் இந்தப் பாடசாலைக்கு உயரம் பாய்தலுக்கான உபகரணங்கள் வட மாகாணக் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

(த-86)

# மட்டக்களப்பு லீக் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.31

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இன்ரர லீக் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த வாரம் மட்டக்களப்பு வேபர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து அம்பாறை உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

இதில் மட்டக்களப்பு உதைபந்தாட்ட லீக் அணி 10:1 என்ற கோல் கணக்கில் அம்பாறை உதைபந்தாட்ட லீக் அணியை வெற்றி கொண்டது.


(த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டங்கள் இன்று ஆரம்பம்

இலங்கை - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் காலியில் இன்று ஆரம்பமாகவுள்ளது. இன்று காலை 10 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகவுள்ளது.





ஆஸ்திரேலிய அணி இரண்டு 'ரி-20' ஆட்டங்கள், 5 ஒரு நாள் ஆட்டங்கள் மற்றும் 3 டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்பதற்காக இலங்கை வந்துள்ளது. இதில் 'ரி-20' ஆட்டங்களை இலங்கை அணியும், ஒரு நாள் ஆட்டத்தை ஆஸ்திரேலிய அணியும் கைப்பற்றியுள்ளது. இந்த நிலையில் முதலாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகின்றது.

இதேவேளை இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான ஒரே ஒரு 'ரி-20' ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது. இலங்கை நேரப்படி இரவு 10.30 மணிக்கு இந்த ஆட்டம் மான்செஸ்டரில் இடம்பெறுகின்றது. இந்திய அணி முதலில் இடம்பெற்ற 4 டெஸ்ட் ஆட்டங்களிலும் படு தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (15)


# 'ஹட்றிக்' தங்கம்

தென் கொரியாவின் டேகு நகரில் நடைபெறும் உலகத் தடகள விளையாட்டுப் போட்டிகளில் குண்டு போடுதல் விளையாட்டு மகளிர் பிரிவில் தொடர்ந்து 3 ஆவது முறையாக தங்கம் வென்று நியூஸிலாந்து வீராங்கனை வலேரி அடம்ஸ் சாதனை புரிந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற குண்டு எறிதல் போட்டியின் கடைசி சுற்றில் 21.24 மீற்றர்கள் எறிந்து தனது சொந்த சாதனையில் அதிக தூரம் விட்டெறிந்த பெருமையையும் பெற்றார். மேலும் இந்தச் சாதனையை ஏற்படுத்தியதன் மூலம் முன்னாள் குண்டு போடுதல் சாதனை வீராங்கனைகளான கும்பர்னஸ் மற்றும் குந்தர் ஆகியோரின் 'ஹற்றிக்' சாதனையைச் சமன் செய்துள்ளார் வலேரி அடம்ஸ்.

உலகத் தடகள விளையாட்டுப் போட்டிகளில் நியூஸிலாந்து இது வரை 4 தங்கப் பதக்கங்களையே வென்றுள்ளது. இதில் 3 தங்கங்களை வென்றவர் வலேரி அடம்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

# பறிக்கப்பட்டது தங்கம்




உலகத் தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 110 மீற்றர் தடை ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற கியூபா வீரர் டாய்ரோன் ரோப் லஸ், மற்றொரு வீரரை இடித்து தள்ளியதை தொடர்ந்து அவரது பதக்கம் பறிக்கப்பட்டது. 13 ஆவது உலக தடகள சம்பியன் தொடர் போட்டி தென் கொரியாவில் உள்ள டேகுவில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்களுக்கான 110 மீற்றர் தடை ஓட்டத்தில் கியூபா வீரர் டாய்ரோன் ரோப்லஸ் (13.14 வினாடி) முதலிடத்தை பிடித்து தங்கப் பதக்கம் வென்றார். போட்டியின் கடைசி கட்டத்தில் அவர் தன்னுடன் ஓடிய சீனா வீரர் லியு ஷியாங்கை இடித்து தள்ளியதாக அந்த நாட்டு அதிகாரிகள் போட்டி தொழில்நுட்பக் குழுவிடம் முறைப்பாடு செய்தனர்.

இதை தொடர்ந்து ஓடுகள நடுவரிடம் கருத்து கேட்கப்பட்டது. அவர் டாய்ரோன் ஓடுகையில் பக்கத்தில் ஓடிய ஷியாங்கை இடித்துத் தள்ளியதை உறுதி செய்தார். இதனால் டாய்ரோனிடம் இருந்து தங்கப் பதக்கத்தை பறிக்க உத்தரவிடப்பட்டது.

இதனை எதிர்த்து கியூபா அதிகாரிகள் நடவடிக்கைக்கு தடை விதிக்க கோரும் மனுவை தாக்கல் செய்தனர். இதனை அடுத்து போட்டியின் போது எடுக்கப்பட்ட வீடியோவை போட்டுப் பார்த்த தொழில்நுட்பக் குழுவிடம் பதக்கம் பறிப்பு நடவடிக்கைக்கு தடை விதிக்க மறுத்ததுடன், மனுவை தள்ளுபடி செய்தனர்.

டாய்ரோனிடம் இருந்து பறிக்கப்பட்ட தங்கப்பதக்கம் 2 ஆவது வந்த அமெரிக்க வீரர் ஜாசன் ரிச்சர்ட்சனுக்கு (13.16 வினாடி) வழங்கப்பட்டது. 3 ஆவது இடம்பெற்ற சீன வீரர் லியு ஷியாங்குக்கு (13.27 வினாடி) வெள்ளிப்பதக்கமும், 4 ஆவது இடம் பெற்ற இங்கிலாந்து வீரர் ஆன்ட்ரூ டர்னருக்கு (13.44 வினாடி) வெண்கலப் பதக்கமும் வழங்கப்பட்டது. (15)

# மாந்திரீகம் வேண்டாம்

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் காயங்களுக்கு பாரம்பரிய மாந்திரீக ரீதியான சிகிச்சைகளை பெறுவதானால் இது குறித்து அணியின் மருத்துவ உத்தியோகஸ்தருக்கு முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உப்புல் தரங்க தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து குற்றச்சாட்டில் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

26 வயதான உப்புல் தரங்க உலகக் கிண்ணப் போட்டியின் போது தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தை பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு 3 மாத கால தடை விதிக்கப்பட்டிருந்தது. உப்புல் தரங்க குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் தான் காயத்திற்காக மாந்திரீக மருத்துவர் ஒருவரால் அளிக்கப்பட்ட மூலிகை மருந்தாகவே அதை பயன்படுத்தியதாக கூறியிருந்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய உடற்கூற்று மருத்துவரான ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்டீவ் மௌளன்ட் இது குறித்து ஆஸ்திரேலிய பத்திரிகையொன்றுக்கு தெரிவிக்கையில், ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரில் பங்குபற்றும் அனைத்து வீரர்களுக்கும் இந்த ஆபத்து குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இத்தகைய சிகிச்சைகளைப் பெற வீரர்களுக்கு முழுமையான தடை விதிக்கப்படவில்லை எனவும் ஆனால், அவர் அத்தகைய மருத்துவர்களிடம் செல்வதற்கு முன்னர் தனக்கு அறிவிக்க வேண்டும் எனவும் ஸ்டீவ் மௌளன்ட் கூறினார்.

ஆஸ்திரேலிய விளையாட்டு நிறுவகத்தில் பணியாற்றிய ஸ்டீவ்மௌளன்ட், இந்த மாதம் இலங்கை கிரிக்கெட் அணியின் உடற்கூற்று மருத்துவராக இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (15)



# விடைபெறும் கம்பீர்

காயம் முழுமையாக குணமடையாததால் இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இருந்து கௌதம் கம்பீர் விலகியுள்ளார். அவர் விரைவில் நாடு திரும்புகிறார்.

அவர் விளையாடாதது ஒரு நாள் போட்டியில் இந்தியாவுக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே சகீர்கான், யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், சேவாக் ஆகியோர் இங்கிலாந்து தொடரில் இருந்து காயம் காரணமாக பாதியிலேயே விலகிவிட்டனர். இப்போது கம்பீரும் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இங்கிலாந்துடனான 4 ஆவது டெஸ்ட் போட்டியில் பீற்றர்சன் அடித்த பந்தை கம்பீர் பிடிக்க முயன்றார். அப்போது அவருக்கு தலையில் அடிபட்டது. இதையடுத்து அவர் ஸ்கேன் பரிசோதனைக்குப் பின்னர் சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

காயம் ஏற்பட்டு 10 நாள்கள் கடந்த பின்னரும், அவர் காயத்தில் இருந்து முழுமையாக குணமாகவில்லை. போட்டியில் கலந்து கொள்ளும் அளவுக்கும் உடல்தகுதி பெறவில்லை. இன்னும் 3 முதல் 4 வாரங்கள் அவர் முழு ஓய்வில் இருக்க வேண்டுமென்று வைத்தியர்கள் அறிவுரை வழங்கியுள்ளனர். எனவே கம்பீர் போட்டியிலிருந்து விலகியுள்ளார். (15)



# காயம்தான் பிடி தவறியதற்கு காரணம்

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இந்தத் தொடரில் இந்திய அணியின் தலைவரும், விக்கெட் காப்பாளருமான டோனியின் விக்கெட் காப்பு மிகவும் மோசமாக உள்ளது.

அவரது கையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவரால் சிறந்த முறையில் விக்கெட் காப்பு செய்ய முடியவில்லை என்று இங்கிலாந்து முன்னாள் விக்கெட் காப்பாளர் போல் நிக்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

டோனியின் கையில் காயம் ஏற்பட்டதை பார்த்து இருக்கிறேன். இதனால் அவரால் சிறப்பாக விக்கெட் காப்பு செய்ய முடியவில்லை என்று நான் கருதுகிறேன். இதே கையுடன் அவர் சில அபாரமான பிடியெடுப்புக்களை எடுத்துள்ளார். ஓய்வு இல்லாமல் விளையாடியதால் அவருக்கு காயம் ஏற்பட்டதாக கருதவில்லை என்று தெரிவித்துள்ளார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனத்துக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

1. கணக்காளர் [பட்டதாரி]
2. லிகிதர் ஆண்/ பெண் [A/L சித்தி, கணித அறிவு உடையவர்]

[மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரும், யாழ். கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் கடமைபுரியக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்].

3. கனரக வாகனம் ஓட்டுநர்/ நடத்துநர்.
4. சொகுசு பஸ் ஓட்டுநர்/ நடத்துநர்.
5. கூலியாள் [வகுப்பு].

சுயவிவரக் கோவையுடன் இன்று (31.08.2011) புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நேரில் வரவும். (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்).

**ஈஸ்வரன் எக்ஸ்பிரஸ்**

115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 01 | | 06 |
| * | | * |
| 12 | | 08 |
| * | | * |
| 1950 | | 2011 |



அமரர்

**சேதுலிங்கம் சிவசுப்பிரமணியம்**

**(குஞ்சுதம்பி)**

கடந்த 06.08.2011 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து எமது இல்லம் நாடி வந்து அனுதாபம் தெரிவித்து உதவிக்கரம் நீட்டிய உற்றார், உறவினர், அயலவர்கள் நண்பர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டு தொலைபேசி, கடிதமூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளிலும் கலந்துகொண்டோருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (31.08.2011) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்)

கைதடி மேற்கு,
கைதடி.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

*செல்வி* **அபர்ணா சுரேஸ்**

(யாழ்/ சித்தி விநாயகர் வித்தியாலயம் 1 ஆம் ஆண்டு மாணவி)

வீ.எம். வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சுரேஸ் அபர்ணா நேற்று (30.08.2011) செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் சுரேஸ் (தவில் வித்துவான்) - பவஷர்நிதி தம்பதியரின் பாசமிகு மகளும், சுவர்ணாவின் (யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 6 ஆம் ஆண்டு) அன்புத் தங்கையும், செல்வராசா (ராமுமாமா), இந்திராணி, காலஞ்சென்ற V.K. விஜயமூர்த்தி (தவில் வித்துவான், கோண்டாவில்) - இராஜராஜேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (31.08.2011) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.சுரேஸ்
(தவில் வித்துவான்)

வீ.எம்.வீதி,
பருத்தித்துறை.

## சபைக் கூட்டங்களில் சுருக்கெழுத்தாளர்களுக்கு பதிலாக'லப்ரொப்'

தென்மராட்சி, ஓக.31

உள்ளூராட்சிச் சபை கூட்டங்களில் சுருக்கெழுத்தாளர்களுக்கு பதிலாக 'லப்டொப்' பயன்படுத்தப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் உள்ளூ ராட்சிச் சபைகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பதவியேற்றுள்ளனர்.

முன்னைய காலங்களில் கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சுருக்கெழுத்தாளர் மூலம் பதிவு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது சுருக்கெழுத்தாளர் பதவி ஒழிக்கப்பட்டு அந்தப் பதவியில் இருந்த உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைகளின் புதிய உறுப்பினர்களின் கூட்டச் செயற்பாடுகள் 'லப்டொப்' பயன்படுத்தப்பட்டு பதிவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-207)

## சங்கிலி அறுத்த திருடன் பிடிபட்டான்

தென்மராட்சி, ஓக.31

வீட்டில் இருந்த பெண்ணைத் தாக்கி 80ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிய திருடனை பொது மக்கள் துரத்திப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தில் இடம்பெற்றது.

இந்த நபரை நேற்று சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப் படுத்தினர்.

வழக்கினை விசாரித்த நீதிவான் மா.கணேசராசா இந்த நபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(எ)

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள், யாழ் பஸ் நிலையத்துக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள்(NGO) கல்வி நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு இல -

077 9213609, 071 8265663.

## யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு வீடு தேவை

நான்கு பேர் கொண்ட பண்பான சிறிய குடும்பம் ஒன்றுக்கு வாடகைக்கு ஒரு வீடு தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077-675-8233

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல கம்பனி ஒன்றில் பொருள்களை யாழ். குடா நாட்டில் விநயோகம் செய்வதற்கு விநியோக உதவியாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

T.P - 0773923036

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொதுப்பட்டமளிப்பு வைபவம்

பட்டமளிப்புவிழா நிகழ்வுகளை புகைப்படம் எடுப்பதற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 27 வது பொதுப் பட்டமளிப்பு வைபவம் 06.10.2011 ஆம் திகதி காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெறவுள்ளது. இந்த வைபவ நிகழ்வில் அண்ணளவாக 1700 புகைப்படங்கள் (4R அளவுள்ள வர்ணப் புகைப்படம்) எடுக்கவேண்டியுள்ளது. எனவே இதற்குரிய விலைக் கூற்றினை 12.09.2011 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ *பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தகுதி வாய்ந்த புகைப்படப்பிடிப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் பட்டமளிப்பு வைபவத்தினை புகைப்படம் பிடித்தல் என தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**பதிவாளர்**
யாழ். பல்கலைக்கழகம்
30.08.2011

(C/3373)

## மரண அறிவித்தல்

**நடராசா பத்மநாதன்**



புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கோயில்வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பத்மநாதன் நேற்று (30.08.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னலட்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நடராஜா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பவா, காஞ்சனா (பிரான்ஸ்), கோபால் (பிரான்ஸ்), சந்திரா (பிரான்ஸ்), ஜெயா (பிரான்ஸ்), கோதா ஆகியோரின் தந்தையும், சர்வலோகராஜா, தெய்வேந்திரா (பிரான்ஸ்), சுகந்தி (பிரான்ஸ்), செந்தமிழ்செல்வி (பிரான்ஸ்), சுகந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, பரலோகநாகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பொன்னையா மற்றும் அன்னபூரணம் காலஞ்சென்றவர்களான நாகராஜா, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சரணிகா (யா/வேம்படி மகளிர் கல்லூரி - உயிரியல் பிரிவு), சஜீவன் (யா/மத்திய கல்லூரி - கலைப்பிரிவு), சன்ஜேவன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), நிருத்திகா (லண்டன்) மற்றும் பிரான்சில் வசிப்பவர்களான ஆதித்தன், சேதுஜன், அபிலாஸ், அபிஷேக், விதுஷன், பிரதீசன், ஜெசாந், துசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*103/1, கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள்.

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உணவகம் ஒன்றுக்கு கீழ்க்காணும் வேலையாள்கள் தேவை. மூன்று நேர உணவு, தங்குமிடவசதி, மாதாந்தம் சம்பளம் வழங்கப்படும். இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1) காசாளர்
2) சிட்டை போடுபவர் (பில் கிளாக்)
3) உணவு பொதியிடுவோர்.
4) மரக்கறி நறுக்குநர்
5) பாதுகாப்பு உத்தியோகத்தர்
6) கழுவுதல் (கிளீனிங்) தொழிலாளர் (சுத்திகரிப்பாளர்)
7) உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்ஸ்)
8) முகாமையாளர்
9) அலுவலக உதவியாளர் (பெண்கள்)
10) குசினி வேலைகள் தெரிந்தவர்கள்

தொடர்பு
077 - 7917753

(7441)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவை வருமாறு: புனித குர்ஆனில் நபிகள் நாயகம் போதித்துள்ளபடி முஸ்லிம் மக்கள், ஒற்றுமையின் கூடிய நாட்டைப் போலவே சௌபாக்கியமான வாழ்க்கையை மேற்கொள்ள ஒன்றுதிரள வேண்டும். இலங்கையின் நீண்ட சரித்திரத்தை நோக்குவோமானால் முஸ்லிம் சமூகம் சகல இனத்தவருடனும் சகோதரத்துவத்துடன் வாழ்ந்ததை நாம் அறிவோம். இதற்காக அவர்கள் இஸ்லாம் போதித்த வழியைப் பின்பற்றுகின்றனர்.

இந்த நாட்டு முஸ்லிம் மக்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய பிரதேசங்களில் இன்று சுதந்திரமாக ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடுகின்றனர். சமாதானத்துக்காக மேற்கொண்ட அர்ப்பணிப்பை மனதிலிருத்தி இப்பெருநாளைக் கொண்டாடுகின்றனர் - என்றுள்ளது. (உ-சி)

## தண்டனையைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சபை கேட்டுக் கொள்கிறது - என்று கூறினார்.

இந்தத் தீர்மானத்தை குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீலுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் இந்தத் தீர்மானத்தை ஏற்றால் 3 பேரின் தூக்குத் தண்டனையும் இரத்தாகும் வாய்ப்புள்ளது.

முன்னதாக நேற்றுமுன்தினம் சட்டசபையில் பேசிய முதல்வர் ஜெயலலிதா, மூவரையும் காப்பாற்றும் அதிகாரம் தனக்கு இல்லை என்று கூறியிருந்தார். மேலும் இந்திய ஜனாதிபதி தான் அவர்களைக் காப்பாற்ற முடியும் என்றும் கூறியிருந்தார்.

இந்த நிலையில், தற்போது அதிரடியாக அவர் நிறைவேற்றியுள்ள தீர்மானம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மூவரினதும் விடுதலைக்காக கடுமையாகப் போராடி வருவோருக்கு ஜெயலலிதாவின் இந்த நகர்வு மீண்டும் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. (உ-சி)

## மூவரைத் தூக்கிலிட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும்பை மூத்த சட்டத்தரணிகள் மோகீத் சௌத்ரி, காலின் சால்வல்ஸ் ஆகியோர் முன்வந்து வாதாடினர். பல பிரபல சட்டத்தரணிகளும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்.

வைகோ, மற்றும் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் மற்றும் பல தமிழ் ஆர்வலர்களும் உயர் நீதிமன்றில் குழுமினர்.

மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், 8 வாரங்களுக்கு 3 பேரின் தூக்குத் தண்டனையை நிறைவேற்றக் கூடாது என உத்தரவிட்டது.

முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரைத் தூக்கிலிட 8 வாரங்கள் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து, இந்த உத்தரவை வேலூர் சிறை நிர்வாகத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### ஜெத்மலானி வாதம்

''ஒருவர் தாக்கல் செய்த கருணை மனு மீது முடிவெடுக்க 11 வருடங்கள், 4 மாத கால தாமதம் செய்யப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 21 வருடங்களை அவர் சிறையில் கழித்த நிலையில் நீ நாளை தூக்கில் தொங்க விடப்படப் போகிறாய் என்று கூறுவது மனிதாபிமானமே இல்லாதது'' என்று வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி நீதிமன்றில் தனது வாதத்தை முன்வைத்தார்.

தனது வாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கருணை மனு மீது தீர்ப்பளிக்க இவ்வளவு தாமதம் ஏன் எடுக்கப்பட்டது என்று கேட்டு நிச்சயம் மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பப்படவேண்டும். இது சாதாரண விடயம் இல்லை. அதிகாரிகள் அடிப்படையிலேயே தவறு செய்துள்ளனர். மத்திய உள்துறை அமைச்சகத்தின் பங்கு இதில் மிகவும் முக்கியமானது. அமைச்சு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

21 வருடங்கள் சிறையில் அடைபட்டிருப்பதே ஒருவருக்கு பெரும் மன உளைச்சலைக் கொடுக்கும். இந்த வழக்கில் மிகப் பெரிய உளைச்சலை சந்தித்த ஒருவரை தூக்கில் போடும் முடிவை அரை மணி நேரத்தில் எடுத்துள்ளனர். இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று வாதிட்டார் ராம்ஜெத்மலானி.

இதையடுத்து கருணை மனுவை நிராகரிக்க ஏன் இத்தனை தாமதம் என்று கேட்டு மத்திய அரசின் உள்துறை அமைச்சகம், தமிழக அரசு ஆகியவற்றுக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### கொண்டாட்டம்

நீதிமன்ற உத்தரவு வெளியானதும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெடிகொளுத்தியும் இனிப்புக்கள் பரிமாறியும் மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

வேலூர் சிறையின் முன்பாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் (மதிமுக) வெடி கொளுத்தி ஆரவாரம் செய்தனர். சிறைக்குச் சென்று மகன் பேரறிவாளனிடம் நீதிமன்ற முடிவைத் தெரிவித்துவிட்டு வந்த அற்புதம்மாள், மதிமுக ஆதரவாளர்களுக்கு இனிப்புக்களை வழங்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

### செத்துப் பிழைத்தேன்

தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டு தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து அற்புதம்மாள் தெரிவித்ததாவது:-

முதல்வரம்மா தூக்குத்தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்காங்க. நான் செத்துப் பொழச்சிருக்கேம்ப்பா. எனக்கு ஏற்பட்ட நிலைமை வேறு யாருக்கும் ஏற்படக்கூடாதுப்பா. அம்மாவோட தீர்மானத்த ஏத்துக்கிட்டு கவர்னர் தூக்குத் தண்டனையை ரத்து செய்வாருன்னு நம்புறேன். தூக்குத் தண்டையை ரத்து செய்ய போராடிய அனைவருக்கும் நான் நன்றி சொல்லிக்கிறேன்ப்பா - என்றார் அவர்.

### போராட்டம் ஓயாது

நீதிமன்ற உத்தரவை வரவேற்றுள்ள திராவிடர் கழகத் தலைவர் பழ. நெடுமாறன், மரணதண்டனையை முற்றிலும் ஒழிக்கும்வரை தொடர்ந்து போராட உறுதி பூணுவோம் என்று அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மூவரின் தண்டனை நிரந்தரமாக ரத்து செய்யப்படுவதற்கு முன்னோட்டமாக நீதிமன்ற உத்தரவு அமைந்திருக்கிறது.

தமிழக மக்களின் ஒன்றுபட்ட போராட்டமே இந்த விளைவுகளுக்குக் காரணம் என்பதை உணர்ந்து தொடர்ந்து மரண தண்டனையை அறவே ஒழிக்கும் வரை ஒன்றுபட்டுப் போராட உறுதி பூணுவோம் - என்றுள்ளது.

### காங்கிரஸ் எதிர்ப்பு

இதேவேளை, தண்டனைக்குறைப்புக்கு காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு கருணை காட்டுமாறு கோருவதற்கு காங்கிரஸ் கட்சி ஒன்றும் தி.மு.க. அல்ல என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அபஷேக் சிங்வி குறிப்பட்டார்.

''இந்திய அரசமைப்பின்படியான, சட்டப்பூர்வ மற்றும் நிர்வாக நடைமுறை. இதில் காங்கிரஸுக்கு எந்த வகையிலும் தொடர்பில்லை. எனவே, இது குறித்து நாங்கள் நிச்சயம் கருத்து தெரிவிக்க மாட்டோம்'' என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-தி)

## மரண அறிவித்தல்



### மாரிமுத்து சிதம்பரம்

தொண்டமானாறைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சிதம்பரம் நேற்று முன்தினம் (29.08.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் நேற்று (30.08.2011) செவ்வாய்க் கிழமை தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*39, கம்பஸ்லேன்,*
*திருநெல்வேலி.*

*தகவல்:*
கஜன் (பேரன்)

## அவசரகாலச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி வெளியிடப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறியவை வருமாறு:-

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் நாடாளுமன்றில் அறிவித்தார். ஜனாதிபதியால் இந்த அவசர அறிவிப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை.

பொதுமக்கள் பாதுகாப்பு என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி நாட்டின் 25 மாவட்டங்களிலும் முப்படையினரை எந்தச் சந்தர்ப்பத்திலும் கடமையில் ஈடுபடுத்துவதற்கான அதிகாரம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி வெளியிடப்படவுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ளது.

வர்த்தமானி அறிவிப்பு மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ள அதிகாரம் அவசரகாலச் சட்டத்திலுள்ள சட்டங்களை ஒத்ததாகவே அமையும். இந்த விதிகள் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பன நடைமுறையில் இருக்கும்போது அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டது என்று அறிவிப்பதில் பயன் ஏதுமில்லை.

புதிய வர்த்தமானி அறிவித்தலின்படி பொதுமக்கள் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மாணவர் போராட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆகியவற்றை அடக்குவதற்கான அதிகாரம் முப்படையினருக்கு வழங்கப்படும் சாத்தியமும், கைதுசெய்வதற்கான அதிகாரம் வழங்கப்படும் சந்தர்ப்பமும் காணப்படுகின்றன.

நாட்டில் அவசரகாலச் சட்டத்தை நீக்கி, ஜனநாயகம், நீதி மற்றும் சமாதானத்தை உறுதிசெய்ய அரசு தவறிவிட்டது என்பது இதன் மூலம் தெரிகின்றது.

மேற்படி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையில் காணப்படும் நிலையில், அவசரகாலச் சட்டத்தை நீக்கி விட்டதாகக் கூறுவதில் அர்த்தமில்லை- என்றார் (உ-சி)

## இரவு நேரப் பதற்றங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வாகனத்தின் சாரதி சிறுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர். தமிழராக இருந்த போதும் நன்கு சிங்களம் பேசக்கூடியவர் என்று மக்கள் கூறுகின்றனர். முதல் நாளே இரவு நேரத்தில் இவரை இந்தப் பகுதியில் கண்ட இளைஞர்கள் சிலர் இவ்வாறு தேவையற்று நடமாடவேண்டாம் என்று எச்சரித்தனர் என்றும் கூறப்படுகிறது.

எனினும் சம்பவதினம், இவருடன் வாகனத்தில் வந்தார்கள் என்று கூறப்படும் நபர்கள் ஊருக்குள் சென்றனர் என்று மக்கள் கூறுகின்றனர். அவர்கள் எங்கு சென்றார்கள் என்பது பற்றித் தகவல் இல்லை.

திங்கள் இரவு இந்த வாகனம் ஊருக்குள் நுழைந்ததும் அதனை மடக்க இளைஞர்கள் சிலர் மோட்டார் சைக்கிளில் துரத்தியுள்ளனர். அப்போது மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதித் தள்ளிவிட்டுத் தப்ப முயன்ற வாகனம் அவசரத்தில் பிரதான வீதிக்குச் செல்லும் ஒழுங்கை மாறி ஏறியதால் மேற்கொண்டு பயணிக்க முடியாது சிக்கிக் கொண்டதாக ஊரவர்கள் கூறினர்.

வாகனமும் சாரதியும் அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். நேற்றிரவு வரை வாகனம் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால், சாரதி விடுவிக்கப்பட்டார்.

வாகனத்தை மடக்கியபோது விசாரித்ததில் தான் கூலிக்கு வாகனம் ஓட்டும் ஒருவரே தவிர வேறு எதுவும் தனக்குத் தெரியாது என்று சாரதி தெரிவித்துள்ளார்.

''வாகனத்தில் இலக்கத்தகடுகள் தெளிவாக உள்ளன. அதனைக் கொண்டு விசாரணை நடத்தி வாகனம் யாருக்குச் சொந்தமானது, அதில் வந்தவர்கள் யார் என்பதைப் பொலிஸார் கண்டுபிடிக்க முடியாதா? ஏன் அவர்கள் மெத்தனமாக இருக்கிறார்கள்?'' என்று கேள்வி எழுப்பினார் ஊரவர் ஒருவர்.

அச்சுவேலிப் பொலிஸாருடன் இது குறித்துத் தொடர்பு கொண்டபோதும் உத்தியோகபூர்வமாகத் தகவல்கள் எதனையும் பெற முடியவில்லை.

இதற்கிடையே, அச்சுவேலி வடக்குப் பகுதியில் அடையாளம் தெரியாத நபர்கள் இருவரின் நடமாட்டம் காணப்பட்டதாக நேற்றிரவு பதற்றம் ஏற்பட்டது. மக்கள் ஒன்று திரண்டு அவர்களைப் பிடிக்க முயன்றபோதும் அச்சுவேலிவடக்குப் பகுதியில் கிழக்குப்புறமாக உள்ள வயல்வெளிகள் ஊடாக அவர்கள் ஓடி மறைந்தனர் என்று மக்கள் கூறுகின்றனர். (உ-11)

## விற்பனைக்கு

அன்ரனா பைப்பும், TVS மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு

தொடர்பு- 0212227730, 0778043181

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 | 31 |
| ★ | ★ |
| 07 | 08 |
| ★ | ★ |
| 1937 | 2010 |

### அமரர் சூசைப்பிள்ளை மரியதாஸ்

ஓராண்டு ஓடி மறைந்தனவே உங்கள்
பசுமையான நினைவும் இன்னும் மறையவில்லை
ஆண்டுகள் நீண்டாலும் உங்கள் நினைவும்
என்றும் எம் நினைவுகளுடன் இருக்கும்.

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வார்"

*என்றும் உங்கள் நினைவுகளுடன்:*
குடும்பத்தினர்.

*இல: 153, புதிய வீடமைப்புத் திட்டம்,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

(7446)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் காய்ச்சலினால் நேற்று பருத்தித்துறை சிறுமி மரணம்

டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தசிறுமி சிகிச்சை பயனளிக்காது நேற்று மரணமானார்.

வீ.எம்.றோட் பருத்தித்துறையைச் சேர்ந்த சுரேஸ் அபர்னா (வயது-6) என்ற சிறுமியே இவ்வாறு மரணமானவராவார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது-

கடந்த 19ஆம் திகதி குறித்த சிறுமி தனது குடும்பத்தவர்களுடன் கொழும்புக்குச் சென்று அங்கு பூப்புனித நீராட்டு விழா ஒன்றில் கலந்து கொண்டு விட்டு கடந்த 21ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு திரும்பியுள்ளார்.

கடந்த 25ஆம் திகதி குறித்த சிறுமி காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

ஆனாலும் காய்ச்சல் நின்றபாடில்லை. இதனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீண்டும் பருத்தித்துறை வைத்தியசலைக்குச் சென்றார். இரத்தம் பரிசோதிக்க வேண்டும் என்றும் அந்த வசதி வைத்தியசாலையில் இல்லை எனவும் குறித்த சிறுமியை திருப்பி அனுப்பியுள்ளனர்.

அன்றைய தினமே பருத்தித்துறையில் உள்ள தனியார் மருத்துவ நிலையம் ஒன்றில் குறித்த சிறுமி இரத்தப் பரிசோதனையை மேற்கொண்டார். அதன்போது சிறுமிக்கு டெங்கு நோய்க்கான அறிகுறி காணப்பட்டதனால் மறுநாள் திங்கட்கிழமை திரும்பவும் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் குறித்தசிறுமிநேற்று மரணமானார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-4)

## அரச தரப்பினர் பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஒக. 31

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபை மன்றத் தேர்தலில் யாழ்ப்பா ணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில்போட்டியிட்டு வெற்றியீட்டிய உறுப்பினர்கள் அனைவரும் நேற்றைய தினம் தாம் தெரிவு செய்யப்பட்ட சபைக்கான பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். (எ-236-323)

## காணாமல் போன சிறுமிகள் ஒருவர் நேற்று மீட்கப்பட்டா

### விசாரணைக்காக யாழ். பொலிஸ் நிலையத்

நேற்றுமுன்தினம் காணமல் போயுள்ள மூன்று சிறுமிகள் ஒருவர் நேற்று மீட்கப்பட்ட நிலையில் யாழ். பொலிஸ் நி யத்தில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தரம் 8இல் கல்வி பயி கனகலிங்கம் லக்ஷியா (வயது-13) என்ற சிறுமியே கண்டுபி கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி நேற்றுக் காலை கச்சேரிப் பகுதியில் றதை அடுத்து அந்த வீதியால் வந்த ஒரு பெண் தனிமை நின்ற சிறுமியிடம் விவரத்தை அறிந்து யாழ். பொலிஸ் நி யத்தில் சிறுமியை ஒப்படைத்துள்ளார்.

யாழ். பொலிஸார் மேற்கொண்ட விசாரணையை அடு சிறுமியின் வீட்டுக்கு நேற்று மாலை தகவல் தெரிவிக் பட்டது. அதன்பின் குறித்த சிறுமி தமது பிள்ளை தான் எ பெற்றோர்கள் உறுதி அளித்துள்ள நிலையில் யாழ். பொ நிலையத்தில் சிறுமி தடுத்து வைக் கப்பட்டுள்ளார்.

இன்று காலை குறித்த சிறுமியைப் பெற்றோரிடம் விடு பதாக யாழ். பொலிஸ் நிலையப் பொல்ஸார் தெரிவித்த குறித்த சிறுமியின் தந்தை தெரிவித்துள்ளார்.

(எ-3

## தெற்கில் இருந்து வரும் பயணிகள் பாதி

தென்னிலங்கையில் இருந்து வரும் பயணிகள் யாழ் ணத்திலுள்ள தங்குமிட விடுதிகளைத் தெரிவு செய்யும் பே கிறீஸ் மனிதர்களின் தாக்கம் இந்தப் பகுதியில் இருக்குமா பதைக் கேட்டறிந்த பின்பே தங்குமிட வசதிகளைத் தெ செய்கிறார்கள் என்று பயணிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தங்குமிட விடுதிகளைத் தெரிவு செ போது கிறீஸ் மனிதர்களின் தாக்கம் உள்ள இடமா என்பது தும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்..

விடுதியில் தண்ணீர் வசதி, மலசல கூட வசதி இருக்கின் எனக் கேட்டறிவதை விட கிறீஸ் மனிதர்களின் தாக்கம் இ குமா எனக் கேட்டறிவதிலேயே அதிக ஆர்வம் காட்டி வருகின்

(எ

## யாழ். நகரில்...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரார்த்தனையில் சில டசின் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

12 மாவட்டங்களில் இருந்து இந்தப் பிரார்த்தனைக்காக இந்து, கிறிஸ்தவ, பௌத்த மதத் தலைவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர். குடாநாட்டில் உள்ள பல மதத் தலைவர்களுக்கு இந்தப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போதும், அச்சம் காரணமாக அவர்கள் கலந்துகொள்ளவில்லை என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். நாவாந்துறையில் பொதுமக்கள் இராணுவத்தினரால் மிகமோசமாகத் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து நிலவும் அச்சமே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பிரார்த்தனையில் கலந்துகொண்டவர்களில் பலரும்கூட, பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அச்சம் காரணமாக தமது பெயர்களைப் போட்டு உரைகளை வெளியிடுவதையோ அல்லது ஒளிப்படங்களைப் பிரசுரிப்பதையோ தவிர்த்துக் கொள்ளுமாறு உதயன் செய்தியாளர்களைக் கேட்டுக் கொண்டனர்.

பிரார்த்தனையின் பின்னர் உரையாற்றிய பலரும், நாவாந்துறையில் இடம்பெற்ற சம்பவங்கள் போன்று இனிவரும் காலங்களில் இடம்பெறக்கூடாது; அத்தகைய சம்பவங்கள் இடம்பெறாது இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமது உரைகளில் தெரிவித்தனர்.

நாவாந்துறையில் உண்மையில் என்ன நடந்தது என்பது ஒளிப்படங்களாக, தெற்கில் இருந்து வந்திருந்தவர்களுக்கு போட்டுக் காட்டப்பட்டது.

நாவாந்துறையில் பாதிக்கப்பட்ட சிலரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். அவர்களில் ஒரிருவர், தமது அனுபவங்களை விவரித்தனர்.

பொதுமக்களுக்கு எதிராக சமீபகாலமாக நடைபெற்றுவரும் வன்முறைகளைக் கண்டித்து மேற்கொள்ளப்பட்ட முதலாவது பொது நிகழ்வாக இது இருக்கின்றது என்று நிழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (உ-4,14)

Personal Class
Spoken English And Grammar
A/L பரீட்சை எழுதியவர்கள் மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கும்
By: Mr.Ainkaran B.A (Hons) HN. Dip. in English
T.P: 077 9309740

## கைக்குழந்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா பஸ் நிலையத்தில் இருந்து செட்டிகுளம் நோக்கிப் புறப்படவிருந்த பஸ்ஸிலேயே குழந்தை மீட்கப்பட்டுள்ளது.

குழந்தையுடன் பஸ்ஸில் ஏறிய தாயார், அருகில் இருந்த பெண்ணிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு, ''கொஞ்ச நேரம் வைத்திருங்கள் தண்ணீர் குடித்துவிட்டு வந்துவிடுகிறேன்'' எனக் கூறிவிட்டுச் சென்றவர் அதன் பின்னர் வரவேயில்லை என்று பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்த பெண் தெரிவித்துள்ளார்.

தகவல் அறிந்து வந்த பொலிஸார் குழந்தையை மீட்டு மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

கடந்த சில மாதங்களில் மட்டும் இதுபோன்று அநாதரவாகக் கைவிடப்பட்ட மேலும் மூன்று குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ-10)


After A/L? CIMA-UK Per Level Rs.14,400 Engineering-USA 80% off BIT University of Colombo Per year Rs.20,000 Multimedia_USA 80% off
இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course>
772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
Government Schol.
MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction,Jaffna.
Diploma Courses.. Free Course fee* MsOffice, AutoCAD, Web Designing *Hardware *Accounting *DTP *English,
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Kids Courses
Free Course fee: BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL,

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
ENGLISH LANGUAGE COURSE
@ E-CITY
Starts on: 01.09.2011
Just In 5 Months
நடைபெறும் நிலையங்கள்

| Chankanai | Anaicoddai | Velanai |
|---|---|---|
| (பிரதான வீதி, சங்கானை) | (ஆனைக்கோட்டை) பூபதி வெதுப்பகம் அருகில் | (வேலணை) சுகி மெடி கிளினிக் |
| 7.00 A.M | 9.30 A.M | 11.00 A.M |
| 0777 364362, 021 2250055 | 0777 364362, 0777 393767, 021 2250055 | 077 4924166, 021 7913314 |

TALK SMART ENGLISH & FEEL BRILLIANT FUTURE
புதிய, நவீன தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் ஆங்கில மொழியினை குறுகிய காலத்தில் கற்பித்து சரளமாகப் பேச வைப்பதில் முன்னோடி நிறுவனம்.
"மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்"
Right Choice / மிகச் சரியான தெரிவு

## மரண அறிவித்தல்



### முத்துக்குமாரு சிவகணே

வல்வெட்டித்துறையைப் பிடமாகவும், பாரதிவீதி, நாய கட்டை வசிப்பிடமாகவும் கொ முத்துக்குமாரு சிவகணேஸ் (30.08.2011) செவ்வாய்க்கிழ காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக் தங்கரட்ணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென் களான அப்புக்குட்டி -அன்னம்மா தம்பதியரின் அன் மகனும், ஜெயராணி (ராசாத்தி) யின் அன்புக் கண காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், திருநாவுக சாந்தகுரு ஆகியோரின் அன்பு சகோதரனும். ராணி, செல்வ ராசா, காலஞ்சென்றவர்களான யோக யோகராணி, சுகிர்தராஜா (துரை) ஆகியோரின் மைத்துனரும், சறோஜா (பவுண்) சாந்தினி (அம்ம ஜெயக்குமார் (ஜேர்மனி) சிவகுமார் (சின்னான்) யோரின் அன்பு தந்தையும் ரூபன், விக்டர், குறு (ஜேர்மனி) தமிழரசி, தர்சிகா ஆகியோரின் அன்பு னும், மதீனா, நிரோஷன், கம்சிகாந், கஜானா, சாறு டிலைற்ரன்,டினோஜன், தருண், திஷாந்தன், விது நிவேதிகா டிலுக்ஷன், விதுஷிகா ஆகியோரின் பா பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை ந (31.08.2011) புதன்கிழமை காலை 9 மணிய அவரின் இல்லத்தில் நடைபெற்று வெற்றுடல் டக்கத்துக்காக கோப்பாய் கானான் சேமக்காலைக்கு துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், வினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவு

பாரதிவீதி, நாயன்மார்கட்டு. (7434)

தகவல்: குடும்பத்தினர்

வேலைவாய்ப்பு
DAMRO &Piyestra Furnitu
Authorized Agent for Kilinochchi & Mullaitivu Districts
கீழ்வரும் வேலைவாய்ப்புக்கு தகுதியானவர்களி சுயவிபரத்துடன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்
Sales Representative, Sales Assistant, Heavy/Light Vehicle Driver, Welder (Mal and Book Keeper (Female)
VINAYAGAR FURNITUR
A-9 Road, Kilinochchi.Tel.021-2285372, 0775227

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.08.201 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org